Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சிமெந்து (O.P.C) ராம்கோ சிமெந்து

முரசு - 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 மார்கழி 02 ஞாயிற்றுக்கிழமை (18.12.2011) பக்கங்கள் 16 ஓசை - 78



வில்லன் அல்ல

09

பத்து ரூபாவால் அதிகரிப்பு



04



அதிகரித்த உயிர்ப்பலி

12

வைரஸ் எச்சரிக்கை

11

facebook

# தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க விரும்பாத கூட்டமைப்பு



## சாடுகிறார் அமைச்சர் டக்ளஸ்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினையை தீராப் பிரச்சினையாக நீடிக்கச் செய்து, தொடர்ந்தும் தங்களது நாடாளுமன்ற நாற்காலிகளை தக்க வைத்துக்கொள்ளவே விரும்புகின்றார்கள் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகள் வேறு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் பிரச்சினைகள் வேறு, தமிழ் பேசும் மக்கள் ஐக்கிய இலங்கைக்குள் சமாதான சமவாழ்வும், சம உரிமை, சுதந்திரமும் பெற்று வாழ (15 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்முட்டிக்குள் ஆயுதங்கள் வைத்தாரென கைதான சந்தேக நபர் விடுதலையானார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.அளவெட்டி மீனாட்சி அம்மன் ஆலயத் தேர் முட்டிக்குள் ஆயுதங்களை மறைத்து வைத்தார் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட யாழ். அளவெட்டி மீனாட்சி அம்மன் ஆலய நிர்வாக சபை உறுப்பினர் நாகராஜா தியாகராஜன் நேற்று முன்தினம் யாழ். மேல் நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டார்.

கடந்த 2008 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதி யாழ். அளவெட்டி மீனாட்சி அம்மன் ஆலய தேர் முட்டிக்குள் ஆயுதங்களும் இராணுவச் சீருடைகளும் கண்டு பிடிக்கப்பட்டதையடுத்து குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் ஆலய நிர்வாக சபை உறுப்பினர் நாகராஜா தியாகராஜன் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டார்.

இவர் மீது குற்றப் புலனாய்வுப் (15 ஆம் பக்கம் பார்க்க)

# நாடாளுமன்றில் அறிக்கை வரவேற்கிறது ஐ.நா. சபை

(ஜெனீவா)

இலங்கை அரசாங்கம் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை நாடாளுமன்றில் சமர்ப்பித்து பகிரங்கப்படுத்தியுள்ளதை ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ மூன் வரவேற்றுள்ளார். நேற்று முன்தினமிரவு ஐ.நா. பொதுச் செயலரின் பேச்சாளர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும், நல்லிணக்கத்தை நோக்கிய முக்கியமான அடியெடுத்து வைப்பதற்கும் அவசியமான பொறுப்புக் கூறுதல் பற்றிய கவலைகளுக்கு பதிலளிப்பதற்கான தனது கடப்பாட்டை இலங்கை அரசாங்கம் முன்னோக்கி நகர்த்தும் என்று ஐ.நா. பொதுச்செயலர் நம்புகிறார் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின், அறிக்கையை, ஆய்வு செய்து வருவதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை தலைமையகத்தில் இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது, சபையின் பேச்சாளர் பர்ஹான் ஹக் இதனைத் தெரிவித்துள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையில் பொது மக்கள் இலக்கு வைத்து தாக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் அடுத்தக்கட்ட நடவடிக்கை என்ன என்பது குறித்தும் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்குப் பதில் வழங்கும் போதே, பர்ஹான் ஹக் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது இந்த அறிக்கை ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாவும், உத்தியோக பூர்வமாக தற்போதைக்கு எதனையும் கூற முடியாது எனவும் அவர் தெரிவித்தார். (15 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியிடம் பொதுமன்னிப்பு பொன்சேகா எதிர்க்க மாட்டாராம்


(கொழும்பு)

ஜனாதிபதியின் மன்னிப்புக்கென ஏதாவது தரப்பு முன்வைக்கும் யோசனையை தான் எதிர்க்கப் போவதில்லை என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஆனால், பொன்சேகாவோ அவரது குடும்ப அங்கத்தவர்களோ அது தொடர்பில் எவ்வித யோசனைகளையும் கோரிக்கைகளையும் முன்வைக்க மாட்டார்கள் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

பொன்சேகாவை பார்வையிட நேற்று சிறைச்சாலைக்குச் சென்ற திஸ்ஸ அத்தநாயக்க அவரை பார்த்துவிட்டு வெளியில் வந்து ஊடகங்களுக்கு இவ்வாறு கருத்து (15 ஆம் பக்கம் பார்க்க)

## அறிக்கையிலுள்ள விடயங்களுக்கு அரசாங்கம் பதிலளிக்க வேண்டும்



### சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்து

(கொழும்பு)

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் கண்டறியப்பட்டுள்ள விடயங்களுக்கு இலங்கை அரசாங்கம் பதிலளிக்க வேண்டுமென சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசிய பசுபிக் பிராந்திய பணிப்பாளர் சாம் சரீபி மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையில் பிரச்சினைகள் இருப்பதாக நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை ஒப்புக்கொண்டுள்ள போதும், போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான மோசமான குற்றங்கள் குறித்த சான்றுகளும் போர் தொடர்பான ஏனைய சட்டமீறல்களும் இந்த அறிக்கையில் (15 ஆம் பக்கம் பார்க்க)

## சிறியளவு பொதுமக்கள் பலி வேடிக்கை என்கிறது சனல் - 4

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் இறுதிக் கட்டப் போரின்போது சிறிய அளவு பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என தெரிவித்துள்ளமை வேடிக்கையான விடயம் என சனல் - 4 தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சனல் - 4 செய்தி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் ஐ.நா.வின் அறிக்கையை அது இணைத்து சில ஆதாரங்களையும் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையின் கொலைக்களங்கள் என்னும் ஆவணப்படத்தை தயாரித்த 'காலம் மக்ரே' இதில் பல விளக்கங்களைக் கொடுத்துள்ளார்.

(15 ஆம் பக்கம் பார்க்க)

## 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்தி வடக்கில் இராணுவத்தை அகற்றுங்கள்

### ஐ.தே.க. கோரிக்கை

(கொழும்பு)

13 ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துவதும் வடக்கிலிருந்து இராணுவத்தை விலக்குவதும் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்களாகும் என ஐ.தே.க.வின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க கூறியுள்ளார்.

இப்போது நாட்டில் யுத்தம் இல்லை. எனவே வடக்கில் இராணுவ பிரசன்னத்துக்கான தேவை எதுவுமில்லை. முழுமையான சிவில் நிர்வாகத்தை மீள ஏற்படுத்துவதை நாம் விரும்புகிறோம.

இது பல தசாப்தங்களாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு தம்மை வெளிப்படுத்த உதவும். முதலில் வடக்கு, கிழக்கு மக்களின் அடிப்படை உரிமைகள் வழங்கப்பட வேண்டும். அதன் பின் தேசிய பிரச்சினையின் ஏனைய சிக்கல்கள் குறித்து ஆராயலாம் என அவர் தெரிவித்தார். (15 ஆம் பக்கம் பார்க்க)

# கடத்தப்பட்டவர்களை விடுவிக்குமாறு யாழ். நகரப் பகுதியில் ஆர்ப்பாட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மனிதவுரிமைகள் தினமான கடந்த 10 ஆம் திகதி கடத்தப்பட்ட மக்கள் போராட்ட அமைப்பு உறுப்பினர்களான லலித் குமார் வீரராஜ் மற்றும் முருகநாதன் குகன் ஆகியோரை விடுவிக்கக் கோரி நேற்று யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் குமார தலைமையில் நேற்று நண்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் முந்நூறுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு (15 ஆம் பக்கம் பார்க்க)

# முல்லை. பாண்டியன்குளத்தில் காணி தொடர்பான செயலமர்வு



முல்லைத்தீவு, பாண்டியன் குளம் பிரதேச செயலகத்திற்குட் பட்ட பகுதியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட கிராமங்களை சேர்ந்த மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களின் பிரதிநிதிகளுக்கு காணி விடயங்கள் தொடர்பான செயலமர்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

பாண்டியன்குளம் பிரதேச செயலக கேட்போர்கூடத்தில் நடைபெற்ற இச்செயலமர்வு மனித உரிமைகள் இல்லத்தின் வவுனியா அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

மக்கள் எதிர்நோக்கும் காணிப் பிரச்சினைகள், அதற்கான தீர்வுகள் தற்போதைய காணிச் சட்டங்கள தொடர்பாக இதன்போது விளக்கமளிக்கப்பட்டது. மீள்குடியேறிய மக்கள் எதிர்நோக்கும் காணி பிரச்சினைகள் தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டது.

இச்செயலமர்வின் வளவாளராக கலந்துகொண்ட வவுனியா பிரதேச செயலகத்தின் குடியேற்ற உத்தியோகஸ்தர் க.வசந்தன் மக்களது காணி விடயங்களுக்கு எவ்வாறான தீர்வை பெறுவது மற்றும் சட்ட ரீதியான அங்கீகாரம் பெறல் தொடர்பாகவும் விளக்கமளித்தார்.

## அனைத்துலக எம்.ஜி.ஆர். பேரவை நடாத்தும் முப்பெரும் விழா



முன்னாள் தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் 24 ஆம் ஆண்டு நினைவுநாளும் பொன். மதிமுகராசா அவர்களின் 13 ஆம் ஆண்டு நினைவு நாள் மற்றும் சுனாமி அனர்த்தத்தின் 7 ஆம் ஆண்டு நினைவுநாள் முப்பெரும் விழா.

**இடம் :- கொக்குவில் சிவசுப் பிரமணிய சுவாமி ஆலய முன்றல்**
**காலம் :- 26.12.2011 திங்கட்கிழமை**
**நேரம் :- மாலை 4.30**
**ஊடக அனுசரணை தினமுரசு**

## அருள்ஞான ஜோதிடம்

அருள் ஞானத்தால் கூறப்படும் ஜாதகங்கள் என்றுமே பிழைத்ததில்லை. நடந்தது, நடப்பது, நடக்கப்போவது இவற்றுடன் எனது அருள் ஞான ஜாதகக் கணிப்பினால் மை வெளிச்சம் போல் உங்கள் வாழ்க்கையைத் தெரிந்துகொள்ளலாம். அத்துடன் ஒருவர் என்னிடம் 4 ஜாதகங்களுக்கு மேல் கணிப்பு செய்து எடுத்தால் Gem Cooperation உத்தரவாதக் கடிதத்துடன் அவர்களுக்கு அதிஷ்டம் தரக்கூடிய அதிஷ்டக் கல்லை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம். தேசப்பந்து, பேராசிரியர். P.K.சாமி J.P.ஐயா. ஸ்ரீ துர்க்காதேவி அருள் சக்தி இல்லம், இல. 23, மேபீல்ட் வீதி, கொழும்பு - 13. 011234263/64. (வீண் அலைச்சலை தவிர்க்க முன கூட்டியே அறிவித்து, அந்த நேரத்தில் மாத்திரம் வரவும். (C/1102)

## நஞ்சருந்தியவர் வைத்தியசாலையில்

(தென்மராட்சி)

குடும்பஸ்தர் ஒருவர் நஞ்சருந்திய நிலையில் சாவகச்சேரி வைததியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 9.45 மணியளவில் இடம பெற்றது. கொடிகாமம் கச்சாய் தெற்கு பகுதியைச் சேர்ந்த கந்தசுவாமி சுதாகரன் (வயது - 32) என்பவரே இவ்வாறு அனுமதிக்கப் பட்டுள்ளவராவார்.

தனியார் பாதுகாப்பு ஊழியராக இருந்த மேற்படி நபர், குடும்பப் பிரச சினை காரணமாக நஞ்சருந்தித் தற்கொலை செய்ய முயன்றதாகத தெரிவிக்கப்படுகிறது. தற்போது இவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (140)

# விசமிகளால் திறக்கப்பட்ட நெடுந்தீவு குள வான்கதவுகள்

## நன்னீருடன் உவர் நீர் கலப்பு

நெடுந்தீவு பனங்காட்டுப் பிரதேசத்தில் புதிதாக அமைக்கப்பட்ட குளதின் வான் கதவுகள் சில விஷமிகளால் திறந்துவிடப்பட்டதால் அப்பிரதேச மக்கள் பெரும் அசௌகரியங்களுக்குக்குள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக இப்பிரதேச மக்கள் நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் றெக்சியனிடம் முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இவ்வான் கதவுகள் திறந்துவிடப்பட்டதால் நன்னீருடன் உவர் நீர் கலந்து நன்னீரைப் பெற்றுக்கொள்ளமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.(85)

# காலாவதியான விளம்பரங்கள் ஏமாறும் பொதுமக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டச் செயலகம், மாநகராட்சி மன்றம், பல்கலைக்கழகம் மற்றும் அரச நிறுவனங்களின் விளம்பர பலகைகளில் காணப்படும் அரசாங்கத்தினதும் ஏனைய பொது நிறுவனங்களின் விளம்பரங்கள் யாவும் காலாவதியானதாகக் காணப்படுகின்றன.

குறித்த விளம்பரப்பலகையில் காணப்படும் விளம்பரங்களைப் பொதுமக்கள் பார்வையிட்ட பின் அதன் முடிவுத் திகதி ஒக்டோபர், நவம்பர் மாதத்துடன் முடிவடைந்துள்ளதைக் கவனித்த பின்னர் இவ் விளம்பரத்தைப் பார்த்து நேரத்தை வீணடித்துவிட்டதாகத் தெரிவிக்கின்றனர்.

இவ்விளம்பரங்களில் ஏல விற்பனை, தொழில் வாய்ப்புக்கள் மற்றும் பொது அறிவிப்புக்கள் காணப்படுகின்றன. இவை அனைத்தும் காலம் கடந்த அறிவிப்புக்களாகும். இவ் விளம்பரங்களினால் மக்களுக்கு எவ்வித பிரயோசனமும் இல்லையென மக்கள் ஆதங்கப்படுகின்றனர். (105)

## யாழிற்கு மாற்றம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண விவசாயத் திணைக்களம் யாழ். மாவட்டத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாக வடமாகாண விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் சிவகுமார் தெரிவித்தார்.

கடந்தகாலங்களில் கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கிவந்த வடமாகாண விவசாயத் திணைக்களத்தை யாழ்ப்பாணத்திற்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் நடைபெற்று வந்த நிலையில் இன்று முதல் விவசாயத் திணைக்களத்தின் அனைத்து செயற்பாடுகளும் யாழ். மாவட்டத்தில் நடைபெறும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (எஸ்)

## ஒசுசல கிளை நாளை திறப்பு

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபன விற்பனை நிலையம் "ஒசுசல" யாழ்ப்பாணத்தில் கிளை ஒன்றினைத் திறக்கவுள்ளது. நாளை திங்கட்கிழமை கே.கே.எஸ். வீதியில இவ்விற்பனை நிலையம் திறந்து வைக்கப்படும். இதன் மூலம் தரமான மருந்து வகைகள் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள முடியும். "ஒசுசல" அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (54)

# மரண அறிவித்தல்



## திரு.த.நா.போஜன்.ச.நீ

**(உதவிப் பிரதம சாரண ஆணையாளர், இலங்கை சாரணர் சங்கம்)**

இலங்கை முதலுதவிச் சங்க பிரதம ஆணையாளர், ஓய்வுபெற்ற சேமநலவிருத்தி உத்தியோகத்தர், விற்பனைப் பகுதிப் பொறுப்பாளர், (காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபனம்), சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் மாவட்ட ஆணையாளர்.

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும், இல.17, முதலியார் கனகசபை வீதி, மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட திரு.த.நா.போஜன் அவர்கள் 16.12.2011 வெள்ளிக்கிழமை அன்று காலமாகிவிட்டார். அன்னார், அமரர் நாகேந்திரம் - சீதாலட்சுமி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், இளவாலை வடக்கு அமரர்கள் அப்புத்துரை - வேதநாயகி தம்பதிகளின் மருமகனும், அமரர் அர்த்தநாரீஸ்வரியின் அன்புக் கணவரும், அமர்களான ரேணுகா, உபாசனன், சன்னுாகா, பிரசன்னா மற்றும் உல்லாசனன் (ஆசிரியர், யாழ். மத்தியகல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுரேகா (முகாமைத்துவ உதவியாளர், வலிகாமம் வலயம்) அவர்களின் மாமனாரும், மாதுமையின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.12.2011 ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் மானிப்பாயிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்**
**திரு.போ.உல்லாசனன் (மகன்)**

**17, கனகசபை வீதி, மானிப்பாய்.**

(C/138)

**உறவு, செல்வம், இளமை, இவை அனைத்தையும் காலன் ஒரு கணத்தில் விழுங்கி விடுவதால் பொய்யானவற்றைத் துறந்துவிடு இறைவனை முழுமையாக நம்பி அவனது சிந்தனையில் மூழ்கிவிடு.**

**- ஆதிசங்கர்**

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## தீயவை தீய பயத்தலால், விலக்குவோம்!

தங்களுக்கு நன்மை பயக்கப் போவதில்லை என்று தெரிந்தும் உணர்ச்சிவசப்பட்ட கருத்துக்களின் பின்னால் மனிதர்கள் செல்வது ஏன்? மக்களைக் காக்கக் கூடிய தர்மம் எதுவோ அதை எப்போதும் சூது கவ்வியபடி இருப்பதும், முடிவில் தர்மம் வெல்லும் என்ற எதிர்பார்ப்பும் இலேசில் நடைபெறாதிருப்பதும் எதனால்? கெட்டவற்றைப் போற்றும் மனோபாவமும் நல்லவற்றை உதாசீனம் செய்யும் போக்கும் அறியாமையினால் வருவதா? அல்லது நம் இயல்பில் உள்ள ஒன்றா?

இதுபற்றிய ஆய்வு பிரபல அமெரிக்கப் பல்கலைக்கழகத்தில் ஒரு குழுவினரால் மேற்கொள்ளப்பட்டிருப்பது தெரியவருகிறது. காலங்காலமாகச் சரித்திரத்தில் நல்ல சக்திகள், தீய சக்திகள் இடையே போராட்டம் நிகழ்ந்துள்ளன. நாடுகள் இடையே இனம், சாதி, மொழி, மதம், நிறம், பொருளாதாரம் போன்ற காரணங்களுக்காகப் போராட்டங்கள் வெடித்துள்ளன.

தனி மனிதனிடம் வன்முறை, அகிம்சை ஆகிய இரண்டு குணங்களும் உண்டு. அந்த இரண்டுக்குமிடையிலான போராட்டம் ஒவ்வொருவர் மனதிலும் எப்போதும் நிகழ்ந்தபடியிருக்கிறது.

அந்த அமெரிக்கப் பல்கலைக்கழக ஆய்வில், கெட்ட நிகழ்வுகள் நம்மை அதிகம் பாதிக்கிறது. ஆனால், நல்லவற்றை அவ்வளவு நாம் ஆதரிப்பதில்லை என்று தெரியவந்துள்ளது. நன்மைகள் நடக்கின்றன. அவை நல்லவற்றைப் போற்றுபவர்களுக்கு மட்டும் ஆறுதலளிக்கிறது. ஆனால் தீயவை, நன்மைகள் தீமைகள் மட்டுமன்றி, நல்லவர்கள் கொடியவர்கள் எல்லோரையும் பாதிக்கிறது. "தீயவை தீய பயத்தலால் தீயவை தீயினும் அஞ்சப்படும்" என்பது வள்ளுவர் காலத்திலேயே அறியப்பட்டதுதான்!

தீயவை, நல்லவை எவ்வாறு நிர்வாகத்தைப் பாதிக்கிறது என்றால், ஒரு தீய குணம் படைத்த, லஞ்சத்தில் உழலும் அதிகாரியால் அந்த நிர்வாகமே குலையும். எவ்வாறு ஒரு பழக்கூடையில் ஓர் அழுகின பழம் ஒட்டுமொத்தமாக எல்லாவற்றையும் கெடுத்துவிடுமோ அதுபோல, நிர்வாகச் சீர்கேட்டிற்கு அந்த ஒரேயொரு ஊழல் அதிகாரி போதும். கெட்டுப்போன பழத்தை உடனே தூக்கி எறிவதுபோல திறமையற்றவர்கள், சுயநலவாதிகளை உடனே களையெடுத்தால்தான் நிர்வாகம் சீராக இயங்கும் என்று அந்த ஆய்வு முடிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எந்த ஒரு நபர் தன்னை முதலில் இருத்தி சக ஊழியர்களைப் புறக்கணிக்கிறாரோ, எவர் சுயநலத்துக்காகத் துறையின் நன்மையையும் வளர்ச்சியையும் அவமதிக்கிறாரோ அத்தகையவரை உடனே நீக்க வேண்டும். எவ்வளவு நல்ல திறமைசாலிகள் இருந்தாலும் ஒரு சுயநலக்காரர் நிறைவான பணிச் சூழலைக் கெடுத்துவிடுவார். இத்தகைய களையெடுப்பைத் திறம்படச் செய்த ஓர் அமெரிக்க நிறுவனம், திறமையாளர்கள் பிரகாசிக்கும் சூழலை உருவாக்கியதற்கான பரிசைப் பெற்றது என்றும் தெரியவருகிறது.

"முதலில் என் சொந்த வேலை, பின்பு உன்னுடையது, நேரம் இருந்தால் அலுவலகப் பணி" என்று அரச அலுவலகங்களில் வேலை செய்வோர் விளையாட்டாகக் கூறுவதுண்டு! இந்த நிலை எல்லா பொதுச்சேவையில் இருப்பவர்களுக்கும் பொருந்தும் என்பதைத் தனியாகச் சொல்ல வேண்டியதில்லை.

குறிப்பாக அரசியலில் ஈடுபடுவோர் சுயநலத்தை முதலில் வைத்தும், சாதாரண மக்களின் கஷ்டங்களை தங்களுக்கு மூலதனமாக்கிக் கொண்டும் செயற்படுவார்களானால், அந்த நாடே மீளமுடியாப் படுகுழிக்குள்தான் வீழ்ந்துகிடக்க நேரிடும்.

தமக்குக் கிடைக்கப்போகும் அரசியல் லாபத்துக்காக, மக்கள் அவலங்களைத் தொடர்ந்தும் சந்திக்க வேண்டும் என்றும், மக்களின் தேவைகள் எவையும் பூர்த்தியாகி விடக்கூடாது என்றும், அரசியல் தீர்வின்றி அவர்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்றும் விரும்புகின்ற ஒருசாரார் இருப்பது ஒட்டுமொத்த சமூகத்தையும் எந்த நிலையில் மீளவிடாமல் அழுந்த வைத்திருக்கும் என்பதை நாம் பல வருடங்களாகப் பார்த்து வருகிறோம்.

இவர்களை மக்கள் புரிந்துகொண்டு விலக்காமல், இந்த நாட்டில் நல்லதொரு சூழலுக்குள் சுபிட்ச வாழ்விற்குள் எமது மக்கள் காலடி எடுத்துவைக்க முடியாது. தீயதை அறிந்து விலக்காமல் தீமைகளிலிருந்து தவிர்ந்து கொள்வது சாத்தியமில்லை.

**- ஆசிரியர்**

# பெற்றோரை இழந்த பிள்ளைகளின் நலன் பேணுவதற்கான நிகழ்ச்சித்திட்டம்

## தேசிய மொழிகள் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறைப் பிரதேசத்தில் யுத்தத்தால் பெற்றோரை இழந்த 300 பிள்ளைகளை ஒன்றிணைத்து "நாம் அனைவரும் எதிர்காலத்தை பொறுப்பேற்கும் இலங்கை தேச பிள்ளைகள் ஆவோம்" எனும் தலைப்பின் கீழ் பல்வேறுபட்ட நிகழ்ச்சிகள் மற்றும் ஆலோசனை நிகழ்ச்சிகளை நடத்துவதன் மூலம் இப்பிள்ளைகளுக்கிடையில் நல்லுறவை ஏற்படுத்தி, இவர் களின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டிருக்கின்றது. மேற்படி விசேட நிகழ்ச்சி இன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் கௌரவ அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, வடக்கு, மாகாண ஆளுநர், அமைச்சர்கள் மற்றும் அமைச்சின் அதிகாரிகள் பங்குபற்றவுள்ளனர். அத்துடன் மாலை 3.00 மணிக்கு "ஜனநாயக தோழமையின் சுந்தரத்தன்மை" எனும் தலைப்பில் மகிந்த சந்திரசேகரவின் உரையும் சிங்கள, தமிழ் சகோதரத்துவத்தைக் கட்டியெழுப்புதல் பற்றிய இசை நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளது.

## விடுதி திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

பீனிஸ் செஞ்சிலுவைச் சங்கத்தினால் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கட்டி முடிக்கப்பட்ட ஆண், பெண்களுக்கான விடுதி மற்றும் வைத்தியருக்கான தங்குமிட கட்டடத் திறப்பு விழா நாளை பி.ப 4.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க தலைமையக தலைவர், செயலாளர் மற்றும் பீனிஸ் செஞ்சிலுவைச் சங்க செயலாளர் நாயகம், அரசாங்க பொறுப்பதிகாரிகள் எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வுக்கான முன்னாயத்தங்களை இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளை மேற்கொண்டு வருகின்றது. (எப்.எஸ்)

## பதிவுகளை மேற்கொண்டபின் கட்டடங்களை அமைக்க வேண்டும்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் அனுமதியின்றி சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கட்டடங்கள் கட்டுதல், திருத்தங்கள் செய்தல் மற்றும் வீதியோர எல்லைச்சுவர் போன்றவற்றை அமைத்தல் என்பன வீடமைப்பு நகர சீர்திருத்த கட்டளைச் சட்டம், பிரிவு 268 இன் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும் என புதுக் குடியிருப்புப் பிரதேச சபைச் செயலாளர் சி.அ.ஆனந்தகுமார் தெரிவித்துள்ளார்.

எனவே பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் மேற்குறிப்பிட்ட வேலைகளை முன்னெடுக்க விரும்புவோர், பிரதேச சபையில் இருந்து வழங்கப்படும் படிவத்தின் மூலமாக விண்ணப்பம் செய்து தங்கள் வேலைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (138)

## 'கிட்ஸ்பாக்' கலைவிழாவும் வழியனுப்புதல் வைபவமும்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் 'கிட்ஸ்பாக்' மழலைகள் கல்விப் பூங்காவின் ஆண்டிறுதிக் கலை விழாவும் முன்பள்ளி மாணவர்களின் வழியனுப்பல் வைபவமும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 2.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

உரும்பிராய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ள இவ்வைபவத்திற்கு யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் எஸ்.பஞ்சலிங்கம் தலைமை தாங்கவுள்ளார்.

வைத்திய கலாநிதி பி. லக்ஷ்மன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். ஆசிரியர்கள், பெற்றோர்களாலும், மாணவர்கள் கௌரவிக்கப்படுவதுடன் அடுத்த வருடம் முதலாம் தரத்தில் சேரவுள்ள மாணவர்கள் வழியனுப்பும் வைபவமும் மழலைகளின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது. (120)

## தெல்லிப்பளை ப.நோ.கூ.ச.ஊழியர்களுக்கு நான்கு மாதம் வழங்கப்படாத சம்பளம்

(அளவெட்டி)

தெல்லிப்பளை ப.நோ.கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு 4 மாதங்களாக சம்பளம் வழங்கப்படாமையால் வாழ்வாதார ரீதியாக பல சிரமங்களுக்குள்ளாவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த ப.நோ.கூட்டுறவுச் சங்கம் நட்டத்தில் இயங்குகின்றமையாலே தமக்கான சம்பளத்தை வழங்க முடியாது இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்ற நிலையில் சம்பளம் வழங்குவதில் ஏற்பட்டுள்ள பிரச்சினை காரணமாக சில ஊழியர்கள் தமது பதவிகளிலிருந்து இளைப்பாறும் வயதெல்லையை அடைய முன்பே ஓய்வு பெற்றுச் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை காலமும் நல்ல முறையில் இலாபத்தோடு சிறப்பாக இயங்கி வந்த இச்சங்கம் சில வருடங்கள் நட்டத்தில் இயங்கிவருகிறது. என உழியர்கள் தெரிவிக்கின்றனர். (93)

## பிரதம பரீட்சகர்களுக்கான -அறிவுறுத்தற் கூட்டம்-

(யாழ்ப்பாணம்)

நடைபெற்றுக் கொண்டிருக்கும் க.பொ.த (சா/த) பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீடு செய்யும் பிரதம கட்டுப்பாட்டுப் பரீட்சகர்கள், பிரதம பரீட்சகர்களிற்கான அறிவுறுத்தல் கூட்டம், நடைபெறவுள்ளதாகப் பரீட்சை ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க அறிவித்துள்ளார்.

இக்கூட்டம், கொழும்பு றோயல் கல்லூரியில் அமைந்துள்ள கேட்போர் கூடத்தில் இம் மாதம் 22, 23 ஆம் திகதிகளில் காலை 9.00 மணி முதல் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு, பௌத்த சமயம், சைவநெறி, கத்தோலிக்கம், கிறிஸ்தவம், இஸ்லாம், சிங்களமொழியும் இலக்கியமும்,தமிழ்மொழி யும் இலக்கியமும், வரலாறு, விஞ்ஞானம் ஆகிய பாடங்களிற்கு பிரதம பரீட்சகர்கள், பிரதம கட்டுப்பாட்டுப் பரீட்சகர்களாகக் கடமையாற்றவுள்ள உத்தியோகத்தர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களிற்கான அழைப்புக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (06)

## வீடுகள் கையளிப்பு தொடரும் மீள் குடியமர்வு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுப் பகுதியில் இருபது வருடங்களாக பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டிலும் பாவனையிலும் இருந்து வந்த வீடுகள் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

புனித சம்பேதுருவானவர் ஆலயச் சுற்றாடலில் உள்ள நான்கு வீடுகள் கடந்த புதன் கிழமை வீட்டுச் சொந்தக்காரர்களிடம் கடற்படையினரால் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டுள்ளன.

அடுத்து வரும் சில நாட்களுள் உயர் பாதுகாப்பு வலயமாக இருந்து வந்த மேலும் பதினைந்து வீடுகள் உரிமையாளர்களிடம் கையளிக்கப்படும் அவர்கள் உடனடியாக அங்கு குடியேறுவதற்கும் அனுமதி வழங்கப்படும் என்று தெரியவருகின்றது. (23)

## ஒட்டு வேலைக் கடையில் திருடர்களின் கைவரிசை

(யாழ்ப்பாணம்)

கொக்குவில், குளப்பிட்டிப் பகுதியில் ஒட்டு வேலை செய்யும் கடை (வெல்டிங்) ஒன்று திருடர்களால் உடைக்கப்பட்டு அங்கிருந்த இரண்டரை இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வியாழக்கிழமை இரவு 10.30 மணிக்கு பிற் பாடு குறித்த ஒட்டுவேலை செய்யும் கடை உடைக்கப்பட்டு திருடர்களால் மேற்படி பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டிருப்பதாக மேலும் தெரிய வருகின்றது.

இச்சம்பவம் குறித்து யாழ். பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டதாகவும் தெரியவருகின்றது. (பா)

# உத்தியோகத்தர்களுடனான விசேட கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் பொதுச்சுகாதார பொறியியற் பிரிவு உத்தியோகத்தர்கள், சுகாதார மேற்பார்வையாளர்களுடனான விசேட கலந்துரையாடல் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு மாநகர முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த மாநகர முதல்வர் சுத்தமான நகராக யாழ். மாநகர சபையினை மாற்ற வேண்டும் என்ற நோக்கில் அனைவரும் மிக சிரத்தையுடன் உங்கள் பணிகளைப் புரிய வேண்டும். இது எங்கள் மாநகர சபை இதனைப் பேணிப் பாதுகாப்பது எங்கள் ஒவ்வொருவருடைய பொறுப்பு எனத் தெரிவித்தார். இக்கலந்துரையாடலில் மாநகர ஆணையாளர், மாநகர சபை உறுப்பினர்கள், மாநகர சபை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

# பாலின் விலையை லீற்றருக்கு 10 ரூபாவால் அதிகரிக்கவுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் பாலின் விலையை லீற்றருக்கு 10 ரூபா அதிகரிக்கவுள்ளது.

மாவட்டத்தில் பாலின் சந்தை விலையைத் தீர்மானிப்பதில் ஏகபோக உரிமையைக் கொண்டிருந்த யாழ்கோ நிறுவனம் இது வரை உற்பத்தியாளர்களிடமிருந்து 40 ரூபாவுக்கு பாலைக் கொள்வனவு செய்து 50 ரூபாவுக்கு விற்பனை செய்து வந்தது. ஒரு லீற்றர் குடிதண்ணீர் 60 ரூபா வரையில் விற்பனை செய்யப்படும் நிலையில் கால்நடை வளர்ப்போர் ஒரு லீற்றர் பாலை 40 ரூபாவுக்கே இதுவரை காலமும் யாழ்கோவுக்கு வழங்கி வந்தனர்.

நீண்ட நாட்களுக்கு முன்னரே கால்நடை தீவனங்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டிருந்த போதும தற்பொழுதே வழங்குநர்களுக்கு 8 ரூபா அதிகரித்து 48 ரூபாவுக்குக் கொள்வனவு செய்து 60 ரூபாவுக்கு விற்பனை செய்யத் தீர்மானித்துள்ளது.

தற்போது நெஸ்லே நிறுவனம் வடபகுதியில் இருந்து பாலைக் கொள்வனவு செய்து தென்பகுதிக்குக் கொண்டு செல்கிறது. இவர்கள் பாலின் தரத்திற்கு ஏற்ப 50 முதல் 53 ரூபா வரை உற்பத்தியாளர்களுக்கு வழங்கி வருவதால் பால் உற்பத்தியாளர்கள் பலரும் நெஸ்லே நிறுவனத்தை நாடி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (120)

## ஞானச்சுடர் ஆன்மீகச் சஞ்சிகை வாசகர்களுக்கான போட்டி

(வடமராட்சி)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைநதிருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை, பண்பாட்டுப் பேரவை தனது மாதாந்த வெளியீடான "ஞானச்சுடர்" ஆன்மீக சஞ்சிகைக்கு வாசகர் போட்டி ஒன்றை இம்முறையும் நடத்தவுள்ளது.

இந்த வருடத்தில் ஜனவரி மாதம் தொடக்கம் ஒக்டோபர் மாதம் வரை வெளிவந்த (01-01-2011 - 01-10-2011) ஞானச்சுடர் இதழ்களிலிருந்தே போட்டிக்கான வினாக்கள் தயார் செய்யப்பட்டுள்ளதால் விடைகளும் அவற்றிலிருந்தே எடுக்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டியாளர்கள் தமது விணணப்பங்களை எதிர்வரும் ஜனவரி மாதம் 16ஆம் திகதிக்கு முன்னர் வாசகர் போட்டிக்கான குழு, சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை, சந்நிதியான் ஆச்சிரமம் தொண்டை மானாறு என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு பேரவையினர் கேட்டுள்ளனர். (116)

# வடமராட்சி நாகர்கோவில் பகுதிக்கு அரச பேருந்து சேவை ஆரம்பம்

(வடமராட்சி)

வடமராட்சிக் கிழக்கு நாகர் கோயில் பகுதிக்கென இலங்கை போக்குவரத்து சபை பருத்தித்துறைச் சாலையினால் புதிய பேருந்துச் சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறைச் சாலை முகாமையாளர் கந்தையா கந்தசாமி தெரிவித்துள்ளார்.

இதன்படி இப்பேருந்துச் சேவை தினமும் பருத்தித்துறையில் இருந்து குடத்தனை ஊடாக காலை 7.30 மணிக்கும், மதியம் 12 மணிக்கும், பிற்பகல் 4.30 மணிக்கும் நாகர்கோவிலுக்குச் செல்லும். அங்கிருந்து காலை 8.45 மணிக்கும், மதியம் 1 மணிக்கும் பிற்பகல் 5.45 மணிக்கும் திரும்பி மணற்காடு ஊடாக பருத்தித்துறையை வந்தடையும் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை, பருத்தித்துறைச் சாலை பற்றி கருத்துத் தெரிவிக் கையில், இச்சாலைக்குப் போதிய ஆளணிப் பற்றாக்குறையுள்ள துடன் மக்களுக்கு போதியளவு சேவையை வழங்குவதற்கு பேருந் துகள் தட்டுப்பாடகவுள்ளது. அத்துடன் அலுவலகத்தில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறையால் நான்கு பணியாளர்கள் சேர்ந்து செய்யும் வேலையை ஒரு பணியாளர் செய்ய வேண்டியுள்ளது. இவ் வாறு இங்கு நிலவும் குறைபாடுகளை அதிகாரிகளுக்குத் தெரிவிததுள்ளோம். அவர்கள் இதற்கான தீர்வை பெற்றுத் தருவார்கள் என நம்புகின்றேன்.

சாலைக்கு மதுபோதையில் வரும் ஊழியர்கள் குறித்து ஆதாரத்துடன் நிருபிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிராக தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் பேருந்துகளில் பயணிகளுக்குத் தொந்தரவு செய்தல், தகாத வீண் வார்த்தை பேசுதல், பயணிகள் கை காட்டும்போது பேருந்தை நிறுத்தாமல் செலுத்துதல், மணி அடிக்கும் பட்சத்தில் பேருந்தை செலுத்துதல், டிக்கற் கொடுக்காமல் விடுதல், பாடசாலை மாணவர்களை ஏற்றாது விடல் போன்ற உரிமை மீறல் மற்றும் சட்ட ஒழுங்குகளை கடைப் பிடிக்காத சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் தொடர்பாக முறைப்பாடு கள் கிடைத்தால் அதற்கும் அவர் களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

எனவே, இப்பிரச்சினைகள் தொடர்பாக முறைப்பாடுகள் தெரி விப்பதாயின் பருத்தித்துறைச் சாலை தொலைபேசி இலக்கத்துடன் (021 226 3266) தொடர்பு கொள்ளலாம் என அவர் தெரிவித்தார். (116)

## நடமாடும் வங்கிச் சேவை

இலங்கை வங்கியானது தனது நடமாடும் சேவையொன்றை வழங்கும் முகமாக கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் பொது மக்கள் மற்றும் தனது வாடிக்கையாளரின் நலனைக் கருத்தில் கொண்டு, புதுக்குடியிருப்புச் சந்தியிக்கு அருகாமையில் இயங்கி வருகிறது. (138)

# மலசலகூடம் அற்ற குடும்பங்களுடன் அரியாலையில் கலந்துரையாடல்


(யாழ்ப்பாணம்)

அரியாலை ஜே/89 உதயபுரம் கிராம மக்களுக்கான காசுக்கான வேலைத்திட்டக் கொடுப்பனவு மற்றும் மலசல கூடம் இதுவரை பெற்றுக் கொள்ளாத குடும்பங்களுக்கான கூட்டம் உதயபுரம் செபஸ்தியான் கோவில் முன்றலில் நடைபெறவுள்ளது.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த நல்லூர் ஈ.பி.டி.பி. அமைப்பாளரும், பிரதேச எதிர்க்கட்சித் தலைவருமான அ. ரவீந்திரதாசன், எதிரகாலதில் இப்பிரதேசத்தில் மீள் குடியமர்ந்த மக்களுக்கான வீட்டுத் திட்டம் மற்றும் ஏனைய அபிவிருத்தித் திட்டங்களான மின்சார வசதி, குடிநீர் வசதி, வீதி அபிவிருத்தி என்பவற்றுக்கு தீர்வு பெற்றுத் தரப்படும். மேலும இத்திட்டத்துக்கு பாரம்பரிய மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவுடன் கலந்துரையாடி அதனைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பேன். இதுதவிர முன்பள்ளி, கிராம அபிவிருத்திப் பணிமனை, ஆரம்ப சுகாதார நிலையம் என்பன இவ்வாறு அபிவிருத்தி செய்யப்பட்ட திட்டத்தில் உள்ளடங்கு கின்றன. மென்மேலும் இப்பிரதேச அபிவிருத்தியில் அக்கறைகாட்டப்படும் என்றார்.

இந்நிகழ்வில் கிராம அலுவலகர்கள், கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், கடற்றொழிலாளர் சங்கத்தினர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## மாணவன் சாதனை



(வடமராட்சி)

மாகாண மட்ட விஞ்ஞான புதிர்ப்போட்டியில் பாடசாலை மாணவன் வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளான்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் தரம் 9இல் கல்வி கற்கும் பா. வினித்குமார் என்ற மாணவனே இச்சாதனையைப் படைத்துள்ளான். (116)

# திருட்டுக்களிலிருந்து பாதுகாக்க வர்த்தகர்களுக்கு இன்று விளக்கம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் வர்த்தக சங்க எல்லைக் குட்பட்ட வர்த்தக நிலை யங்களைத் திருட்டுகளிலிருந்து பாதுகாப்பது தொடர்பான மானிப்பாய் பொலிஸாருடனான கலந் துரையாடல் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணிக்கு கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மானிப்பாய் பிரதேச சபைத் தலைவர் ரவீந்திரன் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மல்கம் பிளேட் கலந்து கொண்டு வர்த்தக நிலையங்களின் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடவுள்ளார்.

எனவே, இப்பிரதேச வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மற்றும் சந்தை உட் பகுதி வர்த்தகர் கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வர்த்தக சங்கத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (54)

## மீன் வளர்ப்புத் திட்டம்

பூநகரிப் பிரதேசத்தில் உள்ள நன்நீர் குளங்களில் மீன்குஞ்சுகளைப் பெருந் தொகையாக விட்டு நன்னீர் மீன் வளர்ப்பை மேற்கொள்ள கொறிய நிறுவனம் வேண்டிய நடவடிக்கை எடுத்து விபரங்களைச் சேகரித்து வருகின்றது. இதற்கமைவாக பூநகரியில் உள்ள கமக்காரப் பிரிவுகளில் இருக்கும் குளங்களின் விபரங்கள் பதிவு செய்யப்பட்டு வருகிறது. (112)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(18.12.2011 – ஞாயிற்றுக்கிழமை)

பஞ்சாங்கக் குறிப்புக்கள்
கர வருஷம்
மார்கழி -02 ஆம் நாள்.
இராகுகாலம் 4.53-6.23, சுபநேரம் 9.23 -10.53 வரை
நட்சத்திரம்: உத்தரம் மாலை . 6.37 வரை
திதி: அட்டமி பி.ப. 2.59 வரை

இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

மேடம்:- பணம் வரும், சுற்றத்தார் ஆதரவு, திடீர் பயணம், தொழில் விருத்தி, தேகம் சுகம்.

ரிஷபம:- குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம் வரும், வீண் அலைச்சல், அதிகாரப் போட்டி, நண்பர் வரவு.

மிதுனம் :- பணம் வரும், நினைத்ததைச் சாதித்தல், காரியசித்தி, சுற்றத்தார் ஆதரவு, தேகம் பலவீனம்.

கடகம்:- குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம் வரும், தொழில் ஆதாயம், பதவி உயர்வு, தேகம் சுகம்.

சிம்மம்:- பணம் வரும், குடும்பத்தில் குதூகலம், காரியம்வெற்றி, வீண்பகை, அயலவர் தொல்லை.

கனனி :- நினைத்ததைச் சாதித்தல், பணம் வரும், தொழில் வெற்றி, சுற்றத்தார் ஆதரவு, தேகம் சுகம்.

துலாம் :- பணம் வரும், சண்டை, வீண் மனஸ்தாபம், தொழில் மந்தம், தேகம் சுகம்.

விருச்சிகம்:- குடும்பத்தில் குதூகலம், பணம் வரும், காரியம் வெற்றி, விபத்து வரலாம், தேகம் பலவீனம்.

தனுசு:- பணம் வரும், குடும்பத்தில் கவலை, சுற்றத்தார், ஆதரவு, அயல் வீடுபகை, தேகம் சுகம்.

மகரம:- குடும்பத்தில் கவலை, பணம் வரும், திடீர் பயணம், வீண் அலைச்சல், தேகம் பலவீனம்.

கும்பம் :- பணம் வரும், குடும்பத்தில் குழப்பம், தொழில் மந்தம், சுற்றத்தார் ஆதரவு, தேகம் சுகம்.

மீனம் :- நினைத்ததைச் சாதித்தல், பணம் வரும், குடும்ப ஒற்றுமை, நண்பர் வருகை தேகம் பலவீனம்.


தம்ரோ வருட இறுதி சிறப்பு விற்பனை
சேல்
24,900/=
Daisy 3+2
சேல்
34,900/=
33,000/=
Venus 3+1+1
சேல்
72,000/=
52,500/=
Elena 3+1+1
சேல்
Palace 3+2+1
20% வரையிலான கழிவு
சேல்
20% வரையிலான கழிவு
சேல்
Ornate
Kingston
சேல்
33,700/=
32,000/=
சேல்
சேல்
5,950/=
4,900/=
சேல்
20% வரையிலான கழிவு
சேல்
தம்ரோ அலுவலக தளபாடங்கள்
KWT 022
KOC 001
KOC 013
KCT 011
KCT 004
OCH 026 5,975/=
OCT 032 3,275/=
சேல்
தம்ரோ பாதுகாப்பு பெட்டகங்கள்
தம்ரோ ப்ளாஸ்டிக் தளபாடங்கள்
சேல்
DHS 222
DES 999
DDS 555
DBS 888
DAC 009 765/=
DVAC 001
20% வரையிலான கழிவு
தம்ரோ ஸ்பிரிங் மெத்தைகள்
தம்ரோ போம் மெத்தை
சூல் போம்
இரட்டை லேயர்
இரட்டை லேயர் குயில்ட் கவர்
அழையுங்கள் 077 2 857 857 உங்கள் அருகிலுள்ள காட்சியறையை அறிந்துகொள்ள



பாதுகாப்பு வலயத்திற்குள்ளிருந்து வெளியேறுவதென்பது சாதாரண மக்களிற்கு நிறைவேறாத கனவு. அரசியல், சமூக, மத செல்வாக்குடையவர்கள் சிலர் வெளியேறிக் கொண்டிருந்தனர் தான். இப்படித்தான் ஒரு நாள் அங்கிருந்த பாதிரிகள் பலர் அன்றன்றொக் முதலானவர்கள் வெளியேறி விட்டதாக கதை வந்தது. அது ஒரு ஞாயிறாக இருக்க வேண்டும். மறுநாள் காலையில் வழமை போல் ரஞ்சித் அண்ணை வீட்டில் கூடத் தொடங்கி விட்டோம். காலை ஒன்பது மணியளவில் இருக்க வேண்டும். தேவாலய மணி ஒலிக்கத் தொடங்கியது.

எப்போதும் பிரார்த்தனை ஆரம்பத்தைச் சொல்லி மக்களை அழைத்த அந்த மணியோசை இப்போது மக்களையழைத்தது தம்மைக் காப்பாற்றுமாறு அந்த இளையவர்களிற்காக. அந்த ஒலியிலிருந்த அவலத்தை, கையாலாகாத்தனத்தை நான் உணர்ந்தேன். அது அவர்கள் ஆபத்திலிருக்கிறார்கள் என்பதை உணர்த்தியது. காபபாற்றும் படையணியில் எல்லாம் நாம இருக்கவில்லை. ஆனால் அங்கு நடப்பதை பார்ப்பவர்களாகவாவது இருப்போம் என அங்கு போனோம்.

தேவாலயத்திலிருந்து குருசடி செல லும் வீதியின் இரு கரையிலும் அணை போல மக்கள் திரண்டிருந்தனர். எங்கும் கத்தலும் கதறலும் சாப ஒலியும் தான். இவையெல்லாம் திரண்டு ஒரு பேரிரைச்சலாக எழுந்து கொண்டிருந்தது. சனக் கூட்டத்தை எட்டிப் பார்த்தால் வீதியில் ஒரு சனம் கூட இறங்கமுடியவில்லை. ஐந்தடிக்கு ஒருவராகச் சனத்தை வீதிக்கு இறங்க விடாது ஆயுதத்தை நீட்டியபடி காவல்துறையும். அரசியல்துறை போராளிகளினால் எதுவும் செய்ய முடியாதவர்களாக பைத்தியக்காரர்களைப் போல அரற்றிக் கொண்டிருக்கின்றனர். தேவாலயத்திலிருந்த வாகனங்கள் ஆனந்தபுரத்தை நோக்கி விரைந்து கொண்டிருக்கின்றன. அனேகமாக பிக்கப் வாகனங்கள்தான். பின் பகுதியில் பிடிக்கப்பட்டவர்களை இருத்தி நான்கு மூலையிலும் பெரிய பொல்லுகளுடன் நால்வர் நின்றனர். யாரும் எழுந்தால் அடிதான். வாகனம் சற்று வேகத்தைக் குறைக்கும் போது சில ஆண்கள் குதித்தோடினார்கள் "சுகோபனும்" இப்படி குதித்து தப்பியோடி விட்டான். பெண்கள் தான் பாவம். அவர க்ள் எப்போதும் போல எதுவும் செய்ய வழியற்றவர்களாக அழுதுகொண்டிருந்தனர். அப்போது தான் கவனித்தேன். பலருக்குத் தலைமயிர் இருக்கவில்லை. அவர்கள் ஏற்கனவே பிடிக்கப்பட்டுத் தப்பியோடியிருக்கிறார்கள். அவர்கள் தான் முக்காட்டுக் கோஸடிகள்.

அரசின் பல்வேறு கொலைகளின் போதோ அல்லது அக்கிரமங்களின் போதோ எழும் வார்த்தைகளிற்கு அபபாற்பட்ட ஒரு பொழுது போலவே அதுவும் இருந்தது. ஏதாவது செய்ய வேணடும் மாதிரி மனதும் கையும் பரபரத்தபடியிருந்தது. அந்த இடத்திலிருந்து சற்று பின்னுக்குப் போய் மனதை கட்டுக்குள் கொண்டு வந்தேன். இன்னும் சில நண்பர்கள் அங்கிருந்தனர். அவர்களது பாடு என்ன என்பதை அறிய வேண்டும் போலிருந்தது. தேவாலய வாசலிற்குச் செல்வது என முடிவெடுத்தோம்.

வீதியில் இறங்க முடியாது. பிடிக்கப்பட்டவர்களைக் கொண்டு செல்ல தற்குப் போராளிகளிற்கு மட்டும் பாவனையிலிருக்கிறது வன்னி வாழ் வாசிகளிற்குத் தெரியும் இலக்கத் தகடற்ற மோட்டார் சைக்கிளின் பெறுமதி. அப்படி ஒன்றில் திரிந்தால் இயக்கப் பொடியன் தான். நான் சென்றதும் இலக்கத் தகடற்ற மோட்டார் சைக்கிளில். தவிரவும் எனது நண்பர்களில் பெரும்பாலானவர்கள் போராளிகளாகவேயிருந்த தினால் இறுதிவரை பலர் - அவர்களில் வேறு பிரிவுகளைச் சேர்ந்த போராளிகளும் அடக்கம் - என்னையும் ஒரு போராளியாகவே கருதினர். நான் அடித்து சத்தியம் செய்த போதும் "சும்மா சொல்லாதேங்கோ. நீங்கள் அம்மானின்ர ஆளோ" என்று கேட்டுக் கடுப்பேத்துவார்கள்.

நான் சனத்தை விலத்திக் கொண்டு வீதிக்குள் மோட்டார் சைக்கிளை இறக்க ஒரு காவல்துறையினன் மறித்தான். இருவருக்குமிடையிலான உரையாடல் இப்படியிருந்தது.

"எங்க போறியள்"

"பேசிற்கு"

"எங்க பேசிருக்குது?"

"சேர்ச்சுக்கு பக்கத்தில"

"ம்.. பார்த்து கவனமாக போங்கோ"

நான் அறிந்தேதான் பொய் சொன்னேன். வீதியில் ஏறிச் சில மீற்றர்கள் செல்ல ஒரு அரசியல்துறைக்காரன் மறித்தான். அவனிற்கும் அதே பதிலையே சொன்னேன். அவன் கேட்டான் "அம்மானின்ர ஆளோ?" என (இப்போது கேட்டதற்கும் முந்தி கேட்பதற்கும் சம்பந்தமில்லை. இப்போது தேவாலயத்திற்குப் பக்கத்தில் அவர்களது முகாமிருந்தது). நான் தலையாட்டினேன். சனம் கொந்தளிப்பாக இருப்பதால் சில வேளைகளில் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டி வரலாம் எனவும், அப்படி ஏதாவது நடக்கும் போது இடையில் அகப்பட்டால் தாங்கள் பொறுப்பல்ல என்றான். நான் சம்மதித்தேன். தவிரவும், ஆட்களை ஏற்றியபடி வாகனங்கள் வேகமாக வருவதால் அவற்றிற்கு இடையூறு தராமல் போகச்சொன்னான்.

## சங்கடம்

வாகனம் வேகமாக வந்து திருமபியது. அதனது வேகம் அச்சுறுத்துவதாக இருந்தது. நான் வீதிக்கரையில் மோட்டார் சைக்கிளை நிறுத்தினேன். புழுதி கிளப்பியபடி அது போனது. அது போனதன் பின்பு மோட்டர் சைக்கிளை இயக்கி வீதிக்கு ஏறும் போதுதான் கவனித்தேன். எனக்கு எதிரில் அந்த வளைவில் ஒரு பெண்மணி நிலத்தில் புரண்டு அழுது கொண்டிருந்தார். புழுதியை எடுத்துத் தலையில் அடித்து அடித்து அழுது கொண்டிருந்தார். எல்லோரும் அழுது கொண்டும் அரற்றிக் கொண்டும் இருந்தார்கள் தான். இவரை மிக நிதானமாகப் பார்த்ததினாலோ என்னவோ மனம் கனத்துப் போனது. இயல்பாகவே மோட்டார் சைக்கிள் மெதுவானது. அந்த பெண்மணியை விட்டுப் பார்வையை எடுக்க முடியாமலிருந்தது.

அப்போதுதான் அது நடந்தது. அவர் மிக நிதானமாக என்னைப் பார்த்தார. அந்த கண்களில் என்ன இருந்தது என்று எனக்கு சொல்ல தெரியவில்லை. அழுதழுது மிகக்களைத்திருந்தார். கைகளை ஊன்றி மெதுவாக எழுந்தார். எழும் போது இரண்டு கைநிறையவும் அந்த கிறவல் மண்ணை எடுத்துக்கொண்டு நிமிர்ந்து ஓரடி முன்னால் வந்து "நாசமாய்ப் போங்கோடா" என என் மீது வீசியெறிந்தார்.



நான் மெதுவாக புறப்பட்டேன்.

உண்மையில் புறப்படும் போது யோசிக்கவில்லை. வீதியில் வரும் போதுதான் பெரிய சங்கடமாயிருந்தது. இரண்டு கரையிலும் ஒப்பாரி வைக்கும் சனத்தின் நடுவில் செல்வதற்கு. அந்த சனம் நினைத்திருக்கும் இந்த "ஒப்ரேசனில்" எனக்கும் பங்கிருப்பதாக. அவர்களது சாபங்கள் என்னை நோக்கியும் வந்திருக்கக்கூடும்.

தேவாலயத்திற்குத் திரும்பும் வளைவு வரும்போது எதிரே ஆடகளை ஏற்றி அடைந்தபடி ஒரு கூலர் மண்ணை எடுத்துக்கொண்டு நிமிர்ந்து ஓரடி முன்னால் வந்து "நாசமாய்ப் போங்கோடா" என என் மீது வீசியெறிந்தார்.

இப்போது இவ்வளவு காலமான பின்பும் அந்த பெண் மணியின் பார்வை என்னைத் தொடர்ந்து கொண்டிருப்பது போலவும், அந்த நிலத்துப் புழுதி போகாமல் என் மீது ஒட்டியிருப்பது போன்றதான உணர்வும் இன்னுமிருக்கிறது.

**யோ.கர்ணனின் 'சங்கடம்' சிறுகதையின் ஒருபகுதி**

# சிவில் சமூகத்தினது கோரிக்கை சாமானிய மக்களின் உளவிருப்புகளின் பிரதிபலிப்பு அல்ல

அண்மையில் சிவில் சமூகத்தினர் எனும் பெயரில் தமிழத்தேசியக் கூட்டமைப்பினரை நோக்கி ஒரு பகிரங்க கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இக்கோரிக்கையானது கொண்டுள்ள விடயதானங்கள் பலருக்கு ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளதோடு பொது மக்களிடையே பெரும் குழப்பநிலையையும் தோற்றுவிக்கத் தொடங்கியுள்ளது.

முப்பது வருடகால யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு நாட்டின் ஜனநாயகக் கட்டமைப்புக்கள் மீள உயிர்ப்பிக்கப்பட்டு வருகின்றன. நீண்டகால யுத்தத்தின் இடிபாடுகளுக்குள் சிக்குண்ட அப்பாவி மக்களின் சின்னாபின்னமாக்கப்பட்ட வாழ்வு எதிர்காலம் மீதான நம்பிக்கையை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு மெல்ல மெல்ல நகர ஆரம்பித்துள்ளது.

கடந்தகாலங்களில் ஜனநாயகப் பாதையில் பயணித்திருந்த தமிழ் கட்சிகள், அல்லது ஜனநாயகப் பாதைக்கு திரும்பிய தமிழ்க்கட்சிகள் ஏதாவது தீர்வை முன்வைக்கின்ற வேளைகளிலோ ஏற்றுக்கொள்ளுகின்ற வேளைகளிலோ அதற்கு புலிகள் முட்டுக்கட்டை போட்டு வந்திருந்திருந்தனர். அதிஷ்டவசமாக அந்த இக்கட்டான நிலைமை இன்றில்லை. இந்த சூழலை பயன்படுத்தி ஏதாவது ஒரு குறைந்தபட்ச தீர்வில் தமிழ் கட்சிகள் ஒன்றிணையும் வாய்ப்புக்கள் அதிகரித்திருக்கின்றன.

இப்படியானதொரு சூழலை பயன்படுத்திக்கொள்ள கூட்டமைப்பினர் மனதார முன்வருவார்களா என்கின்ற கேள்விகள் ஒருபுறமிருக்க பெரும்பான்மையான மக்களின் உளவிருப்பம் அதைநோக்கியே காணப்படுகின்றது. அதை உணர்ந்துகொண்டதனால்தானோ என்னவோ கூட்டமைப்பினரும் அப்படியொரு தீர்வை நோக்கி நகரவேண்டிய நிலைமையில் இருக்கின்றர்கள்.

முதலில் தம்மோடு மட்டுமே அரசு பேசவேண்டும் என்று கூட்டமைப்பினர் புலிகளின் பாணியில் மார்தட்டிக் கொண்டாலும் அது ஜனநாயகத்துக்கு விரோதமான ஏகப்பிரதிநிதித்துவ கோரிக்கை என்பதனால் அதையிட்டு கூட்டமைப்பினரது இறுக்கம் நெகிழும் வாய்ப்புகள் ஏறபட்டிருக்கின்றது. ஆகவே நடத்தப்படப் போகும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கெடுத்து முதலில் ஏதாவதொரு தீர்வினை ஏற்றுக்கொள்வதையிட்டு சிந்திப்பார்கள் என்று மக்கள் நம்பியிருக்கின்றனர். இதுவே எமது மக்களின் இன்றுள்ள அவசியத் தேவையுமாகும்.

இந்த நிலையில்தான் சிவில் சமூகத்தின் சார்பில் கூட்டமைப்பினரை நோக்கிய கோரிக்கைகள் அடங்கிய அறிக்கை வெளியாகியுள்ளது. இவ்வறிக்கையானது கொணடுள்ள கோரிக்கைகளின் சாராம்சம் பேச்சுவார்த்தைகளின் ஊடாக கூட்டமைப்பினருக்கும் அரசுக்குமிடையில் எந்தவிதமான தீர்வும் எட்டப்பட்டுவிடக்கூடாது என்பதை நோக்கியதாகவே காணப்படுகின்றது. மீண்டும் மீண்டும் தேசியம், தாயகம், சுயநிர்ணயம் என்று புலிகளின் பாணியில் பிரிவினைவாதக் கருத்துக்கள் மீது கட்டப்பட்டவையாகவே இக்கோரிக்கைகள் காணப்படுகின்றன. அதுமட்டுமின்றி இவ்வாறான தூண்டுதல்களும், உருவேற்றுதல்களும் மென்மேலும் முரண்பாடுகளை வளர்க்கவே உதவும். தீர்வுகளை நோக்கி இருதரப்பினரும் நகரும் வாய்ப்பினை அது சீர்குலைக்கும்.

சிவில் சமூகத்தின் அரசியல் வெளிப்பாடுகள் என்பது ஒரு சமூகப்பொறுப்புமிக்கதாக மிளிரவேண்டும். அமைதியையும் சமாதானத்தையும் நோக்கி மக்களையும் கட்சிகளையும் நாட்டையும் வழிநடத்த அந்த வெளிப்பாடுகள் முயலவேண்டும். ஆனால் இங்கோ வெளியாகியுள்ள சிவில் சமூகத்தின் அறிக்கையானது இந்நோக்கங்களுக்கெல்லாம் எதிர்மாறானதொன்றாகவே காணப்படுகின்றது என்பதுதான் ஆச்சரியமாகும்.

சமாதானம் என்பதோ தீர்வு என்பதோ இருதரப்பினரதும் பரஸ்பர விட்டுக்கொடுப்புகளிலும், சமரசங்களிலும் இருந்தே கட்டியெழுப்பப்பட வேண்டியதொன்றாகும். அதைவிடுத்து விடாப்பிடியாக நிற்பவர்களால் ஆக்கபூர்வமாக எதையுமே செய்யமுடியாது.

ஜனாதிபதி சந்திரிகா காலத்தில் கொண்டுவரப்பட்ட தீர்வுப்பொதியில் இன்றைய மாகாணசபைகளைவிட கூடிய அதிகாரங்கள் அடங்கியிருந்தன. தமிழ்தேசியக் கூட்டமைப்பினரே அத்தீர்வுப்பொதியை நிராகரித்தனர். அன்று கூட்டமைப்பினர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து சந்திரிகாவின் தீர்வுப்பொதியை எதிர்த்திருக்காவிட்டால் அமைதியும், தீர்வும் எப்போதோ ஏற்பட்டிருக்கும். அது மட்டும் அன்றி அதன்பின்னரான எவ்வளவோ அழிவுகளும் இழப்புகளும் தவிர்க்கப்பட்டும் இருக்கும். அது போன்ற அரிய பல சந்தர்ப்பங்களை கூட்டமைப்பினர் நிராகரித்து வந்துள்ளனர்.

இன்று வெளியாகியுள்ள கூட்டமைப்பினரை நோக்கிய அறிவுறுத்தல் கோரிக்கைகள் ஒரு சிவில் சமூகத்தின் பெயரால் வெளிவந்திருக்கின்றன. எப்படியான ஆலோசனைகளையும் அறிவுறுத்தல்களையும் புலிகள் கடந்தகாலங்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கு வழங்கி எந்தவொரு சமாதானத்தையும் எட்டமுடியாதவாறு தவறாக வழிநடாத்தினார்களோ அதிலிருந்து சற்றேனும் பிசிறாமல் அதே பாணியிலான அறிவுறுத்தல்களே ஆலோசனைகள் எனும் பெயரில் இன்று இந்த சிவில் சமூகத்தினராலும் வழங்கப்பட்டிருக்கின்றன.

இந்த நிலையில் வட கிழக்கு இணைப்பு பற்றி மேற்படி சிவில் சமூகத்தினர் முன்வைத்துள்ள கோரிக்கையானது கிழக்கு மாகாணத்தின் இயல்புநிலையை சீர்குலைக்கும் முயற்சியாகவே காணப்படுகின்றது. அது மட்டும் அன்றி கிழக்குமாகாண மக்களின் இறைமைக்கு எதிரான கருத்தாகவே இதனை நாம் காண்கின்றோம். கிழக்கில் மறைந்திருக்கும் தேசியவாத உணர்வலைகளை கிளறிவிட்டு தமிழ் தேசியம், முஸ்லிம் தேசியம் எனற குரோதங்கள் மீள எழுவதற்கு இந்த இணைப்பு கோரிக்கை வழிவகுக்க நேரிடும்.

இவ்விணைப்பு கோரிக்கையானது காலமாகிவிட்ட கதை என்பதை கூட்டமைப்பினரும் புரிந்துகொண்டுள்ளனர் என்பதனால்தான் "பிரிந்த கிழக்கில் போட்டியிட மாட்டோம்" என்று அன்று கூறியவர்கள், "கிழக்கு மாகாணசபை என்ற ஒன்றே எம்மைப் பொறுத்தவரை இல்லை" என்றவர்கள் இன்று தனித்த வடக்கு மகாணசபைக்கு போட்டியிட தயாராகி வருகின்றனர்.

தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்று சாமானிய மக்களின் வாழ்வியல் தேவைகளுக்கு குழிபறிக்கும் இவ்வரசியல் கோசங்களை இந்த சிவில் சமூகத்தினர் முன்வைத்திருப்பது மிகவும் வேதனைமிக்க செயலாகும்.

**ஜனநாயகத்துக்கான**
**கிழக்கிலங்கை முன்னணி**

# இவர்களைக் கொஞ்சம் கவனியுங்கள்!



இவர்களிற் பல வகையினர் இருக்கின்றனர். சிலர் மிக வறிய நிலையிலுள்ளனர். உதவி களற்றவர்களாக உள்ளனர். வேறு சிலர், உதவிகளும் வசதிகளும் உள்ளவர்களாக இருக்கின்றனர். - இவர்களின் நிலை பொருளா தார நிலையில் பரவாயில்லாம லிருக்கிறது. சிலர் ஏதோ சமா ளித்துக் கொண்டு போகக்கூடிய நிலைமையுடன் உள்ளனர். சிலர் அடுத்து என்ன செய்வது என்று தெரியாத நிலையில் இருக்கின்றனர். சிலர் உளரீதி யாகவும் உடல்ரீதியாகவும் மிக வும் பாதிக்கப்பட்ட நிலையில், உள்ளனர்.

இப்படிப் பல வகையினராக இருக்கும் முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் மெல்ல மெல்ல பொது வாழ் வில் ஈடுபட்டு வருகின்றமை குறிப் பிடத்தக்க முன்னேற்றத்துக் குரியதே.

ஆனாலும் இவர்களைச் சுறறி ஒரு தீராத பிசாசைப் போல அபாயவலையொன்று பின்னப் பட்டிருக்கிறது. அதுதான் இவர் களை மிகமோசமாகப் பாதித் துக் கொண்டிருக்கிறது. ஒரு பெரிய புகழுடைய அமைப்பின் சடுதி யான தலைகீழ் வீழ்ச்சியென் பது, சுதாகரிக்கக் கூடியதாகவோ, சமாளிக்கக் கூடியதாகவோ, ஜீரணிக்கக் கூடியதாகவோ இருப்பதில்லை. அதிலும் மாதிரி அரசொன்றை வைத்திருந்த அமைப்பின் வீழ்ச்சியானது, மிகக் கடினமான நிலைமைகளை அந்த அமைப்பினருக்கு ஏற்படுத்தும் என்பது எதிர்பார்க்கக் கூடியதே.

இங்கே, விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப் பினர்கள் தற்போது புனர்வாழ்வு நிலையங்களில் இருந்து விடு தலை செய்யப்பட்டுள்ளனர். ஆனா லும் அவர்கள் கண்காணிக்கப் படுகின்றனர் என்பது பலரு டைய அபிப்பிராயம். இந்தக் கண்காணிப்பு இரண்டு பிரதான வகைகளில் அமைகிறது. ஒன்று அரச கண்காணிப்பு. அதாவது, இது படைத்தரப்பின் கண்காணிப பாகும். அடுத்தது, அரசியல் ரீதி யாகவும் இவர்கள் எப்படிச் செயற்படுகின்றனர் என்று தமிழ் அரசியற் கட்சிகள் இவர்களைக் கண்காணிக்கின்றன. இவர்கள் எப்படி வாழ்கின்றனர் எனச் சனங் கள் அவதானிக்கின்றனர்.

பொதுவாக இந்த முன்னாள் உறுப்பினர்களிடம் ஒரு பதுங்கல் மனோபாவம் அல்லது தம்மை அடக்கி வாசித்தல், அல்லது, வலகியிருத்தல், அல்லது எதற்கும் அச்சமடைதல் - பதற்றமடைதல் என்ற நிலையே ,காணப்படுகி றது. தமிழ் அரசியற் கட்சிகளின் அறிக்கைகள் கூட இவர்களைக் கலவரப்படுத்துகின்றன. சில சமயங்களில் புலம்பெயர் நாடுக ளில் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங்கள் கூட இவர்களைப் பாதிக்கிறது. அவை, இவர்க ளுக்கு மனக்கலக்கத்தை ஏற் படுத்துகின்றன.

அண்மையில் கிறீஸ் மனிதன் விவகாரம் கூட, விடுதலைப் புலி களின் முன்னாள் உறுப்பினர்க ளின் மீதே சுமத்தப்படுகிறது என்று வந்த செய்திகள் இதற்கு ஆதாரம். எல்லாவகையான எதிர் வினைகளுக்கும் அரசு தங்க ளைப் பலிக்கடாவாக்கக்கூடும் என்று சிலர் இதைக்குறித்து வெளிப்படையாகவே சொல்கிறார் கள். ஆகவே, தங்களின் நிலை மையைக் குறித்தும் சிந்திக்க வேண்டும் என்பது இவர்க ளுடைய அபிப்பிராயம்.

ஆனால், இவர்களின் குரல் இப்பொழுது ஒரு செல்லாக் காசு என்ற நிலையிலேயே இருக்கிறது. அதேவேளை, இவர்களின் நிலை படுமோச மானது. இதைக்குறித்த அக் கறையுள்ளவர்கள் சீரிய ஸாகவே சிந்திக்க வேணும். எந்தக் காரணம் கொண்டும் இவர்களைப் புறக்கணிக்க முடி யாது. அப்படிச் செய்தால், அது உண்மையான புனர்வாழ்வா கவோ, இவர்களைப் பொது வாழ்வில் இணைப்பதாகவோ, இவர்களைச் சமூகமனிதர்களாக ஆக்கிக்கொள்வதாகவோ அமை யாது.

தோற்றுப்போனவர்களின் உளவியல் என்பது எப்போதும் பாதிக்கப்பட்ட நிலையில் பதற் றத்துக்கும் சந்தேகங்களைக் கொண்டதாகவுமே இருக்கும். ஒதுங்கிச் செல்லும் இயல்பை அந்த உளவியல் ஏற்படுத்தும். ஆகவே, இவர்களை அர வணைப் பதும் இவர்களைக் குறித்துச் சிந்திப்பதும் தனியான ஏற் பாடுகளுக்குரியது. குறித்துச் சொல்வதாக இருநதால், மேலும் பல ஆயிரக் கணக்கான இளை ஞர்கள் இன்னும் விடுதலையாக வேண்டிய சூழலில் இருக்கின் றனர். இந்த நிலையில், வெளி வருகின்ற அறிக்கைகளுக்கும் பிரகடனங்களுக்கும் இவர்கள் அஞ்சி அஞ்சித் தினமும் சாகின்ற னர். இதை அவர்களே வாய் விட்டுக் கூறுகின்றனர். எங்களைப் பற்றி, எங்களின் நிலைமையைப் பற்றி, எங்களின் விடுதலையைப் பற்றி யாருமே சிந்திக்கிறார்க ளில்லையே..! என்று.

பாதிக்கப்பட்டவர்களின் தளத தில் நின்று, அவர்களுடைய நோக்கு நிலைகளில் நின்று சிந் திகக வேண்டியது ஒரு முக்கிய மான விசயம் இவ்வாறு பாதிக்கப் பட்டவர்கள் ஏதோ ஓரிருவர் அல்ல. ஆயிரக்கணக்கானவர் கள். லட்சக்கணக்கானவர்கள். இவர்கள் எல்லோருடைய விடுத லைக் கனவுகளுக்காகவும் ஒரு காலம் சிலுவைகளைச் சுமந்தவர் கள். அதாவது, வன்னி மற்றும் படுவான்கரை, வாகரைப் பிரதேச மககளையே இங்கே குறிக்கிறோம்.

ஆகவே, இந்தச் சனங்களை யும் முன்னாள் உறுப்பினர்களை யும் தயவுசெய்து உங்களின் விழிகளை ஒரு கணம் மூடிச் சிந்தியுங்கள். இவர்களுக்காகச் சிந்தியுங்கள்.

அதுவே ஒரு பெரிய பணியாகும்.

அரவிந்தன்
கட்டுரையிலிருந்து...

---

# தவற விடக்கூடாத திரைப்படம்




சென்னை சர்வதேச திரைப்பட விழாவில் கடந்த 15 ஆம் திகதி பார்த்த பிரெஞ்ச் திரைப்படம். NO RETURN / SIN RETORNO.

அற்புதமான சைக்கலொஜிக்கல் திரில்லர். ஒரு சாலை விபத்து. அதைத் தொடர்ந்து ஒரு மரணம் இதை வைத்துக் கொண்டு இத்தனை அற்புதமான ஒரு திரைப்படத்தை உருவாக்க முடியுமா என்று பிரமிப்பே வந்து விட்டது. படம எதிர்பார்க்கவே முடியாத யூக்ங்களில் முட்டுச் சந்து திருப்பங்கள் போல் பயணித்துக் கொண்டேயிருக்கிறது. "குற்றமும் தண்டனையும்" என்று சமூகம் ஏற்படுத்தி வைத்திருக்கும் நீதியமைப்பு எத்தனை தூரம் சரியானது என்கிற கேள்வியையும் சந்தேகத்தையும் படம் எழுப்புகிறது. என்றாலும் மனிதனுக் குள் பொதிந்திருக்கும் மனச்சாட்சி அவனுக்கான தண்டனையைத் தந்து விடுகி றது. ஊடகங்கள் வெறும் பரப்பிற்காக செயற்பட்டு எத்தனை தனிமனித வாழ்க்கைகளை பாழாக்கு கிறது என்பதும் Cbioahf வெளிப்படுகிறது. அடுத்த முறை ஊடகங்களில் திரும்பத் திரும்ப "குற்றவாளி" என்று அழுத்தமாக முத்திரை குத்தப்பட்டு வெளிப்படும் ஒருவரை, அவர் குற்றவாளி தானா என்று பொதுமனங்களில் கேள்வி எழுப்புவதில் இத்திரைப்படம் வெற்றி கண்டிருக்கிறது எனலாம். மிக அபாரமான திரைக்கதை. சமீபத்தில் நான் கண்ட திரைப்படங்களில் மிக அற்புதமான, உணாச்சிவசப்பட வைக்கக்கூடிய கிளைமாக்ஸ் கொண்டது இத்திரைப்படமே. சிக்கலான நேரங்களில் அகம் எவ்வாறு செயற்படுகிறது என்பது படம் முழுக்க வெளிப்பட்டுக் கொண்டேயிருக்கிறது. Leonardo Sbaraglia -வின் நடிப்பு இரண்டாவது பகுதியில் மிகுந்த பிரமிப்பை ஏற்படுத்துகிறது.

- சுரேஷ் கண்ணன்

---

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்

**21.12.2011 - 16.12.2014**

ஜோதிடமாமணி முருகு பாலமுருகன்



## கன்னி

உத்திரம் 2,3,4ஆம் பாதங்கள்
அஸ்தம், சித்திரை
1,2ஆம் பாதங்கள்

சுகபோக வாழ்க்கையை விரும்புபவராகவும், எப்பொழுதுமே குஷியாக இருப்பவராகவும் விளங்கும் கன்னி ராசி நேயர்களே! வரும் 21-12-2011இல் ஏற்படவிருக்கும் சனி பெயர்ச்சியின் மூலம் உங்களுக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஏழரைச் சனியில் ஜென்ம சனியானது முடிவடைந்து பாதகனி தொடங்கவுள்ளது. இதனால் ஏழரைச் சனியில் ஐந்து ஆண்டு காலங்கள் முழுமையாக முடிவடைந்து விடுகிறது. 21-12-2011 முதல் 16-12-2014 வரை நடைபெறவுள்ள இந்த பாதகனி காலங்களில் எதிலும் சிந்தித்து செயற்படுவது நல்லது. இக்காலங்களில் சனிபகவான் குடும்ப ஸ்தானமான 2ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் கணவன், மனைவியரிடையே கருத்து வேறுபாடுகள் உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் பாதிப்புக்கள் ஏற்படக்கூடும். என்றாலும் எதையும் சமாளிக்கக் கூடிய ஆற்றலும் உண்டாகும். இதுவரை இருந்து வந்த கடன் பிரச்சினைகள் யாவும் படிப்படியாக குறையும். தொழில் வியாப்பார ரீதியாகப் போட்டிகள் நிலவினாலும் கிடைக்க வேண்டிய இலாபம் கிடைக்கும். பணவரவுகள் சுமாராக இருக்கும். பேச்சில் எவ்வளவுக்கு எவ்வளவு குறைத்துக் கொள்கிறீர்களோ அந்த அளவிற்கு வீண் பிரச்சினைகளும் குறையும். பாதசனி நடைபெறக்கூடிய இக்காலங்களில் ஆண்டு கோளான குரு பகவான் 17-05-2012 வரை அஷ்டம ஸ்தானமான 8இல் சஞ்சரிப்பது ஜென்ம ராசியை பார்வை செய்வதால் எதிர்பாராத தன சேர்க்கைகள் ஏற்பட்டு உங்களது கஷ்டங்கள் குறையும். கணவன், மனைவியரிடையே ஒற்றுமை பலப்படும். குடும்பத்திலும் மங்களகரமான சுபகாரியங்கள் கைகூடும். பூர்வீக சொத்துக்களால் இலாபம் கிட்டும். பொருளாதார நிலை உயர்ந்து கடன்கள் குறையும். 28-05-2013 முதல் 13-06-2014 வரை குரு 10இல் சஞ்சரிக்கும்போது தொழில் உத்தியோக ரீதியாக சிறுசிறு சங்கடங்கள் ஏற்பட்டாலும் 13-06-2014 முதல் 05-07-2015 வரை குரு இலாபஸ்தானத்தில் சஞ்சாரம் செய்கின்ற காலங்களில் சகல சௌபாக்கியங்களையும் பெற்று வாழ்வில் மகிழ்ச்சியடைவீர்கள். தொழில் வியாபாரத்திலும் அபிரிமிதமான இலாபத்தைப் பெறுவீர்கள். உடல் ஆரோக்கியத்திலிருந்த பிரச்சினைகளும் குறைந்து மருத்துவ செலவுகள் மறையும்.

### தேக ஆரோக்கியம்

உடல் ஆரோக்கியத்தில் சற்று அதிக கவனம் எடுத்துக்கொள்வது நல்லது. மனைவி பிள்ளைகளாலும் மருத்துவ செலவுகளை எதிர்கொள்ள நேரிடும். சிலருக்கு நெருங்கியவர்களை இழக்கக்கூடிய சந்தர்ப்பங்களும் உண்டாகிவிடும். நெருங்கியவர்களிடையே ஏற்படக்கூடிய கருத்து வேறுபாடுகளால் மனச் சஞ்சலங்களும் நிம்மதிக்குறைவும் ஏற்படும்.

### குடும்பப் பொருளாதார நிலை

குடும்பத்தில் கணவன், மனைவியரிடையே கருத்து வேறுபாடுகளால் தோன்றுவதால் ஒற்றுமை குறையும். தனஸ்தானத்திலேயே சனி சஞ்சரிப்பதால் பண வரவுகளிலும் நெருக்கடிகள் ஏற்படக்கூடும். என்றாலும் எதையும் சமாளிக்கக் கூடிய ஆற்றலும் உண்டாகும். திருமணம் போன்ற சுபகாரியங்களுக்கான முயற்சிகளில் சிறுசிறு தடைகள் நிலவினாலும் முடிக்க வேண்டிய நேரத்தில் முடிப்பீர்கள். பண வரவுகளில் நெருக்கடிகள் ஏற்பட்டாலும் செலவுகள் கட்டுக்கள் அடங்கியே இருக்கும். பொன், பொருள் சேரும். உற்றார், உறவினர்களும் சாதகமாக செயற்படுவார்கள். புத்திர வழியிலும் மகிழ்ச்சி தரக் கூடிய சம்பவங்கள் நடைபெறும். எதிலும் சிந்தித்து செயற்படுவது நல்லது.

### உத்தியோகஸ்தர்களுக்கு

உத்தியோகஸ்தர்களுக்குப் பணியில் அவ்வளவு திருப்தியான நிலை இருக்கும் என்று கூறமுடியாது. எடுக்கும் பணிகளைச் செய்து முடிப்பதில் நிறைய இடையூறுகள் ஏற்படும். உயரதிகாரிகள் ஆதரவாக இருந்தாலும் உட னிருப்பவர்கள் வீண் பிரச்சினைகளை ஏற்படுத்துவார்கள். சிலருக்கு பதவி உயர்வு கள் கிடைக்கப்பெற்றாலும் எதிர்பாராத இடமாற்றங்களால் அலைச்சல்கள் அதிகரிக் கும். புரியாத மொழி, புதிய இடம்போன்றவற்றால் மன நிம்மதி சற்றுக் குறையும்.

### வியாபாரிகளுக்கு

தொழில் வியாபாரம் செய்பவர்கள் பெரிய தொகைகளை ஈடுபடுத்தி செய்ய நினைக்கும் காரியங்களில் சற்று சிந்தித்து செயற்படுவது நல்லது. எதிர்பாராதாத பயணங்களால் சற்று அலைச்சல் அதிகரித்தாலும் அதன் மூலம் சில புதிய வாய்ப்புக்களைப் பெறுவீர்கள். பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பதும் கூட்டாளிகளையும், தொழிலாளர்களையும் அனுசரித்து நடப்பதும் நல்லது. நிறையப் போட்டிகளையும் மறைமுக எதிர்ப்புக்களையும் சமாளிக்க வேண்டிய காலம் என்பதால் எந்தவொரு காரியத்தையும் ஒரு முறைக்கு பல முறை சிந்தித்து செயற்படுவது நல்லது.

### அரசியல் வாதிகளுக்கு

அரசியலில் உள்ளவர்கள் பேச்சில் சற்று நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. மக்களின் தேவையறிந்து செயற்பட்டால் மட்டுமே மக்களின் ஆதரவைப் பெற முடியும். எடுக்கும். காரியங்களை சிறப்பாக செய்து முடிப்பதில் சிறுசிறு இடையூறுகள் நிலவினாலும் எதையும் தைரியத்துடன் செய்து முடிக்கும் ஆற்றலும் உண்டாகும்.

### விவசாயிகளுக்கு

விவசாயிகளின் பயிர்களில் புழு, பூச்சிகளின் தொல்லைகள் அதிகமாக இருக்கும். போட்ட முதலீட்டை எடுப்பதற்கே அரும்பாடுபட நேரிடும். என்றாலும் அரசு வழியில் ஓரளவுக்கு சலுகைகள் கிடைக்கும். பூ, காய் கனி போன்றவற்றால் எதிர்பார்த்த இலாபத்தை அடைய முடியும். கால்நடைகளால் சிறுசிறு மருத்துவ செலவுகள் தோன்றக்கூடும்.

### பெண்களுக்கு

உடல் ஆரோக்கியத்தில் அதிக அக்கறை எடுத்துக் கொள்வது நல்லது. கணவன் மனைவியரிடையே சிறுசிறு பூசல்கள் தோன்றினாலும் ஒற்றுமை குறையாது. புத்திர வழியில் சிறுசிறு சஞ்சலங்கள் தோன்றினாலும் பெரிய கெடுதி இல்லை. பண வரவுகள் ஏற்ற இறக்கமானப் பலன்கள் ஏற்படக்கூடிய காலம் என்பதால் ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பது நல்லது. குடும்ப விஷயங்களைப் பகிர்ந்து கொள்வதிலும் கூட நம்பிக்கைக்குரியவர்களாக தேர்ந்தெடுப்பது நல்லது.

### மாணவர்களுக்கு

கல்வி பயிலுபவர்கள் சற்று எச்சரிக்கையுடனும் கவனமுடனும் படிப்பது நல்லது. உடல் நலக்குறைவுகளாலும் குடும்பத்தில் உண்டாகக் கூடிய சிறுசிறு குழப்பங்களாலும் அடிக்கடி விடுப்பு எடுக்கக்கூடிய சூழ்நிலைகள் உண்டாகலாம். உடன் பழகும் நட்பு வட்டாரங்களிடமும் ஓரள்வுக்கு ஒதுங்கியிருப்பது நல்லது. விளையாட்டுப் போட்டிகளில் எச்சரிக்கையுடன் செயற்பட்டால் பரிசுகளைத் தட்டிச் செல்ல முடியும்.

# யுத்தக் குற்றவாளிகளுக்கு சட்ட நடவடிக்கை ஆணைக்குழு அறிக்கை குறிகாட்ட தவறிவிட்டது

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இறுதி யுத்தத்தின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் யுத்தக் குற்றசாட்டுக்கள் பற்றி விசாரணை நடத்துவது தொடர்பிலோ அல்லது குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவது குறித்தோ கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஜனாதிபதி ஆணைக்குழு எந்தவித வழிகாட்டுதல்களையும் முன்வைக்கத் தவறியுள்ளது.

இதனால், ஐக்கிய நாடுகள் சபையினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு முன்வைத்த அறிக்கையின் பரிந்துரைக்கு அமைவாக சுதந்திரமான சர்வதேச விசாரணைப் பொறிமுறையின் தேவை உணரப்பட்டுள்ளது என்று நியூயோர்க்கைத் தளமாகக் கொண்ட சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேற்படி அறிக்கை நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

# சிலாபத்தில் கோர விபத்து மூவர் ஸ்தலத்தில் பலி



(கொழும்பு)

சிலாபம் ஆரச்சிகட்டுவ பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்துச் சம்பவத்தில் மூவர் உயிரிழந்ததுடன், மேலும் ஏழு பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியினூடாகப் பயணித்துக் கொண்டிருந்த வான் ஒன்றும் லொறி ஒன்றும் மோதியதிலேயே இந்த விபத்துச் சம்பவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்துத் தொடர்பான விசாரணைகளை ஆரச்சிகட்டுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மண்சரிவு அபாயத்தில் ஏழு மாவட்டங்கள்

(கொழும்பு)

இலங்கையின் 7 மாவட்டங்களில் மண்சரிவு ஏற்படக்கூடிய அபாயகரமான பகுதிகள் இனங்காணப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

மண்சரிவு ஏற்படக்கூடிய இடங்களை முன்கூட்டியே அறிவதற்குப் பயன்படுத்தப்படும் இயந்திரம் நேற்றுமுன்தினம் கண்டியில் உபயோகிக்கப்பட்டது.

மண்சரிவு அபாயத்தைக் கண்டறிய இதற்கு முன்னர் பயன்படுத்தப்பட்ட முறை அதிக செலவுடன் கூடியது என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் மண்சரிவு ஆய்வு தொடர்பான பிரதானி ஆர்.எம்.எஸ்.பண்டார குறிப்பிட்டுள்ளார்.

புதிய இயந்திரத்தின் மூலம் நிலத்திற்கு அடியில் உள்ள நிலைமைகளையும் அறிய முடிவதாக அவர் தெரிவித்துள்ளார்.

# தினசரி ஆறுபேர் மரணம் வீதி விபத்துக்களின் விளைவு

(கொழும்பு)

நாடு முழுவதும் நாளொன்றுக்கு 92 வாகன விபத்துக்கள் இடம்பெறுவதாக பொலிஸ் மோட்டார் போக்குவரத்துப் பிரிவுப் பணிப்பாளர் சேனக்க கமகே தெரிவித்துள்ளார். இதன் காரணமாக நாளொன்றுக்கு 6 மரணங்கள் சம்பவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விபத்துக்கள் காரணமாக வருடாந்தம் 10 பில்லியன் ரூபா நஷ்டம் ஏற்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த நிலைமை நாட்டின் பொருளாதாரத்தை நேரடியாகப் பாதிக்கும் என்றும், விபத்துக்களில் 85 வீதமானவை சாரதிகளின் அசமந்தப் போக்குக் காரணமாக ஏற்படுவதாகவும், ஏனைய 15 வீதம் இயந்திர கோளாறுகளினால் ஏற்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாகனம் செலுத்தும் போது உறங்குதல், பிள்ளைகளை கொஞ்சுதல், உரையாடுதல், தொலைபேசி பேசுதல், மது அருந்துதல், உணவு உட்கொள்ளல் போன்ற காரணிகளினால் இவ்வாறான விபத்துக்கள் அதிகம் இடம்பெறுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

# ஆணைக்குழுவின் சிபார்சுகளை விரைவில் அமுல்செய்ய வேண்டும்

## கலாநிதி பிரதீப மஹனாமஹேவா

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை விரைவில் செயற்படுத்த வேண்டியதன் அவசியத்தை சட்ட வல்லுனர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இதற்கென பல்வேறு பிரிவுகளையும் இணைத்து ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படவேண்டுமென கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் சட்டப்பீட பீடாதிபதி கலாநிதி பிரதீப மஹனாமஹேவா தெரிவித்தார்.

அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ள மனித உரிமைகள் செயற்பாட்டுத் திட்டத்துடன் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகள் சிலவும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென குறிப்பிட்ட அவர் நாடாளுமன்றத்தினால் அதனை ஏற்றுக்கொள்ள முடியுமெனக் கூறினார்.

அரசசார்பற்ற அமைப்புக்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் இதனை மேற்கொள்வதற்கு முன்வர வேண்டுமெனவும், அறிக்கையில் குறிப்பிட்டுள்ள ஒன்றிரண்டு சிபாரிசுகள் துரித கதியில் செயற்படுத்தப்பட வேண்டுமெனவும் அவர் குறிப்பிடுகிறார்.

இலங்கையின் ஆணைக்குழுக்கள் பலவும் சிபாரிசுகளை முன்வைக்கின்ற போதிலும் அவற்றினைச் செயற்படுத்துவதற்கு தவறியுள்ளதாக கலாநிதி பிரதீப மஹனாமஹேவா குறிப்பிட்டார். இந்தச் சிபாரிசுகளை செயற்படுத்துவதன் மூலம் சர்வதேச சமூகத்தினால் இலங்கை மீது சுமத்தப்படும் அநாவசிய குற்றச்சாட்டுக்களிலிருந்து பாதுகாக்க முடியுமென அவர் குறிப்பிடுகிறார்.

அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற நாடுகள் நாட்டிலுள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தமது நாட்டிலேயே ஆணைக்குழு அமைப்பது பொருத்தமற்றது என கடந்தகாலங்களில் குற்றஞ்சாட்டியதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஆனாலும் தற்போது ஆணைக்குழுவொன்று அமைக்கப்பட்டு அதன் அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட அவர், அதனை உறுதிப்படுத்த சிபாரிசுகள் நடைமுறைப்படுத்தப்படல் அவசியமானதெனத் தெரிவித்தார்.

### சட்டவிரோத மருந்தகங்கள் விழிப்புடன் இருக்கக் கோரிக்கை

(கொழும்பு)

சட்ட விரோதமாகச் செயற்படுகின்ற மருந்தகங்கள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு மருந்துப் பொருள் அதிகார சபையின் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹேமந்த தெனரகம பொது மக்களைக கோரியுள்ளார்.

அவ்வாறு சட்டத்தைப் பின்பற்றாத மருந்தகங்கள் உரிய பதிவுகளை மேற்கொண்டு சட்டத்திற்கு கீழ்படிந்து நடக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இவ்வாறு மருதானையில் பதிவு செய்யப்படாத கொக்சிரப் வகையைச் சேர்ந்த மருந்து ஒன்றை பாடசாலை மாணவர்களுக்கு விநியோகித்து வந்த மருந்தகம் ஒன்றை மூடுவதற்கு ஏற்கனவே உத்தரவிட்டுள்ளதாகவும் அதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் பொது மக்கள் சட்டவிரோத மருந்தகங்கள் தொடர்பில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என அவர் கோரியுள்ளார்.

# சட்டம் அமுலாக்கலில் பாரபட்சம் காட்டப்படுகிறது

## மல்வத்த பீட மஹாநாயக்க தேரர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சட்டம் அமுலாக்கம் செய்யப்படுவதில் பாரபட்சம் காட்டப்படுவதாகவும் நமது நாட்டின் சட்டம் ஒழுங்கு விதிகள் இரண்டு விதமாக அமுல்படுத்தப்படுகின்றது எனவும் மல்வத்த மஹாநாயக்க தேரரான திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர் அரசு மீது குற்றஞ் சுமத்தியுள்ளார்.

ஆட்சியாளர்களின் நண்பர்களுக்கு ஒரு விதமாகவும் மாற்றுக் கருத்துடையவர்களுக்கு வேறு விதமாகவும் நாட்டின் சட்டம் அமுல்படுத்தப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.



எங்களது ஆலோசனைகள் தறபோது எடுத்துக்கொள்ளப்படுவதில்லை எனவும் அவர் விசனம் தெரிவித்துள்ளார்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை விடுதலை செய்யும் நோக்கில் ஐக்கிய தேசிய கட்சியின் சிரேஸ்ட உறுப்பினர்கள் மல்வத்து மஹாநாயக்க தேரரைச் சந்தித்த போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு பல தடவைகள் எழுத்து மூலம் கோரிய போதிலும் பலன் கிட்டவில்லை என்றும்,

சரத் பொன்சேகாவை விடுதலை செய்யும் நோக்கில் ஐக்கிய தேசியக் கட்சி ஆரம்பித்திருக்கும் இந்தப் போராட்டம் வரவேற்கத்தக்கது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.


# வாழ்வாதார உதவிகள் சிறுவர் நிதியம் அனுசரணை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத்தத்தின் போது மிதிவெடிகளில் சிக்கிப் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் அனுசரணையுடன் சர்வோதய அமைப்பினால் வாழ்வாதார உதவிகள் நேற்றுமுன்தினம் வழங்கி வைக்கப்பட்டன. இந்த வைபவம் மட்டக்களப்பிலுள்ள கிழக்கு மாகாண சர்வோதய அலுவலகத்தில் நடைபெற்றது.

சர்வோதயத்தின் கிழக்கு மாகாண இணைப்பாளர் இ.எல்.ஏ.கரீம் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் கிழக்கு மாகாண அமைச்சர்களான எம்.எஸ்.சுபைர், மற்றும் எம்.எஸ்.உதுமாலெவ்வை உட்பட சமய பிரமுகர்கள் சர்வோதய அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இருபது பேருக்கு இந்த உதவிகள் வழங்கி வைக்கப்பட்டதுடன் சர்வோதய அலுவலக வளாகத்தில் ஆயுர்வேத வைத்தியத்திற்கான மூலிகை மரங்களும் இதன் போது நாட்டி வைக்கப்பட்டன.



பிரான்ஸின் பிராந்தியங்களுக்கிடையிலான மரதன் ஓட்டப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இதில் யாழ். குருநகரைச் சேர்ந்தவரும் தற்போது அங்கு வாழும் தமிழ் இளைஞருமான கெவின் வலத்தேசர் சாதனை படைத்துள்ளார். இதனைப் பாராட்டும் வகையில் கெவினுக்கு 2010/2011ஆம் ஆண்டுக்கான விருதும் 2011ஆம் ஆண்டுக்கான விளையாட்டுத்துறையின் சிறந்த இளம் சாதனையாளர் விருதும் செவிலனுவா நகர விளையாட்டுத்துறை அதிபர் லுக் வொல்வோடிச் மேயர் கிறிஸ்ரியன் ஹெர்வே ஆகியோரால் வழங்கப்பட்டது.

# உத்தியோகத்தர்களுக்கான தேசிய மட்ட விளையாட்டு

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரச சேவை உத்தியோகத்தர்களுக்கான தேசிய மட்ட வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளையும், நாளை மறுதினமும் கொழும்பு டொஜின்டன் விளையாட்டு மைதானத்தில் காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறவுள்ளது.

இவ்வலைப்பந்தாட்டப் போட்டிக்கு யாழ். மாவட்ட அரச அதிபர் வெற்றிக் கிண்ணப் போட்டியின் போது சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்திய கோப்பாய், சண்டிலிப்பாய், யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தைச் சேர்ந்த வீராங்கனைகளைக் கொண்ட அணி யாழ். மாவட்டம் சார்பாக பங்கேற்கவுள்ளது.




அணியில் அங்கம் வகிக்கும் வீராங்கனைகள் விபரம் வருமாறு: எஸ். ஜக்குலின் (அணித் தலைவி), எஸ். மனோன்மணி (உப தலைவி), ஆர். ரூபசிங்கம், ரட்ணகுமாரி, ஆர். அகல்யா, ப. துஷ்யந்தினி, ஆர். தர்ஷினி, கே. கோபிகா, ரி. மணிமொழி, எஸ். பிரேமினி, எஸ். நிசானி, கே. உமா.

யாழ். மாவட்ட அணி நேற்றைய தினம் கொழும்பு சென்றுள்ளது. (எஸ்)

# இன்றைய ஆட்டம்

(முல்லைத்தீவு)

ஜனாதிபதி தங்கக் கிண்ணத்திற்கான கரப்பந்தாட்டப் போட்டி இன்றைய தினம் மல்லாவி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட பிரதேச செயலகங்களான கரைதுரைப்பற்று, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, மாந்தை கிழக்கு ஆகிய பிரதேச செயலகங்களைச் சேர்ந்த அணிகள் பங்கு கொள்கின்றனர்.

பிரதேச செயலக ரீதியாக நடத்தப்பட்டு பின்னர் மாவட்ட மட்ட போட்டிகள் இடம்பெறும் என்றும் மாவட்ட மட்டப் போட்டியில் வெற்றிபெறும் அணி மாகாண மட்டப் போட்டிக்குத் தகுதி பெறும் என்றும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.(93)

# ஒத்திவைப்பு

(புதுடில்லி)

தெற்காசிய விளையாட்டுப் போட்டி அடுத்த ஆண்டு ஒக்டோபர் மாதம் இந்தியாவில் நடத்த திட்டமிடப்பட்டு இருந்தது. தற்போது இந்தப் போட்டி 2013ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. புதுடில்லியில் நேற்று முன்தினம் நடந்த இந்திய ஒலிம்பிக் சங்க பொதுக்குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. இது குறித்து இந்திய ஒலிம்பிக் சங்க நிர்வாகி ஒருவர் கூறுகையில், ஒலிம்பிக் போட்டி முடிந்த 2 மாதத்தில் தெற்காசிய விளையாட்டுப் போட்டி வருவதால் வீரர்கள் பங்கேற்க வசதியாக இருக்காது என்பதால் போட்டி ஒத்திவைக்கப்பட்டு இருக்கிறது.

மேலும் புதுடில்லி அரசு அடுத்த ஆண்டு ஒக்டோபர், நவம்பர் மாதத்தில் வீரர்களுக்கு தங்கும் வசதி அளிப்பதில் சிரமம் உள்ளதாகத் தெரிவித்திருந்தது. இதனை எல்லாம் கருத்திற் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. ஒலிம்பிக் விதிமுறை மாற்றம் குறித்த திட்டம் குறித்து கமிட்டி அமைத்து பரிசீலனை செய்வது என்றும் முடிவு செய்யப்பட்டு இருக்கிறது என்றார்.

# திட்டமிட்டபடி நடைபெறும்

2012 ஆம் ஆண்டு ஆசியக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டி திட்டமிட்டபடி மார்ச் 12 முதல் 22 ஆம் திகதிவரை டாக்காவில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. சிங்கப்பூரில் நடைபெற்ற ஆசிய கிரிக்கெட் சபையின் கூட்டத்தில் இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இதனால் அடுத்த வருடம் இந்தியாவுக்கான பாகிஸ்தான் அணியின் சுற்றுலாவை எதிர்கால கிரிக்கெட் அட்டவணையில் சேர்ப்பதற்கு வாய்ப்பில்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் பிரதம செயற்பாட்டு அலுவலர் சுபான் அஹமட் இது தொடர்பாகக் கூறுகையில், பாகிஸ்தானும் இந்தியாவும் குறிப்பிட்ட காலப்பகுதியில் தமது சுற்றுப்போட்டியை நடத்த சம்மதித்தால் ஆசிய கிண்ணப் போட்டிகளை ஒத்திவைப்பதற்கு முன்னர் இணக்கம் காணப்பட்டிருந்தது. ஆனால், பல காரணங்களால் அந்த யோசனை கைவிடப்பட்டுள்ளது என்றார்.

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரு தரப்பு போட்டிகளை மீள ஆரம்பிப்பதற்கான உறுதிமொழியை இம்மாநாட்டின்போது இந்திய கிரிக்கெட் சபையிடமிருந்து பெற்றுக்கொள்ளும் நம்பிக்கையுடன் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இதில் பங்குபற்றியது.

ஆனால், இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் என். ஸ்ரீனிவாசன் இம்மாநாட்டில் பங்குபற்றாத நிலையில் இது தொடர்பான உறுதிமொழி எதையும் செயலாளர் ரட்னாகர் ரெட்டியினால் வழங்க முடியவில்லை எனவும் சுபான் அஹ்மட் கூறினார்.

அடுத்த வருடம் இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் முழுமையான சுற்றுப்போட்டிகள் நடைபெறமாட்டா என நான் எண்ணுகிறேன். ஆனால் ஆசியக் கிண்ணப்போட்டிகளில் அவ்வணிகள் மோதும் என அவர் தெரிவித்தார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் ஸகா அஷ்ரப், இந்திய கிரிக்கெட் சபைத் தலைவரைச் சந்திப்பதற்காக டிசம்பர் முதல் வாரத்தில் சென்னைக்கு செல்லவிருந்தார். எனினும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் காப்பாளரான ஆசிவ் அலி ஸர்தாரி திடீர் சுகவீனமுற்றதால் இவ்விஜயம் ஒத்திவைக்கப்பட்டது.



ஜின்ரோஸ் போ லா இன்ரகிறேஸன் எனப்படும் அனாதரவற்றோருக்காக ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வு ஒன்றில் ரென்னிஸ் உலகின் இரண்டாம் நிலை வீரரான ரபேல் நடால் மற்றும் ரென்னிஸ் தாரகை மரியா பிரான்ஸிஸ்கோ ஆகியோர் கலந்து கொண்ட போது...


# பங்களாதேஷ் நிதான ஆட்டம்

(டாக்கா)

பாகிஸ்தான் அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் அணி நிதானமாக ஆடி வருகின்றது. பாகிஸ்தான், பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவதும், இறுதியுமான போட்டி டாக்காவில் நேற்று ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத் தடுப்பைத்தீர்மானித்தது.

இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக ஆடிவரும் பங்களாதேஷ் அணி நேற்றைய முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 235 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஒரு கட்டத்தில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 43 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இருப்பினும் சகீர் நசீர், ஷகிப் அல் ஹசன்



ஆகியோரின் சிறப்பான இணைப் பாட்டத்தின் மூலம் கௌரவமான ஓட்ட எண்ணிக்கையை பங்களாதேஷ் அணி பெற்றது. இதில் ஷகிப் அல் ஹசன் ஆட்டமிழக்காது 108 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். மற்றும் சகீர் நசீர் 97 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். பந்து வீச்சில் உமர் குல் இரண்டு, சீமா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

# அவுஸின் தோல்விகளுக்கு பொண்டிங் பொறுப்பல்ல!

(லண்டன்)

தற்போதைய நிலையில் பொண்டிங்கை அணியிலிருந்து நீக்குவதன் மூலம் அவுஸ்ரேலிய அணி தோல்விகளிலிருந்து விடுபடும் என்றில்லை. அவரின் ஆட்டத் திறனின்மையே தோல்விக்குக் காரணம் என்றும் கூறமுடியாது. ஒட்டுமொத்த அணியின் பலவீனமே அதன் தோல்விக்குக் காரணம் என இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரர் இயன் போத்தம் தெரிவித்தார்.

அவுஸ்ரேலிய அணியில் தற்போது இளம்வீரர்கள் குறித்து அதிகம் பேசப்படுகிறது. ஆனால் பிலிப் ஹக்ஸ் மட்டும் இதுவரை எவ்வளவு ஓட்டங்கள் எடுத்துள்ளார், இளம் வீரர்களால் டெஸ்ட் போட்டியை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்ல முடியவில்லை.

பொண்டிங்கை .மட்டும் குறை சொல்வதில் அர்த்தம் இல்லை. ஒட்டு



மொத்த அணியையும் சீரமைக்க வேண்டும். பொண்டிங்கிற்கு அதிக வயதாகி விட்டதாகக் கூறுகிறார்கள்.

வயதான வீரர்கள் அதிகம் உள்ள இந்திய அணி பல்வேறு வெற்றிகளை குவித்து வருகிறது. சச்சின், லட்சுமண், ராவிட், சகீர்கான், சேவாக் என அனைவருமே சிறப்பாக ஆடுகின்றனர் என்றார்.

# கெய்ல் வில்லன் இல்லை



மேற்கிந்தியத்தீவுக் கிரிக்கெட் சபைக்கும் கிறிஸ் கெயிலுக்கும் இடையே நிலவும் மோதல் வருந்தத்தக்கது. கெயிலை மன்னிப்பு கேட்குமாறு கிரிக்கெட் சபை கூறியிருப்பது தவறு. கெயிலை வில்லன் போல் சித்தரித்து மன்னிப்பு கேட்க சொல்லக்கூடாது. அவரது ஆதரவு அணிக்குத் தேவை என மேற்கிந்தியத் தீவு அணியின் முன்னாள் அதிரடி வீரர் விவியன் ரிச்சர்ட்ஸ் தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தில் இரு தரப்பினரும் அனுசரித்து செல்ல வேண்டும். இந்த விடயத்தில் கெய்ல் பக்கம் இருந்து நாம் பார்க்க வேண்டும். ஒட்டுமொத்த பிரச்சினையைப் பார்க்கும்போது இது தேவையற்றதாக தோன்றுகிறது. இப்போதைக்கு அவரது ஆதரவு அணிக்குத் தேவை. அவருடனான உறவை சுமுகமாகப் பேணி அணிக்குள் உள்வாங்க கிரிக்கெட் சபை முன்வரவேண்டும் எனவும் தெரிவித்தார்.

# சச்சினுக்கு பந்து வீசியது புதிய அனுபவம்

பாய்ஸ்

(சிட்னி)

உலகின் முன்னணி ஆட்டக்காரரான டெண்டுல்கருக்கு பந்து வீசியது எனக்கு புது அனுபவமாக இருந்தது. அதை என்னால் மறக்க முடியாது என அவுஸ்ரேலிய அணியின் புதுமுக சுழற்பந்து வீச்சாளர் பாய்ஸ் தெரிவித்துள்ளார். இந்திய அணியுடனான பயிற்சிப் போட்டியின் பின் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர்களுக்கு எதிராக சிறப்பாக பந்து வீசியுள்ளேன். டெண்டுல்கர் நீண்ட நேரம் நிலைத்து நின்று ஆடினார். அதேபோல் லட்சுமண், ராவிட் ஆகியோருக்கு பந்து வீசியதும் நல்ல அனுபவமாக இருந்தது. எனது அணியின் சக வீரர்களுக்கும் நல்ல அனுபவம். இந்திய வீரர்களை நேரில் சந்தித்தது எங்கள் எல்லோருக்கும் சந்தோஷமாக இருந்தது. விளையாடும் 11 பேரில் நான் இடம்பெறுவேனோ தெரியவில்லை என்றார்:

# வடக்கின் போக்குவரத்துப் பிரச்சினைக்கு தாமதமின்றித் தீர்வு காணப்பட வேண்டும்



(கொழும்பு)

வடக்கில் மீள்குடியேற்றப் பிரதேசங்களான கிளிநொச்சி முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் நிலவும் போக்குவரத்துப் பிரச்சினைகளுக்குத் தாமதமின்றி உடனடியாகத் துரித தீர்வு பெற்றுத் தருமாறு ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின பிரதித் தலைவர் முருகேசு சந்திரகுமார் போக்குவரத்து அமைச்சரைக் கேட்டுக் கொண்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் போக்குவரத்து அமைச்சுக்கான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய அவர் மீள் குடியேறியுள்ள மக்களின் போக்குவரத்துத் தேவையை நிவர்த்தி செய்யும் வகையில் இரு மாவட்டங்களுக்கும் போதிய பேருந்து வண்டிகளைப் பெற்றுக் கொடுக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், மீள்குடியேற்றப் பிரதேசங்களான முல்லைத்தீவு டிப்போவுக்கு 35 புதிய பேருந்துகளையும் கிளிநொச்சிக்கு 18 பேருந்துகளையும் பெற்றுக் கொடுப்பதுடன் கிராமப் புறங்களுக்கான பேருந்துச் சேவைகளை நடைமுறைப்படுத்தவும் உரிய நடவடிக்கை எடுப்பது அவசியம்.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில் இ.போ.ச. இலாப மீட்டும் நிறுவனமாக மாற்றம் பெற வேண்டுமானால் மானியம் வழங்கப்பட்டு பற்றாக்குறையான வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். சாரதிகள் பேருந்து நடத்துனர்கள் மற்றும் அத்துறையின் பொறியியலாளர்களுக்கான வெற்றிடங்கள் பெருமளவில் உள்ளன அவற்றை நிரப்புவதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் கிளிநொச்சி, முல்லைத் தீவு மாவட்டங்களுக்கு டிப்போக்களை பெற்றுக்கொடுப்பதும் அவசியமாகிறது. வடக்கில் தனியார் போக்குவரத்தை மேம்படுத்துவதற்குத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். யாழ்ப்பாணத்திலிருந்து ஏனைய மாவட்டங்களுக்குச் செல்வதற்கு தனியார் பேருந்து அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட வேண்டும. இச்செயற்பாடு இடம்பெறாததால் பயணங்கள் மிக ஆபத்தானதாக உள்ளன.

இது விடயத்தில் அமைச்சர் கவனம் செலுத்த வேண்டும். ரயில பாதை நிர்மாணத் திட்டத்தின் கீழ் இதுவரை ஓமந்தை வரை பாதை நிர்மாணிக்கப்பட்டுள்ளது. ஓமந்தையிலிருந்து பளை வரையிலான ரயில் பாதை மற்றும் பளையிலிருந்து காங்கேசன்துறை வரையிலான ரயில் பாதைகள் நிர்மாணிக்கப்பட வேண்டியுள்ளது. இந்த நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறும் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் போக்குவரத்து அமைச்சரைக் கேட்டுக்கொண்டார்.

# விசுவமடு பழைய சந்தைக் காணி கைநழுவிப்போனதன் காரணம் என்ன?

(புதுக்குடியிருப்பு)

போருக்கு முன்னைய காலங்களில் குறிப்பாக இருபத்தெட்டு வருடங்களாக புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் கீழ் இயங்கிய விசுவமடு பொதுச் சந்தைக்காணி தற்போது கைமாறப்பட்டுள்ளதாக பொதுமக்கள் மத்தியில் மனக்கசப்புகள் நிலவி வருவதாக அறியமுடிகிறது.

தற்போது பொதுச் சந்தைக் காணியில் தங்கள் நடவடிக்கைச் செயற்பாடுகளை விசுவமடு விவசாயிகள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமே செயற்படுத்தி வருவதாகவும் அறிய முடிகிறது.

இவ்விடயம் குறித்து இது வரை புதுக்குடியிருப்புப் பிரதேச சபையோ அல்லது உதவி அரசாங்க அதிபரோ அன்றி முல்லைத்தீவு அரச அதிபரோ இக் காணியின் உரித்தானது எவ்வாறு கைமாறப்பட்டது என்பது பற்றி எந்தவிதமான பதிலோ, நடவடிக்கையோ எடுக்கவில்லை என்றும் பொதுமக்கள் மத்தியில் அதிர்ச்சியும், கவலையும் தோன்றியுள்ளது. (138)

# கதாப்பிரசங்கம் இலவசப் பயிற்சி

(கொழும்பு)

சைவத் தமிழர்களின் கலைப் பாரம்பரியங்களில் ஒன்றான கதாப்பிரசங்கக் கலை, தமிழர் மத்தியில் அருகிவருவதனால் அக்கலையை வளர்க்கும் பொருட்டு கதாப்பிரசங்கக் கலைப் பயிற்சியினை கொழும்பு தமிழ்ச் சங்கம் வழங்கி வருகிறது என அதன் செயலாளா ஆர்.இரகுபதி பாலஸ்ரீதரன் அறிவித் துள்ளார்.

கொழும்பு வாழ் சைவத் தமிழ் மாணவர்களிடையே இக்கலையை வளர்க்கும் பொருட்டு இலவசமாக இக் கலைப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. (06)



# நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை ஐ.நா.உறுப்பு நாடுகளின் பரிசீலனையில்

(ஜெனிவா)

நல்லிணக்க ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டிருக்கும் இறுதி அறிக்கை ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவ நாடுகள் பல தீவிரமாகப் பரிசீலித்து வருகின்றன.

ஏற்கனவே வெளியாகிய ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழு அறிக்கையின் உள்ளடக்கங்களை கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்கு அறிக்கை கொண்டிருக்கிறதா என்பதை மேற்படி ஐ.நா.வின் உறுப்பு நாடுகள் தீவிரமாகக் கவனிக்கும் என்று நம்புவதாக ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூனின் பேச்சாளர் பர்ஹான் ஹக்ரூ கூறியுள்ளார். அத்துடன், நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பாக உடனடியாகத் தம்மால் கருத்து தெரிவிக்க முடியாது என்று கூறியுள்ள அவர், மேற்படி நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் நன்றாக ஆய்வு செய்ய வேண்டியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கொழும்பு மறைமாவட்டத்துக்கு இரு துணை ஆயர்கள் நியமனம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இம்மானுவேல் பெர்னாண்டோ அடிகளாரும், கொழும்பைப் பிறப்பிடமாகக் கொண்ட மக்ஸவெல் சில்வா அடிகளாரும் கொழும்பு மறைமாவட்டத்தின் புதிய துணை ஆயர்களாக பாப்பரசரினால் நியமனம் பெற்றுள்ளனர். பாப்பரசரின் இலங்கைப் பிரதிநிதி அதிமேதகு ஜோசப் செபிரி ஆண்டகை பாப்பரசர் 16ஆம் பெனடிற்றின் மேற்படி அறிவிப்பை உத்தியோகபூர்வமாக வெளியிட்டு வைத்தார்.

புதிய துணை ஆயர்களின் ஆயர் பட்டமளிப்பு நிகழ்வு எதிர்வரும் 2012 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

தமிழ் குருவான இம்மனுவேல் பெர்னாண்டோ அடிகளார் 1948 இல் யாழ்ப்பாணத்தில் பிறந்தவர். கண்டி தேசிய குருமடத்திலும், உரோமாபுரியிலும் குருத்துவக் கற்கைநெறியை மேற்கொண்ட இவர் 1973இல் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். அமெரிக்காவில் இறையியல் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்ட இவர் கண்டி தேசிய குருமடத்தின் அதிபராகப் பணியாற்றினார். அத்துடன் கொழும்பு மாமறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பணிகளுக்குப் பொறுப்பானவராக தற்போது வரை பணியாற்றி வருகிறார்.

1953 இல் கொழும்பில் பிறந்த மக்ஸ்வெல் சில்வா அடிகளார் கண்டி தேசிய குருமடத்தில் குருத்துவக் கற்கைநெறியை நிறைவு செய்து 1981இல் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். கோட்டை சென்.தோமஸ் கல்லூரியின் அதிபராக தற்போது பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. (21)

# யாழ்.நகரின் இன்றைய யதார்த்தம்!



பெண் என்றால் பேயும் இரங்கும் என்பது பழமொழி. இப்போதெல்லாம், பெண் என்றால் பிச்சைக்காரனும் சேஷ்டை விடுவான் என்று ஆகிவிட்டது.

இது தினமும் தென்மராட்சிப் பகுதியிலிருந்து பேருந்தில் யாழ்ப்பாணத்துக்கு தொழிலுக்காக வந்து செல்லும் இளம் பெண் ஒருவரது வாயிலிருந்து உதிர்த்த வேதனைக் குரல்.

பிச்சைக்காரன் மீது இரக்கப்பட்டு பிச்சைபோட நினைச்சா அதை வாங்கும் சாட்டில் கையைத் தட்டிப் பாரக்கத் துணிந்துவிடுகிறார்கள் என்கிறார் அந்தப் பெண் வேதனையுடன்.

அங்கவீனமான ஆண்கள், அங்கத்தில் எந்தவிதக் குறைபாடும் இல்லாத ஆண்கள், வயோதிபர்கள் என நாளுக்குநாள் புதுப் புது முகங்கள் யாழ் பேருந்துத் தரிப்பிடத்தில் பிச்சை எடுக்க ஆரம்பித்துவிட்டன.

இதனால், பிச்சைக்காரனைக் கண்டால் இருந்த இடத்தை விட்டு ஓடி ஒளியும் நிலையே இப்போது யாழ்.பேருந்து நிலையத்தில் காணப்படுகிறது.

அத்துடன் பேருந்தில் பிச்சை கேட்டு வரும் பிச்சைக்காரர்கூட பெண்களிடம் சேஷ்டை விடுகின்றனர் என்று தெரிவித்த வேறு சில பயணிகள் பேருந்தில் ஏறிப் பிச்சை எடுப்பதை போக்குவரத்துச் சபை தடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டனர்.


பேருந்தில் பயணம் செய்யும் பெண்களைப் பாலியல் ரீதியில் துன்புறுத்துவோருக்கு 5 வருட சிறைத் தண்டனையை வழங்க தற்போது சட்டத்தில் இடமுள்ளதாக சட்ட உதவி ஆணைக்குழுவின் தலைவர் எஸ்.எஸ்.விஜயரட்ண தெரிவித்துள்ளார். பேருந்தில் பயணிக்கும்போது பாலியல் ரீதியில் துன்புறுத்தப்படும் பெண்கள் பேருந்தினர் சாரதி, நடத்துநர் மற்றும் பொலிஸாரிடம் தயக்கமின்றி முறையிட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை பெண்களிடம் சேஷடைவிட்ட 3 இளைஞர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை சுன்னாகம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஏழாலை மத்திய மகா வித்தியாலயத்திற்கு முன்பாகக் கூடும் இளைஞர் கும்பல் ஒன்று தினமும் அந்த வழியால் செல்லும் பெண்களிடம் சேஷ்டை செய்து வந்துள்ளனர். அத்துடன் இந்த இளைஞர் கும்பலிடையே ஏற்பட்ட முரண்பாட்டைத் தொடர்ந்து இவர்கள் கைகலப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இதனை அவதானித்த பிரதேச மக்கள் சுன்னாகம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதையடுத்து இந்த இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**சிகரம் ஊடக இல்ல மாணவர்கள்**





**கிளிநொச்சி மாவட்ட கரைச்சிப் பிரதேச செயலகத்தில் 30 வருடங்களாகக் கடமையாற்றிய பொன்னம்பலம் தர்மலிங்கத்தின் சேவை நலன் பாராட்டு விழாவில் விழாநாயகனுடன் உத்தியோகத்தர்கள் நிற்பதையும், பிரதேச செயலக பிறப்பு, இறப்புப் பதிவு உத்தியோகத்தர் தட்சாயினி உரையாற்றுவதையும் காணலாம். (77)**

# மால்வேர் பாதிப்பை நீக்கும் வழிகள்

உங்களுடைய கம்ப்யூட்டரை கெடுதல விளைவிக்கும் மால்வேர் புரோகிராம்கள் பாதித்து விட்டனவா? அதற்கான அறிகுறிகள் தெரிகின்றனவா? வழக்கத்திற்கு மாறாக, கம்ப்யூட்டர் மெதுவாக இயங்குகிறதா? நிறைய பொப் அப் பெட்டிகள் கிடைக்கின்றனவா? புதுப்புது பிரச்சினைகள் தலை தூக்குகின்றனவா? அப்படியானால், உங்கள் கம்ப்யூட்டரை வைரஸ், ஸ்பைவேர் அல்லது வேறு ஏதேனும் மால்வேர் புரோகிராம்கள் பாதித்திருக்கக்கூடிய வாய்ப்புகள் உண்டு. இந்த பிரச்சினைகள், ஹார்ட்வேரில் பிரச்சினைகள் ஏற்பட்டாலும் தென்படலாம். இருப்பினும் மால்வேர் இருக்கின்றனவா என்று சோதனை செய்து உறுதி செய்து கொள்வது நல்லது.

1. சேப் மோட்: உங்களுடைய கம்ப்யூட்டரை இன்டர்நெட் இணைப்பிலிருந்து நீக்கவும். கம்ப்யூட்டரை சுத்தப்படுத்த நீங்கள் தயாராகும்வரை இன்டர்நெட் இணைபபினைத் தரவேண்டாம். இதன் மூலம் உங்கள் கம்ப்யூட்டரில் உள்ள மால்வேர், பரவுவதையும், உங்கள் தனிப்படட தகவல்களை மற்றவர்களுக்கு அனுப்புவதனையும் தடுக்கலாம். சேப் மோடில் (Safe Mode) பூட் செய்வதற்கு கம்ப்யூட்டரை Shut down செய்து, பின்னர், கம்ப்யூட்டரை இயக்கி, திரையில் ஏதேனும் தென்பட்டவுடன், எப்8 கீயினைத் தட்டிக் கொண்டே இருக்கவும். இதனால், Advanced Boot Options என்ற மெனு கிடைக்கும். அதில் Safe Mode with Networking என்பதைத் தேர்ந்தெடுத்து Enter தட்டவும். சேப்மோடில் உங்கள் கம்ப்யூட்டர் இதற்கு முன் இருந்ததைக் காட்டிலும் சற்று வேகமாக இயங்குவதனைக் காணலாம். அவ்வாறு இயங்கினால், மால்வேர் நிச்சயம் உங்கள் கம்ப்யூட்டரில் உள்ளது.

2. தற்காலிக பைல் நீக்கம்: சேப் மோடில் இருந்தபடி, தற்காலிக பைல்களை நீக்கவும். இதனால், டிஸ்க் இடம் சற்று கூடுதலாகக் கிடைக்கும். Virus Scanning வேகமாக நடைபெறும். விண்டோஸ் இயக்கத்துடன் வரும் Disk Cleanup utility ஐப் பயன்படுத்த, Start> All Programs (or just Programs)> Accessories> System Tools> Disk Cleanup எனச் செல்லவும்.

3. **Malware Scanner** தரவிறக்கம்: ஏற்கனவே உங்கள் கம்ப்யூட்டரில் செட் செய்து வைத்திருந்த Anti Virus புரோகிராமிற்குப் பதிலாக, வேறொரு மால்வேர் ஸ்கேனிங் அல்லது எதிர்ப்பு புரோகிராமினை இயக்கவும். இதற்காக, இணையத்திலிருந்தும் இறக்கிக் கொள்ளலாம். இலட்சக் கணக்கில் மால்வேர் புரோகிராம்கள் மற்றும் வைரஸ்கள் இருப்பதால், எந்த ஒரு Anti Virus மற்றும் மால்வேர் எதிர்ப்பு புரோகிராம்கள் அவை அனைத்தையும் நீக்கும் என எண்ண வேண்டாம். மால்வேர்களை அழிக்கும் புரோகிராம்கள் பல உள்ளன. அவற்றில் ஒன்றை தரவிறக்கம் செய்து பயன்படுத்தவும். அதனை அடுத்து, கம்ப்யூட்டரில் உள்ள Anti Virus புரோகிராமினைப் பயன்படுத்தலாம். கீழ்க் காணும் புரோகிராம்கள் இந்த வகையில் அதிகப் பயனுள்ளவை. MBitDefender Free Edition, Kaspersky Virus Removal Tool, Malwarebytes, Norman Malware Cleaner, மற்றும் Super Anti Spyware.

4. **Malwarebytes Scan** : இந்தவகையில் மிகச் சிறந்த Malwarebytes புரோகிராமினை இயக்குவது நல்லது. உங்களிடம் இந்த புரோகிராம் இல்லை என்றால், http://www.malwarebytes.org/ என்ற இணைய தளத்திலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம். இதனை கம்ப்யூட்டரில இன்ஸ்டோல் செய்த பின்னர், இணைய இணைபபினை நிறுத்தி விட்டு, Scan செய்யலாம்.





மால்வேர் பைட்ஸ் Scan செய்கையில் 'Perform quick scan' என்பதைத் தேர்ந் தெடுத்து இயக்கவும். அதிகபட்சம் 20 நிமிடங்கள் முதல் 30 நிமிடங்கள் வரை இந்த Scan பணி செயற்படுத்தப்படும். இந்தப் பணி நடைபெறு கையில், இந்த Scanner மறைந்து பின்னர் அதனை மீண்டும் பெற இயலவில்லை என்றால், உங்கள் கம்ப்யூட்டரில் 'ரூட்கிட் என்ற வைரஸ் அல்லது அதனைப் போன்று செயற்படும் வைரஸ் உள்ளது என்பது உறுதி. ஏனென்றால், இந்த வகை வைரஸ்கள், எந்த Scanner ஐயும் இயங்கவிடாமல், அவற்றையும் முடக்கிவிடும் தன்மை கொண்டன. அப்படிப்பட்ட வைரஸ் இருந் தால், உங்கள் பைல்கள் அனைத்தையும் Backup செய்த பின்னர், விண்டோஸ் இயக்கத்தை மீண்டும் ரீ இன்ஸடோல் செய்வதே சிறந்த வழியாகும்.

மால்வேர் பைட்ஸ் வெற்றிகரமாக இயங்கி முடித்த பின்னர், பைல்களின் நிலை குறித்த அறிக்கை ஒன்று டெக்ஸ்ட் பைலாகக் கிடைக்கும். சந்தேகப்படும் படியான பைல்களையும், பாதிக்கப்பட்ட பைல்களையும் பட்டியலிட்டுக் காட்டும். இவற்றை நீக்கவா என்ற கேள்வியும் கேட்கப்படும். இவற்றை நீக்குவதே நல்லது. இவை நீக்கப்பட்டவுடன் மால்வேர் பைட்ஸ் உங்கள் கம்ப்யூட்டரை மீண்டும் இயக்குமாறு கேட்கும். ஓகே கிளிக் செய்து இயக்கவும். மால்வேர் புரோகிராம்கள் நீக்கப்பட்டு, கம்ப்யூட்டர் மறுபடியும் இயங்கத் தொடங்கியவுடன், வழக்கமான Anti Virus புரோகிராம் மூலம், கம்ப்யூட்டரின் அனைத்து ட்ரைவகளையும் சோதனை செய்திடவும்.

5. பிரவுசரை சரி செய்க: மால்வேர் தொகுப்புகள், விண்டோஸ் சிஸ்டம் பைல்களைக் கெடுப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. அத்துடன் நம் பிரவுசரில் மாற்றங்களை ஏற்படுத்தி, தொடர்ந்து கம்ப்யூட்டரில் இத்தகைய மால்வேர் புரோகிராம்கள் நுழைந்திட வழி வகுக்கின்றன. எனவே அடுத்த இணைய இணைப்புக்கு முன்னர், பிரவுசரின் அனைத்து Settings களையும் ஒருமுறை சோதனை செய்து பார்த்து விடுவது நல்லது.

6. சிஸ்டம் பைல் சரி செய்தல்: ஒன்றும் செயல்படுத்த முடியாமல் போய், விண்டோஸ் இயக்க பைல்களை மீண்டும் பதிப்பதுதான் ஒரே வழி என்றால், அனைத்து பைல்கள், ட்ரைவர்களை Backup எடுக்க வேண்டும். இதற்கு Double Driver என்ற புரோகிராம் உதவும். உங்களிடம் ட்ரைவர் சிடிக்கள் இல்லை என்றாலும், இந்த புரோகிராம் உங்களுக்கு உதவிடும்.

# எச்சரிக்கை: புதிய ஃபேஸ்புக் வைரஸ்



இணையப் பாதுகாப்பு தரும் நிறுவனம் ஒன்று, புதிய வகை வைரஸ் ஒன்று ஃபேஸ்புக் வழியாகப் பரவி வருவதாக எச்சரித்துள்ளது. ஏற்கனவே ஃபேஸ்புக் தளத்தில் தங்கள் கணக்கைத் திறந்து வைத்து இயங் கும் நபர்களின் கம்ப்யூட்டரை இது தாக்குகிறது. ஒரு இமேஜ் பைல் போல மெசேஜ் அனுப்பப்படுகிறது. உண்மையில் அது இமேஜ் அல்ல. இதில் கிளிக் செய்தால், .scr என்ற துணைப் பெயருடன் கூடிய பைல் ஒன்று உள்ளது. இதில் கிளிக் செய்தவுடன் ZeuS crimeware என்ற வகை வைரஸ் ஒன்று உள்ளே நுழைகிறது. தற்போது இது Win32.HLLW. Autoruner. 52856 மற்றும் Heure: Trojan.Win32.Generic. ஆகிய வைரஸ்களாகக் கண்டறியப்பட்டுள்ளது. உங்கள் ஃபேஸ்புக் தளத்தில் எந்த இமேஜ் பைலாக இருந்தாலும் அதில் கிளிக் செய்திடும் முன் ஒருமுறை யோசிக்கவும்.

# இணைய இணைப்பு எப்படி இயங்குகிறது?

எங்கோ ஒரு மூலையில் இயங்கும் கணினியில் உள்ள தகவலை, பாட்டை, சினிமாவை, விளையாட்டை எப்படி இன்டர்நெட் நம் கணினிக்குக் கொண்டு வருகிறது? என்ற கேள்வி இன்டர்நெட்டைப் பயன்படுத்தும் அனைவருக்கும் இருக்கும். எப்படி உங்கள் கணினியை இன்டர்நெட் மூலம் தகவல்கள் வந்தடைகின்றன என்று பார்க்கலாம்.





கணினியை இயக்கி இன்டர்நெட் இணைப்பை உயிர்ப்பித்து பிரவுசரின் அட்ரஸ் பாரில் ஓர் இணையத்தளத்தின் முகவரியை தட்டச்சு செய்து எண்டர் தட்டுகிறீர்கள். பிரவுசர் எதுவாக வேண்டுமானாலும் -- இன்டர்நெட் எக்ஸ்புளோரர், மோஸில்லா ஃபயர்பொக்ஸ், சபாரி, கிரேஸி பிரவுசர், கூகுள் குரோம் -- என எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். இதனை "கிளையண்ட்" என அழைக்கிறோம். "வாடிக்கையாளர்" என வைத்துக் கொளவோம்.

இந்த வாடிக்கையாளர் நீங்கள் தேவை என்று சொன்ன, இணையத்தளம் வேண்டும் என்று சொன்ன உங்கள் வேண்டுகோளை உங்களுக்கு இன்டர்நெட் இணைப்பு தரும் நிறுவனத்தின் சேர்வருக்கு அனுப்புகிறது. அந்த சேர்வர், தான் இணைக்கப்பட்டுள்ள இன்னொரு சேர்வருக்கு அதனை அனுப்புகிறது. அந்த சேர்வரும் அரசாங்க அலுவலகத்தில ஒரு பைல் மேசைக்கு மேசை போகிற மாதிரி அப்படியே அனுப்புகிறது. ஐ.எஸ். பி. சேர்வரிலிருந்து இந்த வேண்டுகோள் அதிவேக வழியில் செல்கிறது. இப்படியே சென்று நீங்கள் டைப் செய்த முகவரி உள்ள தளத்தை அடைகிறது. அதனை "உபசரிப்பவர்" என்று வேண்டுமானால் வைத்துக் கொள்ளலாம்.

அந்த உபசரிக்கும் சேர்வர் பின் நீங்கள் கேட்டுக்கொண்டபடி தன் தளத்தில் உள்ள தகவல்களை பொதி பொதியாக உங்கள் வேண்டுகோள் பயணித்த அதே பாதையில் உங்கள் ஐ.எஸ்.பி. நிறுவனத்தின் சேர்வருக்கு அனுப்புகிறது. நீங்கள் இணைப்பு பெற்றிருக்கும் அந்த நிறுவன சேர்வர் பின் அதனை உங்கள் கணினிக்கு அனுப்புகிறது. இவ்வளவு தானா என்று நீங்கள் கேட்பது புரிகிறது. ஆனால் விஷயம் அவ்வளவு எளிது அல்ல. இதில் ஏகப்பட்ட சிக்கல்கள் உள்ளது.

நாம் ஒரு இணையத்தளத்தின் முகவரியை சொற்களில் அமைத்து அனுப்புகிறோம். இந்தச் சொற்கள் கம்ப்யூட்டருக்குத் தெரியாதே? எனவே தான் கம்ப யூட்டர்கள் அறிந்து புரிந்து கொள்ளும் பாஷையில் மாற்றி அனுப்ப வேண்டியதுள்ளது. இதற்கு புரோட்டோகால் என்னும் வழிமுறை உதவுகிறது. புரோட்டோகால் என்பது இரண்டு கம்ப்யூட்டர்கள் இடையே தகவல் பரிமாறிக் கொள்ள அமைக்கப்பட்ட முறைமை எனச் சொல்ல லாம். இது டி.சி.பி., ஐ.பி., எச்.டி.டி.பி., எப்.டி.பி., எஸ்.எம்.டி.பி., மற்றும் வை-பி (TCPIP, HTTP, FTP, SMTP, WiFi) எனப் பலவகைப்படும். நாம் பொதுவாக டி.சி.பி - ஐ.பி. பயன்படுத்துவதால் அது குறித்து காண்போம்.





இன்டர்நெட்டில் இணைக்கப்படும் ஒவ்வொரு கம்ப்யூட்டருக்கும் ஒரு ஐ.பி. முகவரி தரப்படுகிறது. இது சொல்லில் இருக்காது. 0 லிருந்து 255 வரையிலான எண்களின் கோர்வையாக இருக்கும். எடுத்துக்காட்டாக www.yahoo.com என்னும் தளம் உள்ள சேர்வரின் எண் 82.248.113.14 ஆகும். இது இதன் நிலையான எண். உங்கள் கம்ப்யூட்டர் நெட்டில் இணையும்போது உங்களுடைய ஐ.எஸ்.பி. உங்களுக்கு ஒரு முகவரியை எண்களில் ஒதுக்கும். ஆனால் அது நிலையானது அல்ல. நீங்கள் அப்போது இன்டர்நெட்டில் இருக்கும் வரையில் அந்த முகவரி உங்களுக்குச் சொந்தமானது. முடித்துவிட்டு மீண்டும் செல்கையில் மீண்டும் ஒரு முகவரி வழங்கப்படும்.

இதற்குக் காரணம் ஒரு ஐ.எஸ்.பி. ஒரேநேரத்தில் நூற்றுக்கணக்கான கம்ப்யூடடர்களை நெட்டில் இணைக்க வேண்டியுள்ளதால் அவ்வப்போது எண்கள் தரப்படுகின்றன. இந்த எண்களின் கோவை நான்கு இலக்கங்களால் ஆன தொடராக ஒவ்வொரு எண்ணும் ஒரு புள்ளியால் பிரிக்கப்பட்டிருக்கும். எடுத்துக்காட்டாக 123.467.87.23 என்றுகூட இருக்கலாம். இந்த எண்களிலான முகவரி முக்கியமானது. ஏனென்றால் இந்த முகவரியை வைத்துத்தான் இன்டர்நெட்டில் எந்த கம்ப்யூட்டர் வேண்டுகோளை வைத்தது, எந்த கம்ப்யூட்டரிலிருந்து தகவல் வர வேண்டியுள்ளது என்று தெரியவரும்.

டி.சி.பி. (Transmission Control Protocol) என்பது அனுப்பப்படும் தகவல்களைக் கையாளும் வழிமுறை. தகவல்களை சிறு சிறு பொதிகளாகப் பிரித்துப் பின் மீண்டும் சேரும் இடத்தில் அவற்றை இணைத்து ஒழுங்காகத் தருவதே இந்த வழிமுறையின் செயற்பாடு. ஐ.பி முகவரி எங்கிருந்து எங்கு இந்த தகவல்கள் போய்ச் சேர வேண்டும் என்பதை உறுதி செய்கிறது. எனவே இந்த இரண்டு வழிமுறைகளும் இணைந்து தகவல் பரிமாற்றத்தை உறுதி செய்கின்றன.

# இன்னும் 2 வாரத்தில் தொடங்குவோம்



(மொஸ்கோ)

கூடங்குளம் அணுமின் நிலையத்தில் அடுத்த 2 வாரங்களில் மின்உற்பத்தி தொடங்கும் என்று பிரதமர் மன்மோகன் சிங் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

3 நாள் பயணமாக ரஷ்ய தலைநகர் மொஸ்கோவுக்கு பிரதமர் மன்மோகன் சிங் சென்றுள்ளார். அங்கு ரஷ்ய ஜனாதிபதி மெத்வ தேவை அவர் நேற்றுமுன்தினம் சந்தித்து இந்திய, ரஷ்ய உறவு பற்றி பேச்சு நடத்தினார். பேச்சின்போது கூடங்குளம் அணுமின் நிலையத்தில் இப்போது 2 அணு உலைகள் அமைக்கப்பட்டுள்ள நிலையில், 3 மற்றும் 4ஆவது அணுஉலைப் பிரிவுகள் அமைப்பது தொடர்பாகவும் ரஷ்ய ஜனாதிபதியுடன் மன்மோகன் சிங் விவாதித்ததாகக் கூறப்படுகிறது.

சந்திப்புக்குப் பிறகு நிருபர்களிடம் மன்மோகன் சிங் தெரிவித்ததாவது, கூடங்குளம் அணுமின் நிலையத்தைச் சுற்றியுள்ள பகுதி மக்களிடையே அச்ச உணர்வு காரணமாக இப்போதுசிறிது பிரச்சினை உள்ளது. அவர்களது அச்சம் விரைவில் போக்கப்படும். அணு உலையால் மக்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்று தெளிவுபடுத்தப்படும். இன்னும் 2 வாரங்களில் முதலாவது அணுஉலையில் மின்உற்பத்தி தொடங்கும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை கூடங்குளத்தில் மேலும் அணு உலைகள் அமைப்பதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத் திட்ட பிரதமர் மன்மோகன் சிங் ரஷ்ய சென்றுள்ளதைக் கண்டித்து, நேற்றுமுன்தினம் முதல் இடிந்த கரை லூர்து மாதா ஆலயம் முன் கிராம மக்கள் 72 மணி நேர தொடர் உண்ணாவிரதம் தொடங்கினர். மேலும், 3 நாட்களை கூடங்குளம் பகுதியைச் சுற்றியுள்ள கிராம மக்கள் துக்க தினமாக அனுஷ்டித்து வீடுகள், கடைகள் மற்றும் படகுகளில் கறுப்புக் கொடி ஏற்றியுள்ளனர்.

# வரிப் பணத்தில் இரட்டைச் சம்பளம்

(லக்னோ)

உத்தரப்பிரதேச மாநில சிறு தொழில் துறை அமைச்சர் ராம் யாதவ், அமைச்சருக்கான சம்பளத்துடன், பாடசாலை அதிபருக்கான சம்பளத்தையும், கடந்த ஐந்தாண்டுகளாகப் பெற்று வந்த தகவல், தற்போது வெளியாகியுள்ளது.

உ.பி. மாநில சிறு தொழில்துறை அமைச்சராக இருப்பவர் சந்திரதியோ ராம் யாதவ். இவர், அஜாம்கார் மாவட்டத்தில், அரசு உதவி பெறும் பாடசாலையை நடத்தி வருகிறார். இந்த பாடசாலை அதிபராக, தானே பணியாற்றி வருவதாகக் கூறி, அதற்கான சம்பளத்தை, மாதம்தோறும் பெற்று வந்துள்ளார்.

அதே நேரத்தில், அமைச்சருக்கான சம்பளத்தையும், கடந்த ஐந்தாண்டுகளாகப் பெற்று வந்துள்ளார். அமைச்சராகவோ, எம்.எல்.ஏ.வாகவோ இருப்பவர், வேறு எந்த அரசுப் பணியிலும் இருக்கக் கூடாது என்ற விதி உள்ளது. இந்த விதிமுறையை மீறி, இரண்டு பணிகளுக்கான சம்பளத்தையும் பெற்று வந்துள்ளார்.

லோக் ஆயுக்தா நீதிமன்றம் நடத்திய விசாரணையில், இந்தத் தகவல் தெரியவந்துள்ளது. இது தொடர்பாக, வரும் 23ஆம் திகதிக்குள் பதில் அளிக்கும்படி, ராம் யாதவுக்கு, லோக் ஆயுக்தா நீதிமன்று கடிதம் அனுப்பியுள்ளது.

இந்தியச் செய்திகள்

# இரு மாநில முதலமைச்சர்களும் அணைப் பிரச்சினை குறித்துப் பேசவேண்டும்

## அப்துல்கலாம் யோசனை

(திருவனந்தபுரம்)

முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் சுமூக தீர்வு ஏற்பட தமிழக, கேரள முதலமைச்சர்கள் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் கேட்டுக் கொண்டுள்ளார்.

கேரள மாநிலம் திருவனந்தபுரம் அருகே சைனிக் பள்ளியில் நடந்த விழாவில், முன்னாள் குடியரசுத்தலைவர் அப்துல் கலாம் பங்கேற்றார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இரு மாநிலங்களுக்கும் இடையே பல நூற்றாண்டுகளாக இருந்து வரும் நல்லுறவு, அணைப் பிரச்சினையால் பாதிக்கப்படக் கூடாது.

முல்லைப் பெரியாறு அணை குறித்து இரு மாநில முதலமைச்சர்களும் நேரில் பேசி, சுமுகமாக பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று கூறினார். அவ்வாறு முதலமைச்சர்கள் பேசும் போது, அணையின் பாதுகாப்பு, செலவு, பயன்பாடு ஆகியவை குறித்தும் விவாதிக்க வேண்டும். என்று கேட்டுக்கொண்டார்.

முதல்வர்கள் அளவில், அமைச்சர்கள் அளவில், செயலர்கள் அளவில் என ஏற்கெனவே நூற்றுக் கணக்கான சுற்றுக்கள் பேச்சுவார்த்தை நடத்தி, தொடர்ந்து கேரளா விஷமத்தனமாக நடந்து கொண்டதால், உச்சநீதி மன்றம் போய்--தமிழகம் தனக்கு சாதகமான தீர்ப்பைப் பெற்ற நிலையில், மீண்டும் பேச்சு வார்த்தை எனக் கலாம் யோசனை கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எரிகின்ற வீட்டில் கொள்ளி பிடுங்கிறது என்பது இதுதான்



பாதுகாப்பா...பகல் கொள்ளையா...! என்ன யாருக்கோ இவ்வளவு அவசரமா ஜூஸ் வாங்கிட்டு போராரே... எல்லாம் உயர் அதிகாரிக்குத்தானாம்... இவ்வளவு நாள் வாங்கிக் கொடுத்தது பரவாயில்லை சற்று முன்னர்தானாம் குறிப்பிட்ட கடையை முல்லை பெரியாறு அணை தொடர்பாக சிலரால் உடைக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டது. அதற்கு பாதுகாப்பிற்கு வந்த பொலிஸ்தான் உயர் அதிகாரிக்குன்னு சும்மா காச்சி (காசுக் கொடுக்காமல்) அவசர, அவசரமாக வாங்கிட்டு போராரு.

# எனக்கொன்றும் பெரிய ஆசை இல்லை

(நாக்பூர்)

இரண்டடி ஒரு அங்குலம் உயரமே கொண்ட, நாக்பூரைச் சேர்ந்த ஜோதி அம்ஜி,18, உலகிலேயே மிகவும் உயரம் குறைவான பெண்ணாக, கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம் பிடித்துள்ளார். உலக சாதனை புத்தகத்தில் பெயர் இடம் பெற்றது குறித்து அறிந்ததும், ஜோதி அம்ஜி ஆனந்தக் கண்ணீர் விட்டார்.

அவர் கண்ணீருடன் கூறுகையில், இதன் மூலம், நாக் பூரை உலக வரைபடத்தில் சேர்த்துள்ளேன். பாடசாலைக் கல்வி முடித்துள்ள நான், விரைவில் பட்டம் பெற முயற்சிப்பேன் என்றார். இவர், நான்கு மாத குழந்தையாக இருந்த போது, வளர்ச்சியை தடுக்கும் அகோண்ட்ரோ பிளாசியா என்ற நோய் தாக்கவே, அவரது உயர வளர்ச்சி நின்றது. இவர், தன் 16 ஆவது வயதிலும், 2009ஆம் ஆணடில் உலகில் உயரம் குறைந்த சிறுமி என, கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றார். இவர், ஏற்கனவே, ஜப்பான் நாட்டு திரைப்படத்தில் நடித்துள்ளார். மேலும், நஷனல்



ஜியோகிரபி தொலைக்காட்சி அலைவரிசையிலும் பங்கேற்றுள்ளார். ஒரு ஹிந்தி படத்தில் நடிக்க வேண்டும் என்பதே, அப்பெண்ணின் கனவாக இருந்து வருகிறது. இதற்கு முன்பாக, உலகில், உயரம் குறைந்த பெண்ணாக, அமெரிக்காவைச் சேர்ந்த பிரிட்ஜெட்டி ஜோர்டான், 22 இருந்து வந்தார். அவருக்கும் முன்பாக, துருக்கி நாட்டைச் சேர்ந்த எலிப் கோகாமன் (28.5 அங்குலம்), அதற்கு முன், நெதர்லாண்ட் நாட்டைச் சேர்ந்த பாவ்லின் மஸ்டர்ஸ் (24 அங்குலம்) இருந்தனர். பாவ்லின் மஸ்டர்ஸ், தன் 19 ஆவது வயதில், நிமோனியா நோயால் பாதிக்கப்பட்டு, 1895ஆம் ஆண்டு இறந்தார் என்பது குறிபிடத்தக்கது.

## கள்ளச்சாராய விவகாரம்

# பலியானோர் 171 ஆக உயர்ந்தது

(கொல்கத்தா)

மேற்கு வங்கத்தில் விஷச் சாராயம் குடித்து, சிகிச்சை பலனின்றி பலியானவர்கள் எண்ணிக்கை, 171 ஆக உயர்ந்துள்ளது. இவ்வழக்கில், மேலும் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேற்கு வங்கம், தெற்கு, 24 பர்கானாஸ் மாவட்டத்தில் உள்ள, மோக்ராஹத் கிராமத்தில், கடந்த 13ஆம் திகதி இரவு விஷச் சாராயம் குடித்த, 500இற்கும் மேற்பட்டோருக்கு வாந்தி, மயக்கம், பேதி ஏற்பட்டு பல்வேறு மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர். இவர்களில் பெரும்பாலோர் கை ரிக்ஷா தொழிலாளிகள். இவர்களில் சிகிச்சை பலனின்றி இறந்தவர்கள் எண்ணிக்கை, 171 ஆக நேற்று உயர்ந்துள்ளது.

மேலும், பலரது உடல் நிலை கவலைக்கிடமாக இருந்து வருகிறது.

பொலிஸாரின் முதல்கட்ட விசாரணை மற்றும் விஷச் சாராய பரிசோதனையில், சாராயத்தில் மீதேல் ஆல்கஹோல் அதிகளவு பயன்படுத்தப்பட்டதால் நுரையீரல் மற்றும் இதயம் ஆகியவை செயலிழந்து உயிர் பலி ஏற்படுவது தெரியவந்துள்ளது. இவ்வழக்கு தொடர்பாக, நேற்று மேலும் இருவர் கைது செய்யப்பட்டதால் கைதானோர் எண்ணிக்கை, 12 ஆக உயர்ந்துள்ளது.

# 40 ஆண்டுகளுக்குப் பின் படம் பார்க்கப் போகிறார்



ஊழலை எதிர்த்துப் போராடும் அண்ணா ஹஸாரே கடைசியாக படம் பார்த்தது 1970இல் தான். அதன் பிறகு அவர் சினிமாவே பார்த்ததில்லையாம். கிட்டத்தட்ட 40 ஆண்டுகளுக்குப் பிறகு அவர் முதல் முறையாக சென்னையில் ஒரு படம் பார்க்கிறார்.

அதுவும் தமிழ்ப் படம். படத்தின் பெயர் முதல்வர் மகாத்மா. காமராஜ் படத்தை இயக்கிய அ.பாலகிருஷ்ணன் இயக்கியுள்ள இந்தப் படம், மகாத்மா காந்தி இப்போது முதல்வராக இருந்தால் பிரச்சினைகளை எப்படி எதிர்நோக்கியிருப்பார் என்ற சுவாரஸ்யமான கேள்விக்கு விடை சொல்கிறது.

இந்தக் கதையை கேட்ட உடனே படம் பார்க்கச் சம்மதித்து விட்டாராம் அன்னா ஹஸாரே. இன்று முதல்முறையாக சென்னை நகருக்கு வரும் அவர், தனது மற்ற பணிகளுக்கு நடுவில் இந்தப் படத்தைப் பார்க்கவும் நேரம் ஒதுக்கியுள்ளார். அவருடன் பத்திரிகையாளர்களும் சேர்ந்து முதல்வர் மகாத்மாவைப் பார்க்கிறார்கள். நுங்கம் பாக்கத்தில் உள்ள ∴ போர்பிரேம்ஸ் அரங்கில் இந்த விசேட காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# மழைவிட்டும் தூவானம் விடவில்லை

(சென்னை)

நித்யானந்தா செய்த புகார் தொடர்பாக, சன் டி.வி நிருபர் ஒருவரிடம் சி.பி.சி.ஐ.டி. பொலிஸார் விசாரணை நடத்தினர். பெங்களூர் பிடதியில், ஆசிரமம் நடத்தி வரும் நித்யானந்தா, பிரபல நடிகை ரஞ்சிதாவுடன் நெருக்கமாக இருப்பது போன்ற வீடியோ காட்சி வெளியாகி, ஆன்மிக உலகில், பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இந்தச் சம்பவத்தின் பின்னணியில், நித்யானந்தா மிரட்டப்பட்டதாகவும், அவரிடம் பெரிய தொகை கேட்கப்பட்டு, அவர் கொடுக்காததால் தான் படுக்கையறைக் காட்சிகள், டி.வி.யில் ஒளிபரப்பப்பட்டதாகவும் கூறப்பட்டது.

ஆட்சி மாற்றம் ஏற்பட்ட நிலையில், சென்னை மாநகரப் பொலிஸில், நித்யானந்தாவின் சீடர்கள் சன் டி.வி. நிர்வாகிகள் மற்றும் ஊழியர்கள் சக்சேனா, அய்யப்பன், லெனின் கருப்பன் உள்ளிட்டவர்கள் மீது புகார் அளித்தனர். புகாரின்படி பாண்டிபஜார் பொலிஸில் வழக்குப் பதியப்பட்டது. தொடர்ந்து இந்த வழக்கு சி.பி.சி.ஐ.டி. விசாரணைக்கு மாற்றப்பட்டது. இரு தரப்பிலும் உள்ளவர்களை அழைத்து, சி.பி.சி.ஐ.டி. பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

# இதோ ஆண்டவரின் அடிமை உமது சொற்படியே நிகழட்டும்



மரியாவின் வாழ்க்கையில் எதிர்பாராத நிகழ்ச்சிகள் பல நிகழ்ந்தன. திருமண ஒப்பந்தம் ஆகி, இல்லறம் நடத்துவதற்கு முன் மரியா கடவுளின் திருமகனைத் தம் உதரத்தில் கருத்தாங்க அழைப்புப் பெறுகிறார். இது வியத்தகு நிகழ்ச்சி மட்டுமல்ல, மரியாவைப் பொறுத்தமட்டில் இது பெரும் அதிர்ச்சிதரும் செய்தியாக இருந்தது. குழந்தைப் பேறு நெருங்கியதும் தம் குழந்தையை ஈன்றெடுத்து வசதியாகக் கிடத்துவதற்குக் கூட அவருக்குக் கிடைத்தது தீவனத்தொட்டியே. ஆனால் இத்துயரமான தருணங்களிலும் மகிழ்ச்சியான நேரங்களிலும் மரியா கடவுளின் வார்த்தையைத் தம் உள்ளத்தில் பதித்து வைத்திருந்தார் (லூக்கா 2:50). கடவுளின் வார்த்தை மரியாவுக்கு ஆறுதல் தரும் ஊற்றாயிருந்தது.

ஆண்டவரின் பிறப்பின் அறிவிப்பை மரியா தனது உள்ளத்தில் தியானித்து அதைப்பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தார். கடவுளின் மகன் தனது உதரத்தில் வருகின்ற செய்தியே மரியாவுக்குப் பெரும் மகிழ்ச்சியாக இருந்ததே தவிர, வேறு எந்த யோசனையும அவருக்கு நிகழவில்லை.

ஆகவே நாமும் இறைசித்தத்தை ஏற்று மரியாவின் கீழ்படிதலையும், அவருடைய கண்ணியமான வாழ்வையும் நாங்கள் பின்பற்ற இந்தத் திருவருகைக் காலத்தில் எம்மைத் தயார்படுத்துவோம்.

ஆர்.மதுசன், பாசையூர்


# 18 ஆண்டுகளின் பின்னர் ரஷ்யா இணைந்து கொண்டது

உலகச் செய்திகள்

(வொஷிங்டன்)

ரஷ்யா, உலக வர்த்தக அமைப்பில் சேர்ந்ததற்கு அந்நாட்டு ஜனாதிபதி டிமிட்ரி மெட்வதேவ்க்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வாழ்த்துத் தெரிவித்துள்ளார். இதன் மூலம் அமெரிக்க-ரஷ்ய இருதரப்பு உறவுகள் பலப்படும். இது இருநாடுகளுக்கும் நன்மை சேர்க்கும் என்றார். இது குறித்து வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் கார்னே விடுத்த அறிக்கையில் 18 ஆண்டுகளாக உலக வர்த்தக அமைப்பில் ரஷ்ய சேர்வது குறித்து கேள்வி இருந்து கொண்டே இருந்தது. இந்நிலையில் தற்போது உலக வர்த்தக அமைப்பு, ரஷ்யாவிற்கு அனுமதி அளித்துள்ளது வரவேற்கத்தக்கது என்றார்.

# திருச்சபையிலுமா இந்தக்கொடூரம்!



இரண்டாம் உலக யுத்தம் முடிவடைந்ததிலிருந்து, 2010 ஆம் ஆண்டுவரை பல பத்தாயிரக் கணக்கான சிறார்கள் இத்திருச்சபையினால் பாரதூரமற்றது முதல் மிகப் பாரதூரமான வரையிலான பாலியல் துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கப்பட்டுள்ளனர் என சுயாதீன விசாரணை ஆணைக்குழுவொன்று நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

இதேவேளை 1945 முதல் 1981 ஆம் ஆண்டு வரையான காலத்தில் நெதர்லாந்தில் இயங்கிய அநாதை இல்லங்கள், பாடசாலை விடுதிகள் மற்றும் கலாசாலைகள் போன்ற கத்தோலிக்க நிறுவனங்களில் சுமார் 10,000 முதல் 20,000 சிறார்கள் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தப்பட்டதாக மேற்படி ஆணைக்குழு மதிப்பிட்டுள்ளது. இத்துஷ்பிரயோகங்களில் சிறியளவிலானவை முதல் வல்லுறவு வரையான தீவிரமான துஷ்பிரயோகங்கள் அடங்கும் என அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

1981 ஆம் ஆண்டுக்குப் பின்னர் சிறார்களுக்காக திருச்சபையினால் நடத்தப்பட்ட விடுதிகள் குறைந்த எண்ணிக்கையிலேயே இருந்தன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை இப்பாலியல் துஷ்பிரயோகங்களானவை இதுபோன்ற ஏனைய குழுக்களினால் நடத்தப்படும் இல்லங்களில் இடம் பெற்றதைவிட தற்போது கத்தோலிக்க நிறுவனங்களில் இடம்பெறுவதில்லை. சிறார்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகம் டச்சு சமூகத்தில் பரந்திருந்தது எனவும் அவ்வாணைக் குழு தெரிவித்துள்ளது.

கத்தோலிக்க மதகுருக்கள், ஏனைய ஆணகள் மற்றும் பெண்களால் மேற்கொள்ளப்பட்ட துஷ்பிரயோகங்கள் திருச்சபையினால் தனது புகழை பாதுகாத்துக்கொள்வதற்காக திட்டமிட்டவகையில் மறைக்கப்பட்டன என மேற்படி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.போதிய கண்காணிப்பு மற்றும் போதிய நடவடிக்கை மேற்கொள்ளாத விடயத்தில் அத்திருச்சபை குற்றவாளி எனவும் நெதர்லாந்து, பெல்ஜியம், அயர்லாந்து, ஜேர்மனி, அவுஸ்ரேலியா, கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் மதகுருக்களால் மேற்கொள்ளப்பட்ட சிறுவர் துஷ்பிரயோகங்கள் குறித்து விசாரிப்பதற்காக பேராயர்கள் மற்றும் டச்சு மத சமூகத்தினால் 2010 ஆம் ஆண்டு மேற்படி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. கடந்த காலங்களில் இடம் பெற்ற இத்தகைய துஷ்பிரயோக ,சம்பவங்களுக்காக பாப்பரசர் 16 ஆம் ஆசிர்வாதப்பர் அண்மையில் மன்னிப்பு கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# பிலிப்பைன்ஸில் புயல் 180இற்கும் அதிகமானோர் பலி

பிலிப்பைன்ஸில் "சேன்டோங்" என்று அழைக்கப்படும் புயல் தாக்கி பல நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதன்காரணமாக குறைந்தபட்சம் 180 பேர் உயிரிழந்துள்ளதுடன் 400 இற்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளதாக அந்நாட்டு இராணுவம் மற்றும் வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரிகள் நேற்றுக்காலை தெரிவித்துள்ளனர்.

பிலிப்பைன்ஸில் இலிகன் நகரம், காகயன் டீ ஓரா கோம்போஸ்டெலா பள்ளத்தாக்கு மற்றும் சேம் பொங்கா டீல் நோர்டே ஆகிய பகுதிகளிலேயே உயிரிழப்புகள் அதிகமாக உள்ளதாக அறியக் கிடைக்கின்றது. சேத விபரம் இன்னும் முழுமையாகக் கிடைக்கவில்லை.

# மனைவியின் கைவிரல்களை வெட்டிய அன்புக்கணவர்


பங்காளதேஷில் மனைவி கல்லூரிக்கு படிக்க சென்ற ஆத்திரத்தில் அவரது கை விரல்களை கணவர் வெட்டி எறிந்த கொடூர சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பங்காளதேஷை சேர்ந்தவர் ரபிகுல் இஸ்லாம் (30),அதிகம் படிக்காதவர். இவரது மனைவி ஹவா அக்தர் ஜுய் (21).திருமணமானதும் தனது மனை வியை பிரிந்து சவூதி அரேபியாவுக்கு வேலைக்கு சென்று விட்டார்.

கணவர் உடன் இல்லாததால்,ஹவா அக்தர் கல்லூரிக்கு சென்று படித்தார். இதை இஸ்லாம் விரும்பவில்லை. படிப்பை நிறுத்தி விட்டு வீட்டு வேலையை மட்டும் பார் என்று தொலைபேசியில் பேசும்போது கூறினார். ஆனால் அதை ஹவா அக்தர் பொருட்படுத்தாமல் கல்லூரிக்குத் தொடர்ந்து சென்று படித்தார்.

இந்நிலையில் திடீரென இஸ்லாம் சொந்த நாட்டிற்குத் திரும்பினார். கணவர் திரும்பி வந்ததால் ஹவா அக்தர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். இந்த நிலையில் தனது மனைவியிடம் உனக்கு அதிசயமான பரிசுப் பொருள் கொண்டு வந்து இருக்கிறேன் என கூறிய இஸ்லாம், அவரது கண்களையும், கைகளையும் கயிற்றால் கட்டினார். வாயை மூடி ஒட்டினார். பின்னர் ஈவு இரக்கமின்றி தனது மனைவி ஹவா அக்தரின் வலது கையில் உள்ள 5 விரல்களையும் வெட்டினார். தனது பேச்சை கேட்காமல் கல்லூரிக்கு சென்று படித்ததற்காக இந்த தண்டனை வழங்கியதாக கூறினார். இதற்கு அவரது உறவினர்களும் உடந்தையாக இருந்தனர்.

வேதனையால் துடித்த ஹவா அக்தர் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டார். விரல் துண்டான 6 மணி நேரத்துக்குள்தான் சத்திரசிகிச்சை செய்து மீண்டும் சேர்த்து வைக்க முடியும். இதனால் வெட்டப்பட்ட அவரது விரல்களை ஒட்டவைக்க முடியாது என டாக்டர்கள் தெரிவித்து விட்டனர்.



ஏனெனில் வெட்டிய விரல் களை அவரது உறவினர் ஒருவர் குப்பை யில் வீசிவிட்டார். அவற்றை தேடி எடுத்து வருவதற்குள் நேரமாகி விட்டது என ஹவா அக்தர் தெரிவித்தார்.

இதேவேளை இஸ்லாம் கைது செய்யப்பட்டார். ஹவா அக்தர் தற்போது தனது தந்தை வீட்டில் தங்கியுள்ளார். இனி தனது கணவருடன் வாழ விரும்பவில்லை என கூறிவிட்டார். அதே நேரத்தில் இடதுகையால் எழுதிப பழகிவரும் அவர் மீண்டும் கல்லூரிப் படிப்பை தொடருவேன் என தெரிவித்துள்ளார்.

# பதிவிறக்கப் பெட்டகம்

தமிழ் இலக்கியக் கருத்துலகிலும், சிருஷ்டித்துறையிலும் நான் ஒரு கொரில்லா. ஒரு பிரசுர சாதனம் தனது தேவைகளுக்கேற்ப என்னை உபயோகித்து விட நான் இடம் தர மாட்டேன். எனக்கு ஒரு புரோக்ராம் உண்டு. அந்தப் புரோக்ராமுடன் இணைந்து செயல்பட முன்வரும் ஒரு சாதனத்துடன்தான் நான் செயல்படுவேன்.

**– பிரமிள்**

அவரது எடையை விடப் பல மடங்கு அதிக எடையை பூமி மீது செலுத்த அவர் முயல்வது போலத் தோன்றும்.

**– பிரமிள் பற்றி சுந்தர ராமசாமி**

விரும்பிப் படிக்கும் எழுத்தாளர்கள் எல்லாம், என்னுடைய சிருஷ்டிகரத்துக்குக் காரணமாக இருந்தார்கள் என்று சொல்ல முடியாது. அது வேறு. இது வேறு. ஞானத்தை உருவாக்க ஆழமான சம்பாஷணை ஆழமான விஷயங்கள் மட்டும் காரணமாக இருக்கின்றன என்று சொல்ல முடியாது. புத்தர் வயதான ஒருவரைப் பார்க்கிறார். அது அவருக்குப் பெரிய சிக்கலாக உள்ளது. நமக்குச் சாதாரண விஷயங்களாகத் தெரிபவை பெரிய ஆளுமைகளுக்குப் பிரச்சினையாக இருக்கும். பிரமிள் சொல்வார், சாது அப்பாத்துரை சொன்னதாக. குருவிகள் செல்லும் பாதையையும், ஞானிகள் ஞானத்தை அடைந்த பாதையையும் வரைந்து காட்ட முடியாது என்று. வண்ணத்துப்பூச்சி செல்லும் பாதையை வரைந்துவிட முடியுமா?

**– சுரேஷ்குமார இந்திரஜித்**

சில வித்தியாசமான சூழல்களில் மனிதர்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்று தன்னையும் உட்படுத்தி ஒருவர் கூர்ந்து கவனிப்பதும், சூழலில் தானும் கேலிச்சித்திரமாவதை ரசிப்பதும் உயரிய மனித அனுபவங்கள். தன் மனத்திற்குள் சுதந்திர வெறியை விட்டு வைத்திருப்பவன்தான் இப்படி ரசிக்க முடியும். பிறரது அகம்பாவம் உட்பட எதையும் இப்படி புண்படாமல் ஒருவர் ரசிக்கப் பழக முடியும். கோட்பாடுகள், தத்துவங்கள் என அசோகமித்திரன் தன் படைப்புக்குள் இழுத்துக் கட்டிக் கொள்வதில்லை. மனிதர்களை கதாநாயகர்கள் என்று உயர்த்துவதோ வில்லன் என்று இகழ்வதோ இல்லை. அவரவர் குறைகளோடு எல்லோரும் மனிதர்கள்.

**– ஞானி**

துல்லியமான சித்தரிப்பு, மிக எளிய வார்த்தைகளில் மிகப் பெரிய உணர்வுகளை வடித்துத் தருவது, நிகழ்வுகளை விருப்பு வெறுப்பற்ற சாட்சியின் கண்ணோட்டத்தில் முன்வைப்பது, யாரையும் புண்படுத்தாத அங்கதம், கூர்மையான கவனிப்புகள், முடிவுகளையோ தீர்வுகளையோ அழுத்துவதில் தயக்கம் என்று அசோகமித்திரன் எழுத்தின் சிறப்புகளைப் பட்டியலிடலாம். கதாபாத்திரங்களின் பிரச்சினைகளோடு வாசகன் தன்னை அடையாளம் கண்டுகொள்ளச் செய்வதே அசோகமித்திரனின நோக்கம். வாசகனின் அனுதாபத்தை ஏற்படுத்துவதை எல்லாக் கதைகளிலும் தவிர்த்துவிடுகிறார். கதாபாத்திரங்களின் தோற்றத்தை வருணிப்பதில்லை. கதையின் போக்கில் வரும் சிறு தகவல்கள் மூலம் அவை வாசக மனதில் உருவாக அனுமதிக்கிறார். சலனமற்ற வார்த்தைகள் மூலம் படிப்பவர்கள் மனதில் பெரும் கொந்தளிப்பையே ஏற்படுத்திவிட அசோகமித்திரனால் முடிகிறது.

**– அரவிந்தன்**

வண்ணநிலவனின், மூளையைக் கழற்றி வீசிய நம்பத் தகுந்த எளிமையும் நெகிழ்ச்சியும் தமிழின் அசாதாரண சாதனை. அவரது சாதாரண கதையான 'சாரதா'வாகட்டும் அல்லது சிகரங்களில் ஒன்றான 'மிருகம்' ஆகட்டும் 'வண்ணநிலவனை'க் காண்பதே அரிது. இந்த இரண்டு கதைகளும் எப்படி எங்கோ நிற்கின்றன என்று மனம் தோய வாசிப்பவர்களுக்குப் பிடிபடக்கூடும். மைக் பிடிக்காமல் வாசகனை எங்கெல்லாம் எப்படியெல்லாம் அழைத்துச்செல்ல முடியும் என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டு 'மிருகம்'.


நண்பர்களிடம் தன்னைப் பற்றி தன்னுடைய கணவன் விவாதிப்பது தெரியவரும், காதலித்து மணந்த புதுமணப்பெண்ணின் மன உணர்வை 'கல்யாணம் முடிந்தவுடன்' (1970) என்கிற கதையில் பிரமாதமாகச் சித்தரித்திருப்பார் அசோகமித்திரன். அவரிடமும் வண்ணநிலவனின் 'சாரதா'விலும் அந்தந்த கதாபாத்திரங்களின் வாழ்வியலுக்கு இயைந்த எண்ண ஓட்டங்களாகவே அவர்களின் மனம் வெளிப்படுவதைக் காணலாம். தன்னை அழித்து பாத்திரமாவது சாதாரண காரியமல்ல.

**– விமலாதித்தமாமல்லன்**

பல நூற்றாண்டுகளாக இருள் மூடிக் கிடந்த மனித மனத்தின் இருட்டறைகளுக்குள் பிரவேசித்த முதல் நபர் தஸ்தாயெவ்ஸ்கியே. அவரது எழுத்தின் வழியாக மட்டுமே அன்று வரை ரகசியம், ஆபாசம், விலக்கப்பட்டவை என்று பூட்டி வைக்கப்பட்டு துருவேறியிருந்த மனக்குகையின் தாழ்ப்பாள்கள் திறக்கப்பட்டன. தஸ்தாயெவ்ஸ்கியைப் போல தனிமையும் துயரும் பீடிக்கப்பட்ட மனிதனை இலக்கிய உலகம் இன்றுவரை காணவேயில்லை. அவர், வாழ்வின் மீதான நம்பிக்கையை மட்டுமே கையில் ஏந்தியபடியே உலகின் இருண்ட தாழ்வாரங்களில் எதையோ புலம்பியபடியே நடந்து திரிந்திருக்கிறார்.

**– எஸ். ராமகிருஷ்ணன்**

# ஆண்டவன் இவர்களை மன்னிப்பாராக!



கிளிநொச்சியில் தற்போதைய காட்சிகள் எல்லாம் மனதிற்கு ஏமாற்றம் அளிக்கவில்லை. விவசாயம் உற்பத்தி தொடங்கிவிட்டது. பாடசாலைகளுக்கு பிள்ளைகள் போய்வருகிறார்கள். இள வயதுப்பெண் பிள்ளைகளை கடைக் கண்ணால் பார்த்துக்கொண்டு இளவட்டங்கள் வீதி வலம்வரத் தொடங்கி விட்டார்கள். பெரிய அரசாங்கக் கட்ட வேலைகள் நடக்கின்றன. கடைகளில் வியாபாரம் நடக்கிறது. போர்க்காலத்தில் பெரும்பாலான மாடுகள் உணவாகி விட்டதால் அரசாங்கத்தால் புதிதாக வழங்கப்பட்ட மாடுகள் ஒழுங்கைகள் நிறைந்து வலம் வருகின்றன.

இளமைக் கல்வி காதல் காமம் போன்ற அடிப்படையான தேவைகளை ஒறுத்து ஒரு சமூகத்தை உருவாக்க முனைபவர்கள் சரித்திரத்தில் எப்பொழுதும் தோல்வியைத் தழுவுவார்கள். அது மட்டுமல்ல பாடசாலையில் மாணவர்களை பாதுகாக்கும் ஆசிரியர்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை எண்ணிய பெற்றோர் ஆத்ம ரீதியான இறைவழிபாடு என எல்லா விழுமியங்களையும் போராட்டம் என்ற ஒன்றுக்குள் நசுக்க முயன்ற இயக்கம் தோல்வியடைந்தது என்ற உண்மையை கம்போடியாவில் கடந்த வருடம் பார்த்தேன். இந்த வருடம் கிளிநொச்சியில் பார்த்தேன்.

பாடசாலைக்கு வந்த பிள்ளைகளை விடுதலைப்புலிகளிடம் பிடித்துக் கொடுத்த மத குருமாரும் பாடசாலை அதிபர்களும் இருந்த கிளிநொச்சியில், தங்கள் மாணவர்களுக்கு பண உதவி செய்ய அக்கறையுடன் கேட்ட தலைமை ஆசிரியரை மீண்டும் சந்தித்தேன். பிள்ளைகளை நிலத்துக்கு அடியில் குழி வெட்டி பாதுகாத்த பெற்றோர் இப்பொழுது தமது பிள்ளைகள் டொக்டராகவும் எஞ்ஜினியராகவும் வருவார்கள் என கனவு காணுகிறார்கள். சாதாரண பஸ் வண்டியில் பயணம் செய்த போது மக்களின் முகங்களில் களிப்பைக்கண்டேன்.

அதனால் பிரச்சினைகள் தீர்ந்து விட்டன என்பது அர்த்தமல்ல. குறைந்த பட்சம் வண்ண வண்ண கனவுகளை காண பதற்கு சுதந்திரம் இருக்கிறது. குழந்தைகளுடன் நிம்மதியாக வீட்டில் உறங்க முடிகிறது. இராணுவத்தினரையோ இலங்கை அரசாங்கத்தையோ எதிர்ப்பதற்கான சுதந்திரம் விடுதலைப்புலிகள் காலத்தில் மறுக்கப்பட்ட கொடுமை 86 ஆம் ஆண்டிலிருந்து விடுதலைப்புலிகள் தவிர்ந்த தமிழருக்கு இருந்ததை மறக்கமுடியுமா?

நான் நண்பர்களுடன் உதவியளிக்கும் ஐந்து குடும்பங்களைப் பார்த்தேன். ஒவ்வொரு வீட்டிலும் ஒரு மணித்தியாலம் செலவு செய்து அவர்கள் தேவையை விசாரித்தேன். இதில் ஒரு பெண் விடுதலைப்புலியாக இருந்த கணவரை இழந்தவர். மூன்று குழந்தைகளின் தாய். அரசாங்கம் மற்றும் தொண்டர்தாபன உதவியுடன் மூன்று குடும்பங்கள் நிரந்தர வீடுகளையும் மற்ற இரண்டு குடும்பங்கள் தற்காலிக வீடுகளையும் பெற்றுள்ளார்கள்.

முன்அறிவித்தல் இன்றிப் போன போதும் மலர்ச்சியுடன் வரவேற்றார்கள். எல்லோரது வீடுகளும் சுத்தமாகவும் அத்துடன் குழந்தைகளும் ஆரோக்கியமாக இருந்தார்கள். பெண்களிடம் கல்வியின் முக்கியத்துவத்தை உணர முடிந்தது. இலங்கை அரசாங்கத்தை குறைகூறுபவர்கள் கூட இலங்கையில் பாடசாலைகல்விமுறை மற்றும் சுகாதார வைத்திய நடவடிக்கைகளை பாராட்டுகிறார்கள்.

நான் அங்கு சந்தித்த ஒவ்வொரு பெண்ணிடமும் நான் கேட்ட ஒரு கேள்வி, இராணுவத்தால் ஏதாவது துன்பங்களைச் சந்திக்கிறீர்களா என்பதுதான். அவர்கள் எல்லோரும் அழுத்தம் திருத்தமாக இல்லையென்றார்கள். இலங்கையின் தமிழ் ஊடகங்களும் புலம்பெயர்ந்த ஊடகங்களும் இதைக் கேட்டு மிகவும் கவலைப்படுவாரகள்.

பிரிகேடியர் ரேனுகா ரோவெலின் தகவல்களின் படி 133501 அதாவது 42430 குடும்பங்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் தற்பொழுது குடியேறி இருக்கிறார்கள். இதைவிட 2185 விடுதலைப் புலி இயக்கத்தைச் சேர்ந்தவர்களும் இவர்களில் அடங்குவர். இராணுவத்தினர் தாங்கள் மட்டும் 3708 வீடுகளை மக்களுக்கு இதுவரையில் கட்டிக் கொடுத்தாக கூறினார்கள். இதைவிட பல வேலைகளை மக்களுக்காக இராணுவத்தினர் வலிந்து செய்கிறார்கள். யுத்தத்தின்போது அழிக்கப்பட்ட இடம். எனவே இந்த அழிவில் தங்களுக்கும் பங்கு உண்டு என ஏற்றுக் கொண்டு பல விடயங்களைச் செய்கிறார்கள்.

என்னைப் பொறுத்தவரை அவர்களைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் மக்கள் இராணுவத்தினரை நண்பர்களாக ஏற்றுக் கொள்வது முடியாத காரியம். எவ்வளவு சிறந்த இராணுவமாக இருந்தாலும் அவர்களது உடை ஆயுதம் அதிகாரத்தை வெளிப்படுத்தும். இது சமதன்மையற்ற உறவை உருவாக்குகிறது. இதேவேளையில் இலங்கையில் இராணுவமும் மருத்துவரகளும்தான் குறைந்த பட்ச மனிதாபிமானத்துடன் இயங்குபவர்கள். மேலும் குறைந்தது ஐந்து வருடத்திற்கு இராணுவத்தினர் தமிழ்ப் பகுதியில் செறிந்து இருப்பது தவிர்க்க முடியாதது. இதற்கு மேலும் இருப்பதை தீர்மானிப்பது சிதறுண்டுபோன பொறுப்பற்ற அரசியல் வாதிகளும் வெளிநாட்டு புலிச் சார்பு தமிழர்களும்தான்.

கோடை காலத்தில் காட்டுத்தீ உரு வாகும் என்ற காரணத்தால் அவுஸ்ரேலியாவில் சில நாட்களில் வெளியே தீ கொளுத்தக் கூடாது என்ற கட்டுப்பாடு உள்ளது.
அதுபோல் இவர்களது பொறுப்பற்ற தன்மைக்கு ஒரு கட்டுப் பாடு வந்தால் தமிழ்மக்களுக்குத்தான் நல்லது.

இலங்கையில் மருத்துவர்களும் இராணுவத்தினரும் குறைந்த பட்ச நேர்மை கொண்டவர்கள் என நான் சொல்லும்போது மிக மோசமானவர்கள் என நான் கருதுவது இலங்கை அரசியல்வாதிகளையும் ஊடகவியலாளர்களையும்தான். பலர் தெரியாமல் செய்கிறார்கள். சிலர் தெரிந்து செய்கிறார்கள்.

ஆண்டவன் இவர்களை மன்னிப்பாராக என இந்த கர்த்தர் பூமிக்கு வந்த நாட்களில் வேண்டுவதை விட வேறு என்னதான் செய்யமுடியும்?

- நடேசன் கட்டுரையிலிருந்து..

# பேச்சுவார்த்தையும் போர்க் குற்றங்களும்

உலக மனித உரிமைகள் தினத்தன்று யாழ்ப்பாணத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னணித் தலைவர்களில் ஒருவரான மாவை சேனாதிராஜா, மனித உரிமை மீறல்களுக்காக இலங்கை அரசை எதிர்த்து ஐக்கிய நாடுகள் சபை விசாரணை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை மீண்டும் வலியுறுத்தி உள்ளார். ஐநா சபை செயலாளர் நாயகம் பான் கீ மூனின் குழு தனது அறிக்கையை சமர்ப்பித்த நேரத்திலேயே கூட்டமைப்பு இத்தகைய நிலையையே எடுத்தது. இந்தமுறை, விசாரணை பகிரங்கமாக இருக்க வேண்டும் என்றும் சேனாதிராஜா கூறியுள்ளார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும எண்ணத்தோடு அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி வரும் அதே சமயத்தில், போர்க குற்றங்கள் குறித்த கூட்டமைப்பின் இத்தகைய நிலைமை முன்னுக்குப் பின் முரணாகத் தோன்றுகிறது. என்றாலும் ஐநா குழு அறிக்கை வெளியான நேரத்திலும் கூட்டமைப்புத் தலைமை - அரசை எதிர்த்து அறிக்கை வெளியிட்டது. அதேசமயம் அரசுடனான பேச்சுவார்த்தையில் இருந்தும் வெளிநடப்பு செய்யவில்லை. பேச்சுவார்த்தை சூடு பிடிக்காத நேரத்தில் இது சாத்தியமாக இருந்தது. தற்போது, போர்க்கால அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் நடப்பதாகதோற்றம் அளிக்கும் போது, கூட்டமைப்பு தனது இரட்டைப் போக்கை ஆய்வு செய்யும் சூழ்நிலை உருவாகலாம். பேச்சுவார்த்தைகள் வெற்றி பெற்றால் மட்டும் அல்ல, பேச்சுவார்த்தை வெற்றி பெறுவதற்குக் கூட கூட்டமைப்பு தனது தற்போதைய நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்யும் சூழ்நிலை உருவாகலாம்.

கடந்த காலங்களில் இரு தரப்புப் பேச்சுவார்த்தைகள் மூலம் ஏதோ ஒரு விதத்தில் உடன்படிக்கை எட்டப்பட்ட போதெல்லாம், தமிழ் மக்களின் அரசியல் தலைமை, முழுமையாக தமது மக்களின் மனநிலையை எடை போடாமலேயே அகலக் கால் வைத்து அளந்து விட்டு, பின்னர் தமிழ்ச் சமூகத்தை காரணம் காட்டி - கொடுத்த வாக்கை காப்பாற்றாமலேயே கைவிட வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்ட நிர்ப்பந்தங்கள் அதிகம்.

கடந்த 1987ஆம் ஆண்டின் இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஆகட்டும், பிற்காலத்தில் சந்திரிகா குமாரணதுங்க முன் வைத்த முடிவுகள் ஆகட்டும், அல்லது நோர்வே அரசின் முயற்சிகள் ஆகட்டும், இலங்கை அரசைப் போலவே, தமிழ்த்தலைமையும் கொடுத்த வாக்கையும் எடுத்த முடிவையும் செயல்படுத்த திராணி இல்லாமலே இருந்தது. அல்லது வலது கை கொடுத்த வாக்குறுதி இடது கைக்குத் தெரியாமலே இருந்துள்ளது. இத்தகைய 'நெறிமுறைக்கு' இலங்கை மற்றும் இடைப்பட்ட வெளிநாட்டு அரசுகளோ மட்டும் கூட காரணம் இல்லை. கட்டுக்கோப்பான விடுதலைப் புலிகள இயக்கமும் இவ்வாறே இயங்கி வந்துள்ளது. குறிப்பாக, அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் கடந்த 2006ஆம் ஆண்டு ஜூன் மாதம் இந்திய தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் - ராஜீவ் காந்தி கொலை வழக்கு குறித்த கருத்துகளுக்குப் பின்னர், விடுதலைப் புலிகள் இயக்கம் அவரை செயல்படாத அறிவுரையாளராக ஓரம் கட்டியது.

**தனது பிரச்சினைக்கு தான் மட்டுமே ஏற்றுக்கொள்ளும் தீர்வை சர்வதேச சமூகம் தனக்கு பெற்றுத் தர வேண்டும் என்று தமிழ்த் தலைமை கருதுமேயானால், அப்போதே அந்த முயற்சி தோல்வி அடைவதற்கான விதை விதைக்கப்பட்டு விட்டது என்றே அர்த்தம்.**

நோய்வாய்ப்பட்டிருந்த பாலசிங்கத்தின் மரணத்திற்கு அப்பாற்பட்டு, விடுதலைப் புலிகள் இயக்கம், போர் முனையில் தொடர்ந்து அடி வாங்கி வந்தபோதும் சர்வதேச சமூகம் அவர்களுக்காகவும் அப்பாவித் தமிழ் மக்களுக்காகவும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டவர்களை நம்பாமல் போனதற்கு இத்தகைய அணுகுமுறையும் முக்கிய காரணமாகும். இது போன்ற காரணங்களை தமிழ் தலைமைகள் அதற்குரிய முக்கியத்தோடு அணுகி வந்தது இல்லை.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான இந்த அரசு என்றல்ல, இலங்கையில் எதிர்வரும் காலங்களில் ஆட்சி செய்யும் எந்த அரசும் இந்தப் பின்புலத்தை மனதின் ஓரத்தில் நிறுத்தியே தமிழ் தலைமையுடனான பேச்சுவார்த்தைகளை அணுகும் எப்படி தமிழச சமூகம் கடந்த பல தாசாப்தங்களாக, இலங்கையின் ஆளும் வர்க்கம் தங்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை செயறபடுத்தவில்லை என்று கருதுகிறாரகளோ, அதுபோன்றே இலங்கை அரசும் ஆட்சியாளர்களும் நினைப்பதற்கு காரணம் உள்ளது.

அது மட்டுமல்ல... எப்போது சர்வதேச சமூகத்திடம் நேரடியாகவோ, மறைமுகமாகவோ தமது பிரச்சினையை தமிழ் தலைமை கொண்டு சென்று விட்டதோ அப்போதே அதனை முடிவிற்குத கொண்டுவரும் அளவுகோலை, தமிழ்ச் சமூகம் தாரைவார்த்து விட்டது என்றே கொள்ள வேண்டும். அல்லது, தனது பிரச்சினைக்கு தான் மட்டுமே ஏற்றுக் கொள்ளும் தீர்வை சர்வதேச சமூகம் தனக்கு பெற்றுத்தர வேண்டும் என்று தமிழ் தலைமை கருதுமேயானால், அப்போதே அந்த முயற்சி தோல்வி அடைவதற்கான விதை விதைக்கப்பட்டு விட்டது என்றே அர்த்தம்.

பேச்சுவார்த்தையில் ஒரு முடிவை எட்டிவிட்டு, பின்னர் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு அந்த முடிவு ஏற்புடையது அல்ல என்று அவர்களது தலைமை கருதுமேயானால், மீண்டும் ஒருமுறை சர்வதேசத்தின் ஆதரவை அவர்கள் இழக்க வேண்டி வரலாம். விடுதலைப் புலிகள் இல்லாத சமகாலததில், இதுவே அத்தகைய கடைசி முயற்சியாகவும் அமையலாம்.

இந்தப் பின்னணியில் கூட்டமைப்பு சொல்வதையும் செய்ய முடிவதையும் எடை போட்டு செயற்பட வேண்டும். இந்த இரண்டிற்கும் இணைப்பு இல்லை என்ற காரணத்தினால் மட்டுமே பல தாசாப்த காலமாக இலங்கை அரசின் நம்பகத்தன்மை சர்வதேச சமூகத்தினால் சந்தேகக் கண்களுடனேயே பார்க்கப்பட்டு வந்திருக்கிறது.

இன்று, எவ்வளவு தூரம் சர்வதேச சமூகம் தமிழர்களின் நலனில் அக்கறை காட்டுகிறதோ, அதே அளவிற்கு அதன் தலைமைக்கு தனது மக்கள் மீது உள்ள செல்வாக்கையும் தொடர்ந்து எடைபோட்ட வண்ணமாகவே உள்ளன. எப்போது, கூட்டமைப்பை தமிழ் மக்கள் வேறு வழி இல்லாமல் மட்டுமே ஆதரிக்கிறார்கள் என்றும் கூட்டமைப்புத் தலைமை எடுக்கும் எல்லா விதமான அரசியல் முடிவுகளையும் கண்மூடித் தனமாக ஆதரிப்பார்கள் என்ற எண்ணத்தில் மண் விழும் சூழ்நிலை உருவாகி விடுகிறதோ, அன்றே சர்வதேசம், வேறு கோணங்களில் சிந்திக்க தொடங்கிவிடும்.

இதுதான் கடந்த காலம் வழங்கும் படிப்பினை. இந்தப் பின்னணியில், தமிழ்த தேசியக் கூட்டமைப்பு தன்னால் செயல்படுத்த முடியும் உறுதிமொழிகளையே அரசுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் வழங்க வேண்டும். அதுபோன்றே, தன்னால் பெற்றுத்தர முடியும் அரசியல் தீர்வையும் அதிகாரப்பகிர்வையும் பற்றி மட்டுமே தமிழ் மக்களுக்கு நம்பிக்கை அளிக்க வேண்டும்.

விடுதலைப் புலிகளின் உதாரணத்தில் இருந்து படிப்பினை பெற்ற அவர்கள் இல்லாத ஊருக்கு வழி செய்யும் முறைமையை அறவே விட்டு ஒழிக்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறியதால் மட்டுமே, தனி நாடு கேட்டு போராடிய தமிழ் மக்கள் இன்று சொந்த வீடும தமது வாழ்வும் வாழ்வாதாரமும் இல்லாமல் தவிக்க வேண்டியுள்ளது.

*இந்த நிலைமை இனியும் தொடர வேண்டுமா?*

**- என். சத்தியமூர்த்தி**

**கட்டுரையிலிருந்து**

# சிங்கள, தமிழ் எழுத்தாளர்களின் ஒன்றுகூடல் நிகழ்வு இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சினால் சமூக ஒருமைப்பாட்டை கட்டியெழுப்புவதற்காக வடக்கு, தெற்கு இலக்கியவாதிகளுக்கும், ஊடகவியலாளர்களுக்குமான ஒன்றுகூடலை நடத்தவுள்ளது.

யாழ். மாவட்ட செயலக பிரதான கேட்போர்கூடத்தில் இன்றும் நாளையும் காலை 8.30 மணிக்கு இடம்பெறும் மேற்படி நிகழ்வில் வடக்கு, தெற்கு இலக்கியவாதிகள் மற்றும் ஊடகவியலாளர்களுடன் நல்லுறவை ஏற்படுத்துவதனூடாக இலங்கை சமுதாயத்துக்குள் சமூக ஒருமைப்பாட்டை உருவாக்க புத்திஜீவிகளின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதும் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவினால் ஏற்படுத்தப்பட்ட வடக்கு, தெற்கில் இரு மொழிகளில் கடமையாற்றும் எழுத்தாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் ஒருவரையொருவர் அறிமுகப்படுத்திக் கொள்ளும் வேலைத்திட்டமொன்றும் நடத்தப்படவுள்ளது.

இந்நிகழ்வின்போது விசேட கருத்துக்களை வழங்குவதற்கு பிரசித்தி பெற்ற ஊடகவியலாளர் விக்டர் ஐவன், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் திலகரத்ன குருவிட்ட பண்டார, "சிங்கள, தமிழ் எழுத்தாளர் சந்திப்பின்" செயலாளர் கமல் பெரேரா உட்பட வடக்கு மற்றும் தெற்கில் விருது பெற்ற ஊடகவியலாளர்கள் எழுத்தாளர்களும் தத்தமது கருதுக்களை வழங்கவுள்ளனர். (எப்.எஸ்)

# மூன்றாவது நாளில் சுருண்டது இலங்கை இனிங்ஸால் வென்றது தென்னாபிரிக்கா

(செஞ்சூரியன்)

இலங்கை அணியுடனான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் தென்னாபிரிக்க அணி ஓர் இன்னிங்ஸ் மற்றும் 81 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

தென்னாபிரிக்காவின் செஞ்சூரியன் நகரில் நடைபெற்ற இப்போட்டி மூன்றாவது நாள் தேநீர் இடைவேளைக்குமுன் முடிவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியில் இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 180 ஓட்டங்களையும் தென்னாபிரிக்க அணி முதல் இன்னிங்ஸில் 411 ஓட்டங்களையும் பெற்றன.

போட்டியின் 3 ஆவது நாளான நேற்று தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணி 150 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

இதனால் ஒரு இனிங்ஸ் மற்றும் 81 ஓட்டங்களால் தென்னாபிரிக்க அணி வெற்றியீட்டியது.

இரண்டாவது இனிங்ஸில் இலங்கை அணியின் சார்பில் ஆகக்கூடுதலாக திலான் சமரவீர 32 ஓட்டங்களைப் பெற்றார். பின்வரிசை வீரர்களான ரங்கன ஹேரத் 23, திசார பெரேரா 21 ஓட்டங்களையும் பெற்றனர். கௌஷல் சில்வா 17 ஓட்டங்களைப் பெற்றார்.

இலங்கை அணியின் முன்வரிசை வீரர்களில் தரங்க பரணவிதான 4, திலகரட்ன டில்ஷான் 6, குமார் சங்ககார 2, மஹேல ஜயவர்தன 15 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

மஹேல தனது டெஸ்ட் கிரிக்கெட் வாழ்க்கையில் 9999 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ரண் அவுட் முறையில் ஆட்டமிழந்தமை குறிப்பிடத்தக்கது.

தென்னாபிரிக்க பந்துவீச்சாளர்களில் வேர்னன் பிலாந்தர் 49 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராகவும் அவரே தெரிவானார். டேல் ஸ்டெய்ன் 36 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

## கடத்தப்பட்டவர்களை...

குகன் மற்றும் லலித் ஆகியோரை விடுவிக்குமாறு கோஷம் எழுப்பினர.

"கடத்தப்பட்ட லலித், குகன் ஆகியோரை விடுதலை செய்", "காணாமல் போனவர்களைக் கண்டுபிடித்துக் கொடு", "ஜனநாயகத்தை புதைத்துவிட அரசாங்கத்திற்கு இடமளியோம்", "வடக்கில் கடத்தல் மற்றும் கொலையை நிறுத்து", "காணாமல் போனோரைத் தேடித் தா", வடக்கில் மக்களின் உயிர்ப் பாதுகாப்பை உறுதி செய்" போன்ற வாசகங்கள் குறிக்கிக்கப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித்குமார, ஊவா மாகாணசபை முன்னாள் உறுப்பினர் பொன்னுச்சாமி பூமிநாதன், அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய முன்னாள் தலைவர் உபுல் பிரேமரட்ண உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னிட்டு யாழ்நகர் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் பொலிஸார் பெருமளவு குவிக்கப்பட்டிருந்ததுடன், பாதுகாப்பு நடவடிக்கைகளும் பலப்படுத்தப்பட்டிருந்தது.

## நாடாளுமன்றில்....

இதற்கிடையில் பான்கீ மூன் நியமித்த மர்சூகி தருஸ்மன் தலைமையிலான நிபுணர்கள் குழுவின் இலங்கை தொடர்பிலான அறிக்கையின் உள்ளடக்கங்கள் குறித்து, ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகள் அவதானம் செலுத்தும் என நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, பான் கீ மூன் நியமித்த குழுவின் அறிக்கை, ஜெனீவாவில் உள்ள மனித உரிமைகள் ஆணையகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட போது, ஐக்கிய நாடுகள் சபையின் முத்திரைப் பதிக்கப்பட்டிருக்கவில்லை என தெரிவிக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் பான் கீ மூன் குறித்த அறிக்கையை மனித உரிமைகள் ஆணையகத்தக்கு முத்திரை இன்றி அனுப்பினால், அந்த அறிக்கை சாதாரண காகிதங்களாகவா மதிக்கப்படுகிறது? என இன்னர் சிட்டி பிரஸ் கேள்வி எழுப்பியது.

இதற்கு பதில் வழங்கிய பர்ஹான் ஹக், இது ஒரு ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை எனவும், அதனை ஐக்கிய நாடுகளின் உத்தியோகப்பூர்வ இணையத்தளத்தில் பார்வையிட முடியும் எனவும் தெரிவித்தார்.

இதனால் முத்திரை பதியப்படவில்லை என்ற சிறிய விடயம் குறித்து அஞ்ச வேண்டியதில்லை என அவர் சுட்டிக்காட்டினார். எவ்வாறாயினும், ஐக்கிய நாடுகள் சபையின் இணையத்தளத்தில் வெளியாகின்ற விடயங்கள் அனைத்தையும், ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை என கொள்ள முடியுமா?

இலங்கை அரசாங்கம் வெளியிடுகின்ற அறிக்கைகள் கூட, ஐக்கிய நாடுகள் சபையின் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படுகிறது.

அப்படியானால், இலங்கை அரசாங்கத்தின் அறிக்கைகளும் ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை என கொள்ள முடியுமா? என கேள்வி எழுப்பிய இன்னர் சிட்டி பிரஸ், இந்த வகையில் தருஸ்மனின் அறிக்கை ஐக்கிய நாடுகள் அறிக்கையா எனவும் கேள்வி எழுப்பியது.

இதற்கு பதில் வழங்கிய ஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளர் பர்ஹான் ஹக், இந்த அறிக்கை ஐக்கிய நாடுகள் சபையிலேயே வெளியிடப்பட்டது. இந்த அறிக்கை முதலில் இலங்கை அரசாங்கத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால் இலங்கை அரசாங்கம் அதனை பகிரங்கப்படுத்தியது. இதனைத் தொடர்ந்தே குறித்த அறிக்கையை ஐ.நா. சபை வெளியிட்டதாக அவர் சுட்டிக்காட்டினார்.

## அறிக்கையிலுள்ள...

அலட்சியம் செய்யப்பட்டுள்ளது. நாங்கள் ஏற்கனவே அஞ்சியது போன்று நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை பக்கச்சார்பானதாகவே அமைந்துள்ளது.

இருப்பினும், ஒட்டுமொத்த மனித உரிமைகள் நிலைமையை முன்னேற்றுவது தொடர்பான ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் தீவிரமாக எடுத்துக் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

## ஜனாதிபதியிடம்...

தெரிவித்தார்.

ஜனாதிபதி மன்னிப்பு குறித்த யோசனையை எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க முன்வைக்கவுள்ள நிலையில் அதனை ஜனாதிபதியிடம் சமர்பிக்க கங்காராம விகாரையின் விகாராதிபதி தயாராகி வருவதாக திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

## சிறியளவு.....

மேலும் 'தண்டிக்கப்படாத குற்றங்கள்' என்ற தலைப்பில் மற்றுமொரு 30 நிமிட ஆவணப் படம் ஒன்றை சனல் - 4 தொலைக்காட்சி வெளியிட உள்ளது.

வரும் ஜனவரி மாதம் வெளியாகவுள்ள இந்த ஆவணத் திரைப்படத்தில் புதிய பல போர்க் குற்ற ஆதாரங்கள் இணைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது

# பிலிப்பைன்ஸில் புயல் 436 பேர் உயிரிழப்பு

பிலிப்பைன்ஸில் நேற்று தாக்கிய புயலினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 436 ஆக அதிகரித்துள்ளதாக அந்நாட்டு செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது. அதேவேளை மேலும் 162 பேர் காணாமல் போனதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புயலினால் ஏற்பட்ட வெள்ளத்தினால் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் வெள்ளம் தாக்கிய போது உறக்கத்திலிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

பிலிப்பைன்ஸில் பல பகுதிகள் வெள்ளத்தினால் மூழ்கியுள்ள நிலையில் பல்லாயிரக்கணக்கான மக்கள் வீடுகளை விட்டு இடம் பெயர்ந்துள்ளனர்.

# கடாபியை கொன்றது போர்க்குற்றம் சர்வதேச நீதிமன்றம் அறிவிப்பு

லிபியா முன்னாள் அதிபர் கடாபி கொல்லப்பட்டது போர்க்குற்றம் என சர்வதேச குற்றவியல் நீதிமன்ற தலைமை சட்டத்தரணி லூயிஸ் மொரேனோ அகாடம்போ தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறும்போது, லிபியா முன்னாள் அதிபர் கடாபி கொல்லப்பட்டது ஒரு போர்க்குற்றமாகும். அது குறித்து வருகிற ஜனவரி 10 ஆம் திகதி லிபியா அரசு நீதிமன்றில் பதில் கூற வேண்டும். கடாபியின் மகன் சயீப் அல்- இஸ்லாமும் லிபியா அரசால் கைது செய்யப்பட்டுள்ளார். சர்வதேச கிரிமினல் நீதிமன்றினால் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ள அவரையும் ஒப்படைப்பது குறித்து தெரிவிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

## 13 ஆவது....

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக கருத்து தெரிவித்த அவர், எதையும் அமுல் படுத்துவதற்கு முன் மக்களின் அடிப்படை உரிமைகளை அரசாங்கம் முதலில் உறுதிப்படுத்த வேண்டும்.

நாட்டில் அண்மைக் காலத்தில் கடத்தல் சம்பவங்கள் அதிகரிப்பதற்கான முழுப்பொறுப்பையும் அரசாங்கம் ஏற்க வேண்டும்

நாட்டில் கடத்தல்களின் அளவு அபாயகரமாக அதிகரித்து வருகிறது. நாட்டில் சமாதானம் நிலவுகிறது. யுத்தகாலத்தில் கூட இந்தளவு மர்மமான காணாமற் போதல்கள் இடம்பெறவில்லை.

அமைச்சரவைப் பேச்சாளரான கெஹலிய ரம்புக்வெல, கடத்தல்கள் தொடர்பாக பொறுப்பற்ற கருத்துக்களை கூறுவதன் மூலம் அரசாங்கத்தின் ஜோக்கர் பாத்திரத்தை ஏற்றுள்ளார். காணாமல் போனவர்கள் திரும்பி வந்துவிடுவார்கள் என்று வாராந்த அமைச்சரவை செய்தியாளர் மாநாட்டில் கூறும் தைரியத்தை அவர் கொண்டுள்ளார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை சில விடயங்களை உள்ளடக்கியுள்ளது. ஆனால் சிலவற்றை விட்டுள்ளது. நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை ஒரு தகவலூட்டும் சாதனமாக பயன்படுத்தப்பட வேண்டுமே தவிர, தேசியப் பிரச்சினைக்கான ஏக அதிகாரம் கொண்டதாக கருதப்படக்கூடாது.

போர்நிறுத்த உடன்படிக்கையானது அப்போது ஐ.தே.க. ஆட்சிக் காலத்தில் அமுல்படுத்தப்பட்டபோது அது தேவையானதாக இருந்தது என இந்த அறிக்கை ஏற்றுக்கொண்டுள்ளது. எனினும் கருணா அம்மான் மற்றும் பிள்ளையான் ஆகியோர் புலிகளிடமிருந்து பிரிந்தமை அந்த அமைப்பை அழிப்பதற்கு மிக முக்கியமாக பங்களிப்புச் செய்த விடயம் என்பதை அது கவனிக்கத் தவறிவிட்டது என அவர் மேலும் கூறினார்.

## தமிழ் மக்களின்....

விரும்புகின்றார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்றைய தினம் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் வரவு - செலவுத்திட்ட உரையின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆரம்ப காலத்தில் இந்த நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்திருந்த சக தமிழ்த் தலைமைகள் தமது சுயலாப நோக்கங்களால் அரசியல் தீர்வு முயற்சிகளுக்கு ஆதரவு வழங்க முன்வந்திருக்கவில்லை.

இன்று நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ளவர்கள் உட்பட, சுய்லாப தமிழ்த் தலைமைகள் யாவும் எமது மக்களுக்கான எமது பணிகள் அனைத்தையும் சலுகைகள் என்று புறந்தள்ளி விடுகின்றனர். கூட்டமைப்பினரின் அர்த்தமற்ற எதிர்ப்புக் கோஷங்களையும், அவர்களது பொறுப்பற்ற சுயலாப நடவடிக்கைகளையும் காரணமாக வைத்து, தமிழ் பேசும் மக்களுக்கான அரசியலுரிமை பிரச்சினைக் கான தீர்வு முயற்சிகளை அரசாங்கம் ஒரு போதும் கைவிட்டு விடாது என்று உறுதியாக நம்புகிறோம்.

தமிழ் பேசும் மக்களின் மனங்களில் பாரிய மாற்றங்களை நாம் காண்கின்றோம். தமிழ் பேசும் மக்கள் அரசாங்கத்திடம் இருந்து நியாயமானதொரு அரசியல் தீர்வை எதிர்பார்த்து நிற்கிறார்கள்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மட்டுமன்றி, எமது சக அமைச்சர்களும் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமிழ் பேசும் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து தொடர்ந்தும் செயற்படுவார்கள் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தேர் முட்டிக்குள்....

பிரிவினரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு யாழ்.மேல் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டு வந்தது. இவருக்கு எதிராக இரு இராணுவத்தினரும் ஒரு பொலிஸ் உத்தியோகத்தரும் சாட்சியமளித்தனர்.

இந்தக் குறுக்கு விசாரணையில் மூன்று சாட்சிகளுக்குமிடையில் பல முரண்பாடுகள் தென்பட்டதை அடுத்து இவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்க முடியாத நிலையில் வழக்கில் இருந்து பூரணமாக அளவெட்டி மீனாட்சி அம்மன் ஆலய நிர்வாக சபை உறுப்பினர் நாகராஜா தியாகராஜன் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி எஸ்.பரமராஜாவினால் விடுதலை செய்யப்பட்டார். இவர் சார்பாக பிரபல சட்டத்தரணி முடியப்பு றெமிடியஸ் ஆஜராகியிருந்தார்.

# கிழக்கு மாகாணத்தின் அரசியல் கொடிபிடிப்பதாகவே உள்ளது

## விசனம் கொள்கிறார் முதல்வர் சந்திரகாந்தன்



(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தின் அரசியலானது தொடர்ந்தும் கொடி பிடிக்கும் அரசியலாகவே உள்ளது. இது வேதனைக்குரிய விடயம். அத்துடன் இந்நிலை தொடரக் கூடாது என கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார். மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர், கிழக்கு மாகாணத்தைத் துண்டாடும் ஒரே நோக்கத்துக்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முஸ்லிம் காங்கிரசுடன் பேச்சு நடத்துகிறது. அதாவது, தனி அலகு தேவையாகவுள்ள முஸ்லிம் காங்கிரசுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேசுகிறது.

தனி அலகு என்பது தொடர்பில கிழக்கு மாகாணத்தை சேர்ந்தவர்கள் சிந்திக்கவேண்டும். ஓட்டமாவடி, ஏறாவூர், காத்தான்குடி போன்ற முஸ்லிம் பிரதேசங்களைக் கொண்டு எவ்வாறு தனியலகு அமைப்பார்கள். இதனை இந்த மாகாணத்தை சேர்ந்த மக்கள் சிந்திக்க வேண்டும்.

வடக்கையும் கிழக்கையும் இணைப்பதனால் முஸ்லிம் காங்கிரசுடன் பேசி என்ன திட்டத்தை முன்வைக்கவுள்ளோம் என்பதனையும் கிழக்கு மாகாணத்தில் உள்ள சிங்கள மக்களுக்கு என்ன திட்டம் உள்ளது என்பதனையும் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களாவது பகிரங்கப்படுத்த வேண்டும்.

இங்கு ஒரு சமூகத்தின் நலன் என்று கூறி எமது சமூகத்தை அழிப்பதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. என அவர் தெரிவித்தார்.

# சூத்திரம் மூலம் இஸட்புள்ளி தயாரிக்கும் பணி ஆரம்பம்

(கொழும்பு)

க.பொ.த. உயர்தரப் பரீட்சை பழைய, புதிய பாடத்திட்டங்களின் பிரகாரம் நடத்தப்பட்டது. அதனால் இஸட் புள்ளியைத் தயாரிப்பதில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது. அதனை நிவர்த்திக்கும் வகையில் புதிய சூத்திரத்தின மூலம் இஸட் புள்ளி தயாரிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது என கல்வியமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று ஜனநாயக தேசியக் கூட்டணியின் எம்.பி.யான அனுரகுமார திஸாநாயக்க உயர்தர பரீட்சைப் பெறுபேறுகள் காலதாமதமாவதற்குரிய காரணங்கள் என்ன என்று வினவினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் பந்துல குணவர்தன, உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் வாழ்க்கையில் விளையாட இயலாது. 3 இலட்சம் பரீட்சார்த்திகளின் இஸட் புள்ளி தயாரிக்கும் பணி முன்னெடுக்கப்படுகின்றது. அடுத்த வாரமளவில் பெறுபேறு வெளியிடப்படும் என்றார்.

# 30 ஆயிரம் சிறுவர்களுக்கு நரம்புசார் பிரச்சினைகள்

பல்வேறு காரணங்களால் நாட்டிலுள்ள சுமார் 30 ஆயிரம் சிறுவர்கள் நரம்பு சார்ந்த பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார பிரிவு தெரிவித்துள்ளது. அவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு புதிய முறைமையொன்றை நாட்டில் முதற்தடவையாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக கொழும்பு சீமாட்டி ரிச்வே சிறுவர் வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் ரத்னசிறி ஹேவகே தெரிவித்தார்.

இதற்கமைய நரம்புசார் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக விசேடமாக நிர்மாணிக்கப்பட்ட வெளியக மைதானமொன்று திறந்துவைக்கப்படவுள்ளது.

வெளிநாட்டு அமைப்பொன்றின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்படும் இந்த விசேட விளையாட்டு மைதானத்திற்காக 20 இலட்சம் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது. அவ்வாறான பிரச்சினைகளில் இருந்து சிறுவர்களைப் பாதுகாக்க முடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

# பிரசவகால தாய் மரணம் வீழ்ச்சியெனத் தகவல்

நாட்டில் பிரசவத்தின்போது இடம்பெறும் தாய் மரண வீதம் தொடர்ந்து வீழ்ச்சியடைந்துள்ளதாக தரவுகள் குறிப்பிடுகின்றன. கடந்த வருடம் 31.8 வீதமாக காணப்பட்ட இந்தப் பெறுமதியில் தற்போது குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் இந்தப் பெறுமானத்தில் வீழ்ச்சி காணப்படுவதாக குடும்ப சுகாதார பணியகத்தின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி தீப்தி பெரேரா தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் தற்போது நாட்டில் பதிவாகாத பிரசவத்தின் போதான தாய் மரணங்கள் இடம்பெறுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். கர்ப்ப காலம் மற்றும் பிரசவம் இடம்பெற்ற 6 மாத காலங்களிற்குள் இடம்பெறும் மரணங்கள் இதில் உள்ளடங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனால் அவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் தமது பணியகத்திற்கு அறிவிக்குமாறு அவர் பொதுமக்களிடம் வலியுறுத்தியுள்ளார். எனவே அவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் 0112692745 என்ற தொலைபேசி மற்றும் தொலைநகல் இலக்கங்களுக்கு அறிவிக்க முடியுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## உரவிநியோகம்

வேலணை, புங்குடுதீவு கமநலசேவைகளுக்கு உட்பட்ட நெற்செய்கையாளருக்கான உரமானியம் இம்மாதம் 24 ஆம் திகதியுடன் நிறுத்தப்பட உள்ளது. உரமாணியத்தைப் பெறாது இருக்கும் விவசாயிகள் குறித்த திகதிக்கு முன் பெற்றுக்கொள்ளுமாறு வேலணை, புங்குடுதீவு பெரும்போக உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

# கொலைச் சந்தேகநபர் பிணையில் விடுவிப்பு

(திருநெல்வேலி)

கடந்த ஆறு மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இளவாலை கொலை வழக்கின் சந்தேகநபரான இளைஞரொருவர் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தினால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இளவாலையில் விக்டர் அன்ரன் சேவியர் என்பவரின் மகள் கொன்செலா மீது அமில்தை வீசி அவருக்கு மரணத்தை விளைவித்ததாக இவர் மீது இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியினால் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. மல்லாகம் நீதவானின் உத்தரவின் பேரில் இவர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இளவாலை போயிட்டியைச் சேர்ந்த கண்ணன் ரகுராமன் (வயது - 21) என்னும் இச்சந்தேக நபரின் சார்பில் அவரது தாயார் கண்ணன விஜி என்பவர் சட்டத்தரணி ஷர்மினி விக்கினேஸ்வரன் ஊடாக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் பிணை மனு தாக்கல் செய்திருந்தார்.

விண்ணப்பம் தொடர்பான விசாரணையில் மனுதாரர் சார்பில் சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா ஆஜரானார். எதிர் மனுதாரர்களான இளவாலைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் சட்டமா அதிபர் சார்பில் அரச சட்டவாதி வி.திருக்குமரன் ஆஜரானார். இரு தரப்பு வாதங்களையடுத்து தலா ஒன்றரை இலட்சம் ரூபாவுக்குப் பொறுப்பாக இரண்டு பேர் ஆட்பிணையிலும் இருபத்தையாயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி எஸ்.பரமராஜா சந்தேகநபருக்கு பிணை அனுமதி வழங்கி உத்தரவு பிறப்பித்தார். (137)

# நாடாளுமன்ற கௌரவத்தை பாதுகாக்க குழு அமைப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றின் கௌரவத்தையும் சம்பிரதாயங்களையும் பாதுகாக்கும் வகையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது நேற்று நாடாளுமன்றம் கூடிய வேளையில் பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

சபாநாயகர் சமல் ராஜபக்ஷவின் உத்தரவிற்கு அமையவே இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இக்குழுவின் தலைவராக அமைச்சர் டி.யூ.குணசேகர நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் அமைச்சர்களான பி.தயாரத்ன, அனுர பிரியதர்ஷன யாப்பா, ரவூப் ஹக்கீம் ஆகியோருடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான கரு ஜயசூரிய, விஜயதாச ராஜபக்ஷ, இரா. சம்பந்தன் ஆகியோரும் உள்ளடக்கப்பட்டுள்ளனர். கடந்த நவம்பர் 21 ஆம் திகதி ஜனாதிபதி வரவு - செலவு திட்டத்தை சமர்ப்பித்து உரையாற்றுகையில் சபையில் ஏற்பட்ட கூச்சல் குழப்பம் காரணமாகவே இக்குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# மக்கள் போராட்ட அமைப்பின் வாகனம் மீது தாக்குதல்

மக்கள் போராட்ட இயக்கத்தின் பிரதிநிதிகளின் வாகனம் இனம தெரியாத மோட்டார் சைக்கிளில் வந்த நபர்களினால் யாழ்ப்பாணத்தில் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளதாக மக்கள் போராட்ட அமைப்பு தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அஜித்குமார தெரிவித்துள்ளார்.

தாங்கள் யாழ். பஸ் நிலையத்தில் போராட்டத்தை முடித்துக்கொண்டு தமது போராட்டம் தொடர்பாக உள்ளூர் ஊடகங்களுக்கு விளக்கி கூறச்சென்ற வேளையிலேயே யாழ். கஸ்தூரியார் வீதியில் வைத்து தமது வாகனம் தாக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இத் தாக்குதலின் காரணமாக வாகனத்தின் கண்ணாடிகள் உடைக்கப்பட்டுள்ளதாகவும் இதன் போது எவருக்கும் காயம் ஏற்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# 11 ஆயிரத்து 812 புலிகள் இறுதிப் போரில் மரணம்

(கொழும்பு)

வன்னியில் இடம்பெற்ற இறுதிப் போரில் 11,812 புலிகள் மரணித்தனர் என தமது பூரண விசாரணையில் தெரியவந்துள்ளதாக நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2006 ஜுலை முதல் 2009 மே வரையான போர் முடிவுற்ற காலத்தில் படையினருக்கும் புலிகளுக்கும் ஏற்பட்ட இழப்புகள் குறித்தும் ஆணைக்குழு அறிக்கையிட்டுள்ளது.

இதன்படி 22,247 பேரை இந்தக் காலப்பகுதியில் புலிகள் இழந்துள்ளதாகவும், இவர்களில் 11,812 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.


படைத்தரப்பில் தரப்பில் 5556 பேர் கொல்லப்பட்டனர் என்றும், போரின் போது 169 படையினர் காணாற்போனதாகவும், 28,414 படையினர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலிகளின் சீருடைகளை வைத்தும், கழுத்துப்பட்டி மூலமும் மேலும், புலிகளின் தகவல் தொடர்புகளை இடைமறித்தும் இதனை உறுதி செய்ததாக பாதுகாப்பு அமைச்சு நல்லிணக்க ஆணைக்குழுவிடம் தெரிவித்துள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நத்தார் ஒளிவிழா

கரைச்சிப் பிரதேச செயலகத்தின் நத்தார் ஒளிவிழா இன்று பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது. கிளிநொச்சி மலையாளபுரம், திருவள்ளுவர் நகர் பாலர் பாடசாலையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வு கரைச்சிப் பிரதேச செயலர் கோ. நாகேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் மெதடிஸ் திருச்சபையின் மாற்றுத்திறன் பணியக நிறைவேற்று இயக்குனர் வணபிதா எஸ்.எஸ்.ஞானராஜா ஆகியோர் பங்குகொள்கின்றனர்.(29)

# வேலணைப் பிரதேச செயலகத்தில் சிறப்பாக நடைபெற்ற ஒளிவிழா



(தீவகம்)

வேல்ணைப் பிரதேச செயலகத்தில் ஒளிவிழா நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. பிரதேச செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வுக்கு வேலணைப் பிரதேச செயலக நலன்புரிச் சங்கத் தலைவர் ப.கஜேந்திரன் தலைமை தாங்கினார்.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக அருட்பணியாளர் சி.லியோ ஆம்ஸ்ரோங் அடிகளாரும், சிறப்பு விருந்தினராக அருட்பணியாளர் எப்.குரூஸ் அடிகளாரும் கலந்துகொண்டனர். இதில் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (85)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 டிசம்பர் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.